# கவி உள்ளம்



மண்டூர்க் கவிஞர்

மு. சோமசுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி உள்ளம்

ஆக்கியோன் :

மண்டூர்க் கவிஞர்

**மு. சோமசுந்தரம்பிள்ளை**

(ஓய்வுபெற்ற அதிபர்)

வெளியீடு :

**மண்டூர்க் கவிஞர் மு. சோமசுந்தரம்பிள்ளை
நூல் வெளியீட்டுக் குழு**

மண்டூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் : **கவி உள்ளம்**

ஆசிரியர் : மண்டூர்க் கவிஞர்
மு. சோமசுந்தரம்பிள்ளை.

முதற் பதிப்பு: 19-02-1993.

வெளியீடு : மண்டூர்க் கவிஞர் மு. சோமசுந்தரம்பிள்ளை
நூல் வெளியீட்டுக் குழு, மண்டூர்.

உரிமை : ஆசிரியருக்கே.

ஓவியம் : க. ச. பவான், அமிர்தகழி, மட்டக்களப்பு.

அச்சுப் பதிவு : சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம்,
மட்டக்களப்பு.

விலை : ரூபா 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு ஸ்ரீ இராமக்கிருஷ்ண மிஷன் தலைவர்
ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ அவர்களின்

# ஆசியுரை

மண்டூர் மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் நாடறிந்த நல்ல கவிஞர்; திருவருளும் குருவருளும் வாய்க்கப்பெற்றவர். தமிழ்மொழி வளர்ச்சியிற் கொண்ட குன்றாத ஈடுபாடு காரணமாக, இயற்கையாயமைந்த புலமையைத் தமது விடாமுயற்சியால் மேலும் வளர்த்துக்கொண்டிருப்பவர். அவர் வெளியிட்டுள்ள பக்திப்பனுவல்களும், பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ள கவிதைகளும் அவரது புலமையை நாடெங்கும் பரப்பியுள்ளன.

தமது மாணவப் பருவந் தொடக்கம் இன்றுவரை ஸ்ரீ இராமச்கிருஷ்ண மிஷனுடன் அவருக்குள்ள தொடர்பு மேலானது. மிஷனைச் சேர்ந்த சாதுக்கள்மீது அயராத பக்திகொண்ட கவிஞரவர்கள் சுவாமி விபுலானந்தருடைய நூற்றாண்டு விழாக்காலத்தில் அவர்மீது யாத்து வெளியிட்ட கவிதைகள் பிரசித்தமானவை. அவ்வாறே அடிகளாரின் அடிச்சுவட்டில் தமிழ்ப் பணியாற்றிப் பெரும்புகழ் கொண்ட புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களைத் தம் ஆதர்ஸ முன்னோடியாகக் கொண்டிருந்தார் என்பதும் கிழக்கிலங்கையின் புகழ்பூத்த ஒரு கவிஞர் பரம்பரையை நமக்கு ஞாபகமூட்டுவதாய் உள்ளது.

கவிஞர் தமது எழுபத்தோராவது வயதிலும் தமிழ்ப் பணியாற்றிக்கொண்டிருப்பதைக் காணும்போது மனநிறைவு ஏற்படுகிறது. ''கவி உள்ளம்'' எனும் இந் நூல், அதன் பெயருக்கேற்ப, அவரின் கவியுள்ளத்தைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகவே விளங்குகின்றது.

'உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது' எனும் அமரத்துவம் வாய்ந்த கவிதை வரி விபுலானந்த அடிகளாரின் கவியுள்ளத்தைக் காட்டி நிற்பதைப்போல, இந்நூலிற் காணப்படும் கவியடிகளிற் பல, கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை அவர்களின் கவியுள்ளத்தைக் காட்டுவனவாய் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

மண்டூர் முருகனின் திருவருளால் கவிஞர் மேலும் பல்லாண்டு வாழ்ந்திருந்து இத்தகைய பணிகளின்மூலம் தமிழன்னைக்கு கவிதாஞ்சலி செலுத்திக்கொண்டிருக்க வேண்டுமென இறையருளை வேண்டுகின்றேன்.

சுவாமி ஜீவனானந்த.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

1. கற்றுயர் பெரியார் தம்மைக்
கலைஞரைக் குரவர் தம்மை
உற்றுயர் புலவ ரோடு
ஓங்குமெய்ஞ் ஞானி தம்மைப்
பெற்றவான் செல்வ மென்னப்
பேணிஎந் நாளும் போற்றல்
நற்றவப் பேறே என்று
நாம்உளங் கொள்ளல் நன்றே.

2. அன்புசார் நெறியில் வாழ்ந்து
அறநெறிக் குய்க்கும் மேலாம்
பண்புடை யார்தம் சேவை
பகர்ந்திடல் அரிய தன்றே
இன்பொடும் ஈ துணர்ந்த
எம்தமிழ்க் கவிஞர் சோம
சுந்தரம் பிள்ளை தொண்டு
சொல்வதற் கெளிதோ அம்மா!

3. பார்புகழ் சுந்தா னந்த
பாரதி விபுலா நந்தர்
பேர்பெறு பெரிய தம்பிப்
புலவர்மா மணியாம் மேலோர்
நேரிலா தாற்றி ஈந்த
நிறைபணி யாவும் ஓர்ந்து
பேர்பெறு 'கவிதை உள்ளம்'
பிறங்கிடச் செய்த தீரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. செந்தமிழ்க் கடலி லாழ்ந்து
தீந்தமிழ்த் தேன் நுகர்ந்தோன்
சிந்தனை யாளன் செஞ்சொற்
கவிஞனாய்த் தில்லை மண்டூர்க்
கந்தனை வந்தித் தேத்திக்
கவிஉள்ளம் படைத் துயர்ந்து
தந்தனன் முருக மாலை
தன்முதற் படைப்ப தாக.

5. சைவமுந் தமிழும் போற்றித்
தம்மிரு விழியாக் கொண்டோன்
உய்வழி ஈதே என்று
உணர்ந் துயர் கவிஞராவார்
வையக வாழ்வில் என்றும்
மக்களுக் கறிவை யூட்டும்
தெய்வநூல் பல படைத்துச்
சிறந்துபல் லாண்டு வாழ்க!

**பண்டிதர், சைவமாமணி**
**வி. விசுவலிங்கம்**

களுவாஞ்சிக்குடி.
1-1-93.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இளம் வயதில் தமிழ்க் கலைகளை மிகவும் ஆர்வத்துடன் என் மனம் நாடியது. மண்டூரில் வடமோடி நாடகக் கூத்தாடும் பயிற்சியில் எனது உறவினர் பலர் ஈடுபட்டிருந்தனர். இதை யடுத்து தென்மோடி 'அநுருத்திர' நாடகப் பயிற்சியும் நடந்தது. இரண்டுக்கும் அண்ணாவியார் எனது மைத்துனர் திருவாளர் காசிபதியாகும். அவர் மத்தள வாத்தியத்தில் தலை சிறந்தவர். மிருதங்கத்தின் இனிமை ஒலி, தாளங்கள் அவரது மத்தள வாத்தியத்தில் ஒலித்தன. அண்ணாவியாரின் மத்தள ஒலி கேட்டவுடன் என் தந்தையாரின் கட்டுப்பாடுகளை மீறி கூத்துக்களரிக்கு இரவிற் செல்லுவேன். மத்தள வாத்தியத்திற் பயிற்சி பெற்றேன். அண்ணாவியாருக்குப் பக்க உதவியாளராக நானும் மத்தளம் வாசித்தேன். இருமோடி நாடகப் பாடல்களிலும் பயிற்சி பெற்றேன். எனக்குப் பதினாறு, பதினேழு வயதிருக்கும். ஊர்ப் பாடசாலையில் மேல் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். எனது கலையுணர்ச்சியும் படி முறையில் வளர்ச்சியடைந்தது. தமிழ் இலக்கியங்களையும் எனக்குத் தெரிந்தவாறு ஆர்வமுடன் படித்தேன்.

மண்டூர்க் கந்தசுவாமி கோயிலில் கந்தசட்டி விரத காலங்களில் திருச்செந்தூர்ப் புராண படனம் நடைபெறும். புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டித வித்துவான் வி. சீ. கந்தையா ஆகியோர் பயன் சொல்லுவதைக் கூர்ந்து கவனிப்பேன். இவர்களது உறவினால் எனது தமிழறிவு ஒருவாறு வளர்ச்சியடைந்தது. பண்டிதரவர்கள், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தார். கம்பராமாயணக் கவிநயங்களைச் சுவைப்பதற்கு இஃது உதவி ஆயிற்று.

கவிதை பாடவேண்டுமெனும் உணர்ச்சி உள்ளத்துதித்தது. இதனாற் கவிதைகள் சிலவற்றை இயற்றவுந் தொடங்கினேன்.

மண்டூர் இ. கி. மிஷன் பாடசாலைக்கு தொடக்க ஆங்கில உதவி ஆசிரியராக திரு. V. சதாசிவம் (குப்புசாமி எனவும் அழைப்பர்) கடமைபுரிந்தார். இவர்கள் வரும்போதே திருமுறைத் தோத்திரம், திருப்புகழ், பாரதி பாடல் என்பவற்றைப் பாடுவதில் திறமை வாய்ந்தவராக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் தேவாரப் பயிற்சியளித்ததோடு பாரதி பாடற் பயிற்சியும் பெறுதற்கான இசை ஞான குருவாகவும் சதாசிவம் விளங்கினார். இதன் காரணமாக, எனது **'கவி உள்ளம்'** புது மெருகுடன் பொலிவு பெற்றது. புலவர்மணி, பண்டித, வித்து வான், ஆங்கில ஆசிரியர்களது பேரன்பு எனது ''கவி உள்ளத் தின்'' வித்தாக அமைந்தது.

புலவர்மணியின் சிபார்சுடன் இலங்கை வானொலியில் முதன்முதலாகக் கவியரங்கிற் கவிதை பாடினேன். தொடர்ந்து பல கவியரங்கங்களில் கவிதை பாடினேன். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயாவின் அன்புத் தூண்டுதலும் வளர்ச் சிக்கு வழிகாட்டியது.

பாடிய கவிதைகளிற் பல கைசோர்ந்துவிட்டன. எஞ்சிய கவிதைகளை அச்சிடவேண்டுமெனக் கொண்டு மண்டூர் வெளி யீட்டுக் குழு உருப்பெற்றது. குழுவினரின் முயற்சி வீண்போக வில்லை. ''கவி உள்ளம்'' என்ற பெயரில் பல்துறைக் கவிதை கள் அடங்கியதாகக் கவிதை நூல் வெளிவருகின்றது. குழு வினரது பணியை மகிழ்ச்சியோடு வாழ்த்துகின்றேன். கவி உள் ளத்துக்கு ஆசியுரை வழங்கிய சுவாமி ஜீவனானந்தஜீயின் பேரன்பினைப் பெறற்கரிய பேறாக மதிக்கின்றேன்.

அணிந்துரை, அறிமுக உரைகளை மனமகிழ்ந்தளித்த பண்டிதர் வி. விசுவலிங்கம், வித்துவான் க. செபரெத்தினம் ஆகிய அறிவாளரை மதிப்பதோடு எனது நன்றியறிதலையும் ஒப்புவிக்கிறேன். முகப்புக்கு சித்திரந் தீட்டி உதவிய ஓவியக் கலைஞர் பவான் அவர்களுக்கும் உள்ளங்கலந்த நன்றி. நூலை அச்சுவாகனம் ஏற்ற நிதி உபகரித்த அனைவருக்கும் உளந்தழுவிய அன்புடன் நன்றி கூறுகின்றேன். இந்நூலை திருத்தமாகச் செய்த மட்டக்களப்பு சென். ஜோசப் கத்தோ லிக்க அச்சகத்தாருக்கும் நன்றி செலுத்துகின்றேன்.

**மண்டூர்க் கவிஞர்**

**மு. சோமசுந்தரம்பிள்ளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே'' என்பதற்கு ஒப்ப ஒரு கலைஞனை அவன் அமரத்துவம் அடைந்தபின் கௌரவிக்கும் யுகம் மாறி வாழும் போதே கௌரவிக்கும் யுகம் இப்போது மலர்ந்துள்ளது.

ஓர் எழுத்தாளனின் படைப்புகள் அக்காலத்தின் வரலாற்றுப் பதிவுகளாகக்கொள்ளத்தக்கன. எனவே இத்தகைய படைப்புகள் அன்று செல்லுக்கு இரையானதுபோல் இன்றும் 'செல்' லுக்கு இரையாகாமல் பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

இந்த வகையிலே ''மண்டூருக்கீரையடி மண்ணுங் கவி பாடும்'' என்று பாடி மண்டூரின் பெருமையைப் பாரறியச் செய்துவரும் மண்டூர்க் கவிஞர் மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களைக் கௌரவிக்கும் வகையில் அன்னாரின் கவிதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட நாம் இளைஞர் சிலர் விழைந்தோம்.

இந்த விழைவின் பயனாக நூல் வெளியீட்டுக் குழு ஒன்று மண்டூரில் உதயமானது. அந்தக் குழுவின் முதலாவது அறுவடையாகவே இன்று ''**கவி உள்ளம்**'' உங்கள் கைகளில் தவழ்கிறது.

மண்டூர்க் கவிஞரின் கவிதைகள் முழுவதையும் இந்த நூலின்கண் அடக்க முடியவில்லை. அவரின் ஏனைய கவிதைகளையும் நூலுருவில் வெளியிடவேண்டும் என்பதே எமது வேணவா. அதற்கு மண்டூர் முருகனின் அருளும், உங்கள் ஆதரவும் கிட்டுவதாக.

தமது கவிதைகளைத் தொகுத்துத் தந்ததுடன் வெளியிட அனுமதியும் தந்த மண்டூர்க் கவிஞர் மு. சோமசுந்தரம் பிள்ளை அவர்களுக்கு எமது உளம் நிறைந்த நன்றிகள். மேலும் ஆசியுரை வழங்கிய ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜி மகராஜ் அவர்களுக்கும், சிறப்புப்பாயிரம் வழங்கிய பண்டிதர் வி. வசுவலிங்கம் அவர்களுக்கும், நூலாசிரியரைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்பினை எழுதிய வித்துவான் க. செபரெத்தினம் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

எமது இப்பணியினை நிறைவு செய்ய ஆக்கம் தந்தார்; ஊக்கம் தந்தார்; அன்பு தந்தார்; அரவணைத்தார் அனைவருக்கும் எம் உளமார ஒரு சொல் நன்றி.

இந்நூலுக்கு அட்டைப்படம் வரைந்துதவிய ஓவியர் க. ச. பவான், அழகாக அச்சிட்டு உதவிய மட்டக்களப்பு சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகத்தினர் ஆகியோரும் எமது நன்றிக்கு உரித்தானவர்கள்.

**வெளியீட்டுக் குழு.**

மண்டூர்.
*19-2-93.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறை வணக்கம்

இறைவன் இதயப் புதையலென
எம்முள் இருக்க இங்குமங்கும்
துறைகா ணாத தோணியெனத்
துயரக் கடலில் அலைவானேன்?
முறையாம் அன்பு நெறியினிலே
முன்வந் தெம்மை ஆட்கொள்ளும்
நிறைவான் பொருளை நெக்குருகி
நேரே கண்டு தெரிவாய்நீ

## தூய்மை துலங்கத் தொழுவோம்

உள்ளந் தெளிந்த மொழியாளை
ஊறுஞ் ஞானச் சுவையாளை
வெள்ளம் போலக் கவிஞரிடம்
விரைந்து மேவும் வடிவாளைக்
கள்ள மற்ற கருத்தாளைக்
கவலை தீர்க்குந் கனியமுதைத்
துள்ளி ஓடும் இசையாளைத்
தூய்மை துலங்கத் தொழுவோமே.

## மண்டூரன்னை

கண்டுகண் டென்ன வூறுங்
கனிநிறைப் பொழில்கள் சூழக்
கண்டுகண் டமுத முண்டு
களித்தவண் டீட்டஞ் சேரத்
தண்டமி ழிசைகள் பாடித்
தாவிடுந் தன்மை காணில்
தொண்டர்கள் அன்பால் மண்டூ
ரன்னையைத் தொழுத லொக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஈழ வள நாடு"

எங்க ளன்புத் தாய் நாடு
ஈழ வள நாடு
எந்த இன மக்க ளுக்கும்
சொந்தத் தாய் நாடு.

மா வலிமா ணிக்க கங்கை
வளங் கொழிக்கும் நாடு
வய லெங்கும் பொலி பாடும்
வாரி பொங்கும் நாடு.

புத்த மதம் சைவ மதம்
யேசு மதம் ஸ்லாம்
போ திக்கும் சா தனையாற்
பகை போக்கும் நாடு.

தென்னை பலா கமுகு பனை
தீங் கரும்பு வாழை
அன்னை அன்பு மேனியினை
அலங் கரிக்கும் நாடு.

தேயி லைப்பூந் தோட்ட மெல்லாம்
செம்பொன் மட மாதர்
ஓயாது பணி புரியும்
உச்சி மலை நாடு.

செந் தமிழுஞ் சிங் களமும்
சேர்ந் துறவு கொள்ளும்
சே வைக்கோர் ஆங் கிலமும்
தோள் கொடுக்கும் நாடு.

சிகிரி யாச் சித் திரமும்
சிற்ப முதற் கலையும்
செகத் தோரைக் கவர்ந் திழுக்கும்
சீர் பூத்த நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமத் தொழிலுங் கைத் தொழிலுங்
கலைத் தொழிலுஞ் சுவைக்கும்
கவி கதைகள் நாட கத்திற்
கை தேர்ந்த நாடு.

தேடுஞ் சிவ னொளி பாதத்
தெய்வ மணி நாடு
திரு மகளுங் கலை மகளும்
சேர்ந் தோங்கும் நாடு.

மலர்ச் சோலைப் பூங் குயில்கள்
மதுர கீதம் பாட
மர கதப்பொன் மயி லாடி
மகிழ் விக்கும் நாடு.

மாங் கனித்தேன் வடிவொழுகும்
மார் பினிலே சுட்ரும்
மணி முத்து மாலை வடம்
புரண் டொளிரும் நாடு.

தாய் மடியில் தவழ்ந் தோடித்
தாவி விளை யாடும்
சலச லக்கும் அரு வியிலே
தமிழ் இனிக்கும் நாடு.

வட்ட மிட்டு வருங் கப்பல்
வாணி பத்தால் ஓங்க
வா டிக்கை நா டெல்லாம்
வர வேற்கும் நாடு.

விஞ் ஞானப் பணி யுடனே
மெய்ஞ் ஞானப் பணியும்
விரைந்து கலந் துற வாடும்
வெற்றிக் கொடி நாடு.

சா திமத இன பேதச்
சஞ் சலங்கள் தீர்க்கும்
சாந்தி சமா தானம் அன்புத்
தார் மீக நாடு.

—★—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகப் பூங்கன்னி!

சிவக்கடவுள் சுவைமடுத்துச் செவிகொடுத்துச்
சேயிழைபால் தூது செல்லும்
கவிச்சிறப்புக் கொண்டமொழி கடவுளகுங்
கவிஞரோடு கழகம் ஆய்ந்த
தவச்சிறப்பால் தழைத்தமொழி அகத்தியர்செந்
தமிழ்மரபுப் பண்ணை பூப்பப்
புவியனைத்தும் புதையலெனப் போற்றுதமிழ்க்
கற்பகப்பூங் கன்னி வாழ்க!

கட்டழகி ராசாத்தி காதல்வெறி யாலே
காலடியில் நான்கெஞ்சக் கன்னியவள்சங்கத்
தொட்டிலிலே தங்கமணிக் கட்டிலிலே மன்னர்
தொடைமீதும் முடிமீதும் துள்ளி விளையாடும்
சொட்டுசுவைச் சீமாட்டி திட்டுகளுக் கஞ்சாள்
தொட்டணைத்தால் தள்ளிவிட்டுத் தூரத்தே ஓடும்
கொரட்டுவெற்றி முரசுடையாள் கொடியுடையாள் அன்புக்
குமரிதமிழ்ப் பொற்குயிலைக் கூடும்கா ளென்றோ!

அன்புவழிச் செருக்குடையாள் அழகுதமிழ்ச்செல்வி
ஆவியவள் காதலிலே காவியங்கள் படைப்பேன்
இன்பவிருந் தூட்டுகின்றேன் எல்லோருந் துய்மின்
இனியதமிழ்க் கவியன்றோ இம்மையிலோர் இன்பம்
தொன்மையிலே சுழலுமொளிச் சூரியனைப் போன்றாள்
தோன்றியதெக் காலம்அவள் துருவுகின்றார் அறிஞர்
கன்னியவள் வயதுரைக்குங் கணக்கறியேன் தோழி
கலைபுதுக்குந் தலைவியருட் கண்மணியென் உயிரே

தமிழென்றால் 'இனிமை'யெனப் பொருள் படுங்கால்
தமிழனென்றால் இனியனெனப் பொருள் படாதோ
தமிழுலகம் அன்புலகந் தமிழகமென் றாலோ
தமிழின்பத் தேனருவி சலசலத்துப் பெருகும்
அமிழ்தமெனக் கவிமாலை அன்புடையோர் தொடுத்தார்
ஆழ்ந்தகவிச் சுவையினிலே ஆனந்தங் குமுறும்
தமிழினமே தமிழ்த்தாயின் பெருமையுனக் குரிமை
சஞ்சலங்கள் நமக்கில்லை அஞ்சுவதொன் றில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்உருகும் உளங்கனியும் ஞானக்கண் உதிக்கும்
உணர்ச்சியிலே கவிதைவெறிப் பித்தேறிச் சுழலும்
வான்சொரியும் மழைபோல மக்கள்மனத் தன்பு
வழியினிலே கோடிபயன் வாரிசொரிந் துயரும்
கூன்நிமிரும் பகைகுனிந்து கும்பிட்டுச் செல்லும்
குறைதீரும் மிடிசாகும் நிறைவாழ்வு கிடைக்கும்
தேன்சிதறுங் கவியினிலே திளைக்கின்றாள் வாணி
செவிகொடுத்துக் கேளீரோ செந்தமிழ்ச்செல் வங்காள்!

முன்னோர்கள் அன்புவழி முகிழ்த்த ஞான
முதுகதைகள் படித்துணர முயற்சித் தோமா?
அன்னோர்கள் உயிர்ப்பண்பை அன்பாற் காத்து
அறந்தழைக்கும் ஆனந்தப் பெருவாழ்வு வாழ்ந்தார்
பின்னோர்கள் அன்புவழி பிசகிக் கெட்டால்
பெறற்கரிய உடலெடுத்த பெருமை போச்சு
கன்னெஞ்சக் கயவர்க்கோ அன்பு கைக்கும்
கனிவான நெஞ்சம் அன்புக்கடலை ஒக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராமக்கிருஷ்ணாய நம

**மட்டக்களப்பிலே ஞான ஒளி பரப்பிச் சேவை மணம் வீசும்
குருமகராஜ், ஸ்ரீ இராமக்கிருஷ்ண சங்க
மங்கல மணி விழாவை வாழ்த்தும்**

# கவிதை அஞ்சலி

**(நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா)**

வாழிஉயர் ஸ்ரீராமக் கிருஷ்ணமந் திரநாமம்
ஏழைவாழ் மனைதோறும் இன்பஞ்சேர் மணிவிழா
ஏழிசைப்பொன் மீன்பாடும் எழில்மட்டக் களப்பினிலே
ஊழிதொறும் உயர்சேவை ஒளிபூத்து வாழியவே.

**(எண்சீர் ஆசிரிய விருத்தம்)**

பரஞானக் கதிர்பரப்பும் பாரதப்பொன் னாடு
பாசவினைப் பகைஇருட்கோர் பானுவெனப் பாடு
குருஞானக் குலஞ்செழிக்கக் கோதாட்டுங் கோதை
குருதேவர் ஸ்ரீராமக் கிருஷ்ணமணிக் கோயில்
பெருஞானக் கொடைபெருக்கும் பேறுமிகப் பெற்றாள்
பேரரசி சாரதா மணிஅன்ன நடையாள்
அருள்ஞானத் தாய்மடியில் அறம்வளர்க்கும் அன்னை
அகம்நெகிழ அன்புருக அஞ்சலிசெய் வோமே!

**(அறுசீர் ஆசிரிய விருத்தம்)**

அறுப தாண்டு நிறைவினிலே
ஆக்கப் பணிகள் ஆயிரமாம்
அருணன் முறுகி வெயில்கொளுத்த
அனல் பறக்குங் கானலிலே
மருவும் ராமக் கிருஷ்ண ரருள்
மாரி சொரிந்து வளம்பெருக
அருள்செய்மணப்பொன் மட்டுநகர்
அன்னை முறுவல் பூத்தனளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிட சேவை யென்னும்
மந்திர வித்தைச் சித்தால்
மாநிலத் தேழை மக்கள்
வாழ்வினை மலர்த்தும் ஞானத்
தேனினைச் சீடர்க் கெல்லாம்
திருப்பணி அமுத மாக்கும்
ஞானியாம் ராமக் கிருஷ்ண
நாதன்மெய்ப் பாதம் போற்றி!

குருதேவர் பரம கம்சர்
குருகுலக் கோயில் காக்கும்
கருணைமா கடலே கமலக்
கண்ணனாம் அண்ணன் தங்காய்
கருமுகில் வண்ணம் பூத்த
காரணி காளித் தாயே
புரந்தருள் புனித வாணி
பூங்கழல் போற்றி போற்றி!

பற்பல சமயத் தூட்டும்
பரந்தமெய்ப் பொருளைப் பாடும்
சொற்பதங் கடந்த ஞானச்
சுகஅனு பூதி யாலே
பற்றறப் பற்றும் பற்றைப்
பற்றிடும் பத்தர்க் கெல்லாம்
கொற்றவை அருள்பா லிக்கும்
குருதேவர் பாதம் போற்றி.

பள்ளிப் படிப்பை விரும்பாத
பால யோகி கதாதரனார்
உள்ளக் கமலத் தேன்வழியும்
ஊற்றாம் யோகப் பயிற்சியினால்
கொள்ளுஞ் சமயா சாரமொன்றே
குறிவைத் துயர்ந்தார் குருதேவர்
அள்ளிச் சொரியும் ஆநந்த
வெள்ளக் கடலில் ஆடாமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைகுண் டலி ஒலிக்கும்
ஆதாரம் ஆறுக் கப்பால்.
துன்னுமெய்ச் சகஸ்ரா ரத்துச்
சோதியுட் கலந்து துய்த்துத்
தன்னையே மறக்கும் யோக
சமாதியிற் சாந்தி கூடும்
மன்னனாம் ராமக் கிருஷ்ணர்
மலரடி தலைமேல் வைப்பாம்!

சீடரைச் சேறா தன்பால்
சேர்த்தணைத் துளங் கனிந்து
மூடத்தை அஞ்ஞா னத்தை
முளையிலே கிள்ளி வீசும்
பாடத்தை உபதே சித்துப்
பக்குவப் படுத்திப் போலி
வேடத்தைக் களைந் தெறிந்த
வேந்தனார் பாதம் போற்றி!

கடவுள் ஒருவர் உண்டென்றால்
கண்ணாற் காணக் காட்டுமென
விடாது கேட்டு வினாத்தொடுத்த
விவேகா னந்தச் சீடன்முன்
கடவுள் நேரே காட்சிதரக்
கருணை புரிந்த குருமகராஜ்
அடிமை நெஞ்சில் ஒருதுள்ளி
அருளைப் பெருக்க மறுப்பாரோ?

ஆரண மோதும் பார்ப்பார்
அடிவையா தருவ ருக்கும்
சேரியில் இரவிற் சேவைச்
செந்தண்மை செயலிற் காட்டும்
நாரணன் ஆண வப்பேய்
நாசம்பெற் றழியச் செய்த
பூரணன் ராமக் கிருஷ்ணர்
பொன்மல ரடிகள் போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செகத்தைக் காக்கும் அன்னையெனச்
செப்புந் தெய்வம் மாகாளி
முகத்திற் கருணை முத்துநகை
மோக னப்புன் முறுவலினால்
அகத்திற் பத்திப் பித்தேற
அன்புப் பூசை பலித்தோங்க
இகத்தில் இராமக் கிருஷ்ணரைப்போல்
ஏழைத் தெய்வம் இல்லையடா!

சிறுவர் கல்விச் சேவையிலே
செழிக்கும் ஞானப் பண்பினிலே
உறுபொன் மட்டக் களப்பிலருள்
ஒலித்துப் பாடுங் கல்லடியில்
அறுப தாண்டுச் சுழல்வட்டத்
தணிமுகம்பூத் தொளி பரப்பும்
பரம குருவாம் ஸ்ரீராமக்
கிருஷ்ண மன்றப் பணிவாழ்க!

வையகம் இனிது வாழ
வந்தவ தரித்த வாணி
கையினாற் பணிகள் செய்யுங்
கருமயோ கத்தால் தெய்வப்
பொய்கையாம் அருட்பூங் காவில்
புனிதமென் நடைப்பே ரன்னம்
செய்யசா ரதைச்சீ தேவி
சீரடிக் கன்பு செய்வாம்

கலியுகத்திற் பராசக்தி வடிவமெனக்
காட்சிதருங் கருணைச் சோதி!
பலிபீடத் தலங்காரப் பூசையினாற்
பிரமகம்சர் பரவும் சக்தி!
பலமிழந்து பரிதவிக்கும் பாமரர்க்கோர்
ஆதாரப் பரிவுத் தாயே!
குலஞ்சாதி மதமறியாக் குணக்குன்றே
கோமளப்பூங் கொடியே போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிலாக் கன்று போலத்
 தவித்தழுங் குழந்தை கட்கும்
வாயிலாப் பிராணி போல
 வறுமையால் வாடு வோர்க்கும்
கோயிலாய் உள்ளந் தோறுங்
 குடிபுகுந் தருள்பா லிக்கும்
தாயினும் இனிய சேவைச்
 சாரதை மலர்த்தாள் போற்றி!

மற்றவர் பிழைநோக் காத
 மனப்பண்பை இரந்து கேட்கும்
பற்றறாப் பத்தி பூண்டு
 பரமனைப் பணிந்த மாதா
சுற்றத்தார்க் குதவும் போதும்
 துன்பமே பரிசாய்ப் பெற்ற
அற்புதப் பிள்ளாய்! கிள்ளாய்!
 அடைக்கலம் அடியேன் தஞ்சம்

உலகவிஞ் ஞானி கட்கும்
 உண்மைமெய்ஞ் ஞானி கட்கும்
அளவில்பே ரறிவுக் கப்பால்
 ஆதார மையம் நீயே
கலைமகள் கடாட்சம் பூத்த
 கற்பக வல்லி! செல்வி!
சிலையிலுங் கண்ணீர் சிந்திச்
 சிறுவரைப் பேணுந் தாயே!

காயாம்பூ வண்ண மேனிக்
 கண்ணனோர் கரும யோகி
ஓயாமற் பார தப்போர்
 உணர்ச்சியைக் கூட்டி மூட்டித்
தாயாகித் தாங்குந் தரும
 தேவதை தழைக்கச் செய்தோன்
சாயாத கீதா சாரச்
 சாரதைச் சேவை வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையி லுயர்ந்த சேவை
ஸ்ரீராமக் கிருஷ்ண சேவை
தேவிசா ரதைமா தாவின்
திருப்பணிக் கோயில் கூப்பத்
தேவரும் நெருங்கச் சற்றுச்
செகத்துளோர் வழிவிட் டேத்தும்
ஜீவனா னந்தன் சேவைச்
சாதனை செழிக்க மாதோ!

நாட்டில் ஏழைச் சிறுவரைப்போல்
நாரா யணனே நடிக்கின்றான்
வீட்டிற் பிச்சை கேட்கின்றான்
வித்தைக் கண்ணன் விளையாட்டாம்
ஊட்டும் உணவோ டுறையு ளுடை
உதவும் ராமக் கிருஷ்ணமன்றம்
காட்டும் மணிவி ழாக்கண்ணன்
கானக் குழலின் இனிமையடா!

வேத வியாசன் எனப்பாடும்
விபுலா னந்தன் சேவைக்கோர்
சாது நடரா ஜானந்தன்
சக்தி ஜீவா னானந்தன்
ஓதும் ராமக் கிருஷ்ணரருள்
ஊற்றாம் ஞான பரம்பரைக்கோர்
சோதி மட்டக் களப்பன்னைத்
தொண்டர் மரபு வாழிமன்னோ!

சச்சிதா னந்த வாழ்விற்
சமரசத் தேன் சொரிந்த
அச்சுதன் ராமக் கிருஷ்ணர்
அவதார மகிமை கண்டீர்
வச்சிர மேனி ஞான
வாரிதி விவேகா னந்தன்
அச்சமில் லாத சீடன்
ஆங்கில வாணி வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிதிரைக் கடலுக் கப்பால்
எழில்நகர் சிக்காக் கோவில்
குருதேவர் அருள் பொழிந்து
குமுறிடும் விவேகா னந்தன்
கருணையாம் இந்து வேதக்
கடல்மடை வெள்ளம் பாய்ந்து
உரிமைகொள் சமய மெங்கும்
ஊடறுத் துயர்ந்த தம்மா!

சிவா னந்தத் தேன்சொரிந்து
செழித்திடும் பள்ளி ஓர்பால்
பவானிவந் தருள்பா லிக்கும்
பாவையர் பள்ளி ஓர்பால்
நவயுக நடைவிஞ் ஞானம்
நற்கவின் கலைகள் பூக்கும்
தவக்கனல் ராமக் கிருஷ்ணத்
தத்துவப் பண்ணை வாழ்க!

கல்வி அடக்கங் காருண்யம்
கருத்தைத் திருத்துங் காவியங்கள்
நல்லோர் பண்பு நடைமுறைகள்
நாடும் சமூக முன்னேற்றம்
வெல்லும் ஆன்மச் சுடர்விளக்கம்
வீட்டுக் குயிராம் சுகாதாரம்
பல்விஞ் ஞானப் பணிதூண்டும்
பயிற்சிப் பள்ளி வாழியவே!

ஊனக்கண் காட்சிக் கெட்டா
உள்ளனு பூதி யாகும்
ஞானக்கண் காட்சி யாலே
நன்னெறி மார்க்கம் ஓங்கக்
கூனெலாம் நிமிர்த்தும் ஞானக்
குறுநகை முறுவல் பூக்கும்
வாணித்தாய் கண்கா ணிக்கும்
மாணவர் இல்லம் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கும் மேற்குங் கைகுலுக்கும்
கேண்மைச் செல்வந் தழைத்தோங்க
அழைக்கும் ஆண்மைக் குரலொலித்தான்
அமெரிக்காவில் ஆனந்தன்
முழக்க மனைத்தும் ஸ்ரீராமக்
கிருஷ்ணர் உணர்ச்சி வேகமடா
எழுமின்! விழிமின்!! எனக்கூவும்
எழுச்சிக் குரலுக் கிணையுண்டோ?

இலங் கைக்கோர் துருவவெள்ளி
இமைத்திடும் யாழ்ப்பா ணத்தும்
செழுந்தமிழ்ப் பண் இனிக்கும்
திருக்கோண மலை யகத்தும்
தலைநகர் கொழும்பைச் சார்ந்தும்
தாய்மட்டக் களப்பூர் தோறும்
நிலைகொள்சீ ராமக் கிருஷ்ண
நிறைபணி அணிநின் றோங்க!

விபுலா னந்த யாழிசைக்க
வீணைக் குயில்கள் இசைபாட
குமரித் தமிழும் ஆங்கிலமும்
கொஞ்சி மகிழ்ந்து குதூகலிக்க
சிவனாம் விவேகா னந்தனொடு
சேவைச் சீடர் பவனிவரும்
அமைதிச் சிறப்பாம் ஜீவனா
னந்தன் ஆக்கப் பணிவாழ்க!

சிந்தையி லுணர்ச்சி ஓங்க
ஸ்ரீராமக் கிருஷ்ண சேவைச்
சந்ததி தலை நிமிர்ந்து
சமரசப் பணிகள் ஆற்ற
கந்தனைச் சிவனை ஞானக்
கண்ணனைக் கருத்தில் எண்ணிச்
சுந்தரக் கொடைக் கரங்கள்
தோள்கொடுத் துதவ மாதோ!

—★—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுக்கோர் ஞானதீபம்!

இக்கவிதை பகவான் பிறந்த தினமான 23-11-83ம் நாள் தினபதியில் வெளிவந்தது.

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தி - மண்டூர்
ஓராண்டு நிறைவு விழாவின்போது
பாடப்பெற்ற

## சமர்ப்பண அன்புக் கவிதைமாலை

சகல லோக குருமுருகன்
புலமைத் தலைமை மண்டூரில்
பகவான் சத்ய சாயிநெறிப்
பத்தர் பணிஓர் ஆண்டுவிழாச்
சுகங்கொள் நிறைவுச் சுடருதயச்
சோதி முகங்கண் டுலகமெலாம்
மகிழ்ந்து போற்றும் சாயிஅன்பு
மாரி பொழிய வாழ்த்துதுமே.

கண்ணன் வந் தவதரித்தான்
கலியுகக் கொடுமை நீங்கி
மண்ணில் வாழ் மக்கட்கெல்லாம்
வாழ்க்கையில் அமைதி ஓங்கப்
பண்ணினார் சத்ய சாயி
பகவான் நாம் செய்த பாக்யம்
புண்ணிய மூர்த்தி கீர்த்திப்
பொற்பணிக் கொடிக்கோர் வாழ்த்து.

பாரினைச் சமல் செய் நாடு
பாரதப் பொன்னா டென்னக்
காரிய உறுதி மிக்க
கர்த்தனாம் சத்ய சாயி
சீரிய பஜனா மிர்தச்
செழுங்கனி பிழிந்த சாறாம்
தேறலைப் பருக வாழ்வில்
ஆறுதல் செழிக்கும் மாதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மிகக் கனலைத் தூண்டும்
அன்னைகுண் டலி ஒலித்துத்
தேன்சுவைத் தித்திப் பூட்டும்
திருஅருட் சக்தி மூட்டும்
வான்மதி அமிர்த தாரை
கோடிசந் திரப்பிர காசம்
ஞானவே ணியனாம் சாயி
நாயக சரணம் போற்றி.

நமக்குச் சாயி தெய்வமென
நம்பித் தொழுவோர் கவலையெலாம்
தமக்கு நேர்ந்த தெனத் தாங்கித்
தருணத் துதவுந் தம்பிரானாம்
அமைக்கும் வாழ்வின் அமைதிக்கோர்
அடியார் மிடிதீர்த் தருள்புரிந்து
சுமக்குந் தயாளன் கருணையிலோர்
துரும்புங் கரும்புச் சுவைதட்டும்

முக்காலச் செய்தி ஓர்ந்த
முழுமதி யாளன் புண்யன்
மக்கள் நேசய் நொடிகள் தீர்த்து
வல்லமை கொடுக்குங் கண்யன்
பக்கத்தே நினைத்த தெல்லாம்
பளிச்செனப் படைக்குஞ் சித்தன்
தக்கதோர் புட்ட பத்தித்
தவப்பயன் பலித்த தென்கோ!

வைத்திய சாலை ஓர்பால்
மாணவர் பள்ளி ஓர்பால்
வித்தகர் மேடை ஓர்பால்
வேள்விகள் நடக்கும் ஓர்பால்
சத்திரச் சாலை ஓர்பால்
சாயிபுன் முறுவல் ஓர்பால்
சித்திரப் பிரசாந் திக்கோர்
சிறப்பெலாம் சேவை மூச்சாம்

தாய்மை அன்பின் தலைஅன்பு
தழைக்கும் பகவான் கொடைக்கரங்கள்
ஆயும் உலக விஞ்ஞான
அறிஞர் மூளைக் கெட்டாதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் நமக்குப் பிரசாந்திக்
குருமுகூர்த்தங் கை கூப்பிச்
சாயி சாயி என் றுருகச்
சஞ்ச லப்பேய் பறந்தோடும்

உலகப் பெரியோர் கூடுவதும்
உள்ளங் கனிந்து பாடுவதும்
கலகக் கள்வர் நடைதிருந்திக்
கடவுள் பக்தி காட்டுவதும்
சிலைபொன் முத்து மணிமாலை
சேரும் சித்தி சிறப்பதுவும்
பலவிஞ் ஞானப் படைப்புகளாம்
பகவான் சாயி அற்புதங்கள்.

பற்றற்றுப் பயன் நோக்காது
பணிசெய்தல் கருமயோகம்
பற்றற்றுப் பணி செய்யாது
பணி செய்தல் ஞான யோகம்
பற்றற்றுப் பரமன் பாதம்
பற்றுதல் பத்தி யோகம்
அற்புதம் அனைத்தும் சாயி
கையினில் அடக்கம் மாதோ!

எளியோரும் விரும்பிக் கேட்கும்
இனியநல் உபதே சங்கள்
வழியினை அறிந்து செல்லும்
வாழ்வுக்கோர் ஞான தீபம்
உழுவலன் புக்கோர் உள்ளக்
கடலமு தூற் றெடுக்கும்
அழிவிலாச் செல்வம் சாயி
அருட்சுவை நுகர்ந்து கொண்மின்!

சாயி பத்தர் வீட்டினிலே
சகல தெய்வப் பலன்பலிக்கும்
நோயும் பகையும் அச்சமுடன்
நொடிப்போ த்ளவும் நுழையாதாம்
வாயில் காக்கும் வாள்வீர
வாகு தேவன் காவல்கண்டீர்
காய்தல் உவத்தல் கடுகளவுங்
கடவுட் சாயிக் கில்லையடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி சமயப் பிரிவினைப்போர்ச்
சனியன் மூட்டும் இனவெறியால்
மோதி மக்கள் குலமழிந்து
முறைசெய் நீதி கெட்டதந்தோ!
சோத னைப்பட் டரக்கர்கொடுஞ்
சூதாட் டத்தில் தோல்விகண்டார்
போத னைக்கோர் சாயிசம
ரசத்தேன் சுவைக்கும் சாதனைபார்.

சிறந்தவெண் ணிலவு கொஞ்சும்
சித்திரா வதிதீ ரத்தில்
நிறைந்திடும் அடியார்க் காக
நேர்ந்தசித் திகள் அனந்தம்
பிறந்ததோர் மனித வாழ்வில்
பிரசாந்தி நிலையம் பார்க்க
குறைந்ததோர் தரமென் றாலுங்
கொடுத்துவைத் தனையோ? நெஞ்சே!

ஓடும் ஞானப் பேராறு
ஓம் என் றொலிக்கும் மோனமலை
கூடும் தியான யோகியரும்
குமுறும் அன்புப் பத்தர்களும்
தேடும் ஆண்டிச் சித்தர்களும்
தேக்கும் சிவானந் தம்பருகப்
பாடும் பகவான் பஜனையிலோர்
பால்வெண் ணீறு சொரியுதடா!

பகவான் ஸ்ரீசத் யசாயி
பாபா மண்டூர்ச் சமித்தியிலே
புகு முகத்தோர் ஆண்டுவிழா
பூத்துப் பத்தி மணம்வீசும்
அகமும் புறமும் ஆனந்தத்
தேனாம் அன்புத் தமிழ்மாலை
உகந்து சூட்டச் சாயிஅருள்
உலக மெங்கும் ஓங்குகவே!

—★—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புத்தர் பெருமான்"

அரசச் செல்வம் நிறைந்திருந்தும்
அகத்தில் அமைதி காணாமற்
சரிந்த வாழ்விற் பயனென்ன
சவந்தான் போவ தெனவுரைத்தார்
முறிந்த வாழ்வில் நோய் வறுமை
முட்டி மோத நொறுக்குண்டு
செறிந்த துன்பந் தீர்வதெப்போ?
சிந்தித் தறிந்தான் சித்தார்த்தன்

உலகைக் காக்க வேண்டுமென
உறுதி பெற்ற உள்ளத்தில்
பலதும் பத்தும் படைபடையாய்ப்
பகைக்கும் இருளைக் கடிந்தெறிந்து
நிலைபெற் றுயர்ந்த நள்ளிரவில்
நிறைவெண் ணிலவுப் பூரணையில்
முளையை வெறுத்து முளைவெறுத்து
முற்றுந் துறந்து வெளிப்போந்தார்.

அங்கு மிங்கும் தானலைந்தும்
அரிய துன்பந் தானடைந்தும்
தங்கும் ஞான வாழ்க்கையிலோர்
தவத்தி லிருந்து தியானத்தால்
பொங்கும் பேரா னந்தத்திற்
பொலிந்து உள்ளம் பூரித்துச்
சங்கம் மதிக்கும் தார்மீகத்
தலைமைப் புத்தர் தான்சிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட ஞானக் காட்சியிலே
    கவலை முழுதும் பறந்ததடா
விண்ட ஞானத் தெளிவினிலே
    வேதப் பொருள்கள் விரிந்ததடா
பண்டைச் சித்தர் பண்பெல்லாம்
    பரந்து மலராய் மலர்ந்ததடா
உண்டுண் டுறங்கி வாழாமல்
    ஒப்பில் புத்தர் ஒளிபெற்றார்.

மனத்தை அடக்கும் வழிசொன்னார்
    வாழ்வும் இனிக்கும் வகைசொன்னார்
சினத்தை அடக்கிச் சீலத்தைச்
    செழிக்கும் வழியிற் சிறப்பூட்டி
வனத்துத் துறவில் நில்லாது
    மக்கள் வாழச் சேவைசெய்தார்
அனைத்தும் புத்தர் பெருமானின்
    அகிம்சை நெறியின் அற்புதம்பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிலுவையின் சிறப்புக் காணீர்"

சிலுவையைக் கண்டேன் இயேசு
சிந்திய குருதி பொங்கி
தலமெலாஞ் செருக்கிச் சீறும்
சமர்க்களப் பலியால் மாண்ட
குலமெலாம் எழுந்தன் பாற்கை
கூப்பியே தொழுது போற்றி
வலம்வரக் கருணை வள்ளல்
வருகவென் றணைத்துக் கொண்டார்.

இதயத்தில் ஊற் றெடுத்து
இவ்வுல கெல்லாம் பாய்ந்து
உதயசூ ரியன் ஒளிபோல்
ஓங்கும்பே ரின்ப வெள்ளப்
புதையல்பெற் றுயர்ந்தான் மனிதன்
பூத்தது புனித வாழ்வு
சிதைவிலாத் தியாக மூர்த்தி
சிலுவையின் சிறப்புக் காணீர்!

கர்த்தன் யேசு பெருமானைக்
கருதி உருகிக் கனிந்தஉள்ளப்
பத்தன் எதற்கும் அஞ்சாது
பரமன் அருகே துணிந்துநிற்பான்
சுத்த ஞானச் சுருதியிசை
சுரக்கும் செபத்தால் சுகம் விளைந்து
மெத்தப் பலிக்கும் மேதினியில்
வேறெப் பொருளும் வேண்டாங்காண்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைக்கும் பொருளைச் சுவையாது
சுவையாப் பொருளைச் சொந்தமெனக்
குவிக்கும் மாயை வாழ்க்கையிலே
கொஞ்சுஞ் சுகத்தை வெறுத்தொதுக்கிச்
செபிக்குஞ் சிலுவைச் சின்னத்தில்
செழிக்குஞ் சிந்தைக் கழிவில்லை
எவர்க்கும் யேசு பெருமானார்
இரங்கிக் காக்கும் எனநம்பு!

கவலை வேண்டாங் கலங்காதே
கண்முன் வந்து கைகொடுப்பார்
அவரின் பெருமை யாரறிவார்
அறிந்தார் எல்லாம் அறிந்தாராம்
தவப்பொன் இயேசு முன்னிற்கச்
சஞ்சலங்கள் ஒன்றும் இல்லை
எவர்க்கும் அன்புச் சொத்தாகும்
இயேசுத் தெய்வம் எனநம்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பூமி பூரிப்ப தெந்நாளோ!"

காந்திமகான் கமலமுகங் கனாவிற் கண்டேன்
கண்ணருவி சலசலத்துப் பாய்ந்த தந்தோ!
இந்தியநந் நாட்டினிலே அமைதி யின்றேல்
எந்நாடும் அமையினை இழக்கு மென்றார்
முந்துதவத் தோர் சித்தி முழுதும் வாய்த்த
முத்தர் சித்தர் வாழ்வெல்லாம் பொய்த்துப்போச்சா?
சந்ததமும் அகிம்சைநெறி தழைத்துப் பூத்த
சன்மார்க்க நெறியிழைத்தால் வாழ்வே தென்றார்

ஒழுக்கத்தால் தலைநிமிர்ந்த உயர்ந்த நாட்டில்
ஒழுக்கத்தில் தவறிழைத்தால் உண்மை எங்கே?
இழுக்கத்தால் மக்களெல்லாம் இதயஞ் சோர்ந்தார்
ஏழைமுகம் பூப்பதெங்ஙன், ஏற்ற மெங்ஙன்
வழுக்கியதேர் வழமுழை மாறா விட்டால்
மாநிலந்தான் பாரதத்தைப் பழித் துரைக்கும்
அழுக்குள்ள சாக்கடையில் குடியிருந்தால்.
அறிவு தழைத்தோங்கிடுமா? என்று கேட்டார்.

பற்பல கொடுமை எல்லாம் பாரத நாட்டில் நடந்தால்
சொற்பல சொரிந்துமென்ன? சுருதிகள் ஜொலித்துமென்ன?
அற்புதம் படைத்த நாட்டில் அமர்க்களம் உண்டாம் என்றால்
பொற்புற நமதுபூமி பூரிப்ப தெந்தநாளோ!

பரந்துற விரித்த நாடு பாரத நாட்டி லென்றும்
சுரந்த ஆன்மீக தர்மச் சுவைவிருந் தளித்துயர்ந்த
பெருமையை மறக்கலாமோ? பின்னடைந் தேகலாமோ
அருமைநம் இந்தியநாடு அறத்தினை மறந்ததுண்டோ;

—★—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலாநந்தா அவர்களின் நூற்றாண்டு விழாக் கவிதை.

# "கல்விச் சிகரக் கொடியானோன்"

உத்தமன் விபுலா நந்தன்
உதயநூற் றாண்டு கண்டு
வித்தகத் தமி ழணங்கு
விழித்தனள் விழா வெடுத்தாள்
பத்தர்கள் சூழ்ந்து வாழ்த்தப்
பாவலர் பாட்டுப் பாடப்
புத்தணிப் பட் டுடுத்துப்
பூவையர் குரவை ஆர்த்தார்!

மத்தள முழக்க மெங்கும்
மாதவன் விபுலா நந்தன்
கொத்தணித் தொண்டர் வெற்றிக்
கொம்பெடுத் தூது கின்றார்
நர்த்தனம் புரிய மாதர்
நம்மட்டக் களப்பு நல்லாள்
முத்தணி முறுவல் பூப்ப
முழுநிலாப் பூத்த தெங்கும்!

சேவையால் உயர்ந்த ஞானச்
செம்மலாம் விபுலா நந்தன்
சேமநூற் றாண்டு தன்னிற்
செந்தமிழ் செழிப்புற் றோங்க
நாமனை வோருங் கூடி
நாடெலாஞ் சென்று சென்று
பூமகள் பூரிப் போங்கப்
பொற்பணி புதுக்க வாரீர்!

எழுத்தாளர் பலரும் இதய
சுத்தியோ டெழுச்சி கொண்மின்!
தொழத்தகு விபுலா நந்தன்
துலக்கிய தமிழ்த்தொண் டாய்ந்து
விழுத்தகு நூல் படைப்போம்
விரிவுரை முழக்கங் கேட்போம்
அழைத்தபே ரறிஞர் ஆய்வாம்
அருள்விருந் துணவு துய்ப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி இலட் சியத்தைப்
பலித்திடப் பணி புரிந்த
சீரிய விபுலா நந்தன்
சேவையைச் சிந்தித் தோர்ந்து
பாரிய பணிகள் செய்யும்
பைந்தமிழ்ப் பாசத் தோடு
கோருநன் நெறிக் கழைத்தார்
குரவனாம் விபு லாநந்தன்!

இன்றுநேற் றல்ல தமிழ்த்தாய்
எழில்பெற்று வாழ்ந்த காலம்
சென்றுபன் னூறு நூறா
யிரமாணடு கழிந்த தோர்வோம்
குன்றென நிமிர்ந்து கும்ப
முனிபணி புரிந்த காலம்
நன்றுநன் றென்ன நாடி
நற்பணி செய்வோம் வாரீர்!

ஒழுக்கம் நீதி உயர்பண்பு
உள்ளங் கலந்த பேரன்பு
முழுக்க முழுக்க நம்முன்னோர்
முகிழ்த்துப் பூத்த பண்பாடு
வழுக்கி வீழ்ந்து நொறுங்காத
வரம்பு நமது மரபென்று
உழைக்கும் விபுலா நந்தர்நூற்
றாண்டில் உறுதி பெறவம்மின்!

காரைதீவுத் தாய் பயந்தாள்
கன்னித் தமிழ்த்தாய் சுவீகரித்தாள்
ஆரை ஒப்புச் சொல்வோம்யாம்
அடிகள் விபுலா நந்தருக்கே
பேரைப் படைத்த நூற்றாண்டுப்
பெருமை நமக்கும் உரிமையன்றோ!
சீரைப் படைத்த ராமக்கிருஷ்ண
தேவர் சேவை வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைச்சொல் லாக்கக் கவிஞன்பல்
கலைக்கோர் கழகப் பேராசான்
நிலைக்குந் திட்டம் பலவகுத்து
நிறைவாங் கல்விப் பயிர்வளர்த்தோன்
துலைபோல் நடுவு நிலையாளன்
சுவாமி விபுலா நந்தனெனக்
கலைஞர் போற்றத் தமிழ்நாட்டிற்
கல்விச் சிகரக் கொடியானோன்!

பள்ளிக் கூடப் பணிபுரிந்தும்
பரம கம்சர் பதந்துதித்தும்
கொள்ளக் கொள்ளத் தேன்பொழிந்து
குமுறும் இசையாழ்க் கொடைவள்ளல்
அள்ளிக் கொஞ்சும் அருட்சைவத்
தாணி வேராய் அனைத்துமதக்
கொள்கைக் குறியோ டுளங்கலந்து
கூப்பும் விபுலா நந்தனென்கோ!

செகப்பிரியர் நாட கத்தைச்
சிந்தை கனிந்து மொழிபெயர்த்து
அகங்கொள் மதங்க சூளாமணியாய்
அழகுத் தமிழில் வடித்தகவி
மிகவும் பொருத்தம் பொருத்தமென
மேனாட் டறிஞர் பலர்போறறச்
சுகந்தத் தமிழுக் கொளியேற்றும்
சுவாமி விபுலா நந்தனென்கோ!

சித்தன் விபுலா னந்தர்புகழ்
சிறியேன் செப்பற் கியலாதாம்
நித்தம் சுவாமி நூற்றாண்டை
நினைவிற் பதித்தே அவர்நெறியில்
சித்தம் மகிழச் சேவைசெய்தல்
செந்த மிழ்ப்பே ரறிஞர்கடன்
முத்து முத்தாம் முத்தமிழ்த்தாய்
முடிவி லூழி வாழிமன்னோ!

● **சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா மலரில் வெளிவந்தது - 1992.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டின்போது
கவி அரங்கில் பாடிய செய்யுள்கள்.

# "வள்ளல் நபியின் வழிகாட்டும் வாழ்வு"

(மக்காவில் போதனை.)

ஏந்தல் எந்தை நபிகள்பிரான்
ஏக தெய்வக் கொள்கையினால்
வாய்ந்த ஞான வரம்புக்குள்
வாழ்க்கை நடத்தும் பேறு பெற்றீர்
சேர்ந்து வாழும் சிறப்புடையீர்
செந்தமிழ்ப்பூங் கவிதை மணம்
ஆய்ந்து சுவைக்கும் அறிவுடையீர்
அடியேன் அன்பு வணக்கங்கள்,

ஆழ்ந்து மூழ்கிப் பயின்றறியேன்
'அல்லாஹ்' சன்மார்க்கக் கடலில்
தோய்ந்துள் ளூறும் அனுபூதிச்
செல்வர் முன்போர் வறிஞன் நான்
சூழ்ந்த கவிதை யரங்கினிலோர்
துரும்பைக் கரும்பாய்ச் சுவைப்பீரோ
கூழ் என்றாலும் அன்போடு
கொடுத்தால் அமிழ்தம் ஆகாதோ.

கவிதைத் தென்றற் பூங்காவில்
களித்தே உலாவும் ரசிகர்க்கோர்
அவிழைத் தேனிற் குழைத்தூட்டும்
அன்புக் கொடையென் கவிநடைதான்
செவிக்கோர் கவிதைப் பசி தணிக்கச்
சிறியேன் விருந்து போதாதாம்
எவர்க்கும் நபிகள் இதயத்தோர்
இடமுன் டன்பால் இறைஞ்சுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலத் தமரா வதியென மலர்ந்து
வாணிபப் பொருளெலாம் மலிந்து
தேன்மிகு 'ஸம்ஸம்' தீஞ்சுவை யூற்றாய்த்
திருவருள் நிறைந்தமு தூட்டும்
வான்புகழ் 'கஃபாத்' தொழுகையால் உயர்ந்து
வரமருள் கோயில்சூழ் மக்கா
ஞானவாட்சுடராம் நபிகளெம் பெருமான்
நாயகத் தாயகம் வாழ்க.

காட்டினுக் கோடவில்லை கண்களை மூடவில்லை
நாட்டினைத் துறக்கவில்லை நற்பணி மறக்கவில்லை
வீட்டினுக் கேற்றஞான வேதபோதனையால் நன்மை
ஈட்டிய இறைவர்தூதர் இவ்வுலகேத்தும் எம்மான்.

கடவுட் பணிகள் செய்வதற்கோர்
காலத்துதித்த கட்டழகன்
மடமை இருட்டுக் குகைக்குள்ளே
மக்கா மக்கள் இடர்ப்பட்ட
முடக்கு நிமிர்த்தி முறைப்படுத்தி
முகிழ்த்த ஞானப் பெருஞ்சோதி
அடக்கம் அறிவுப் பொற்சுரங்கம்
அண்ணல் நபியென் கண்மணியே.

தொட்டிற் பழக்கம் சுடுகாடு
மட்டுமென்பர் தொல்லறிஞர்
பட்டப்பகல் போல் நபிகளவர்
பண்பும் பயனும் இளமையிலே
தொட்டுச் சிறந்து வளர்மதியாய்த்
துலங்கி இறைவன் தூதுவனாய்
எட்டற் கரிய பரம்பொருளின்
இன்பம் நுகர்ந்து வளர்ந்தாரே.

கொஞ்சும் குழந்தைப் பருவத்தே
கொள்வா ரின்றிப் பசித்தேங்க
மிஞ்சும் அன்பால் நினைவளர்த்த
மேண்மை இறைவன் திருவருளே
அஞ்சிப் பயந்து நடக்கவில்லை
அடிமைப் பட்டுக் கிடக்கவில்லை
பிஞ்சுக் குழந்தை பெற்றோரைப்
பிரிந்தும் பிரியான் பேரிறைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் அன்புத் தொழுகையினால்
ஆயிரம் பொய்த் தெய்வமெல்லாம்
செல்லாக் காசாய்ச் சிதைந்தழியச்
சேவை புரிந்தாய் திருநபியே
வெல்லும் வீர முரசதிர
வெற்றிக் கொடியிவ் வுலகனைத்தும்
சொல்லும் புகழாய்ச் சுடர்விளக்காய்
ஜோதி மணியாய்ப் பூத்ததன்றோ

கல்லால் எறிந்தும் பழித்துரைத்தும்
கயவன் பித்தன் எனக்குரைத்தும்
கொல்லத் துணிந்தும் பகிஷ்கரித்தும்
கொடுமை விளைத்த குறைஷியரைப்
பல்காற் பொறுத்தும் மன்னித்தும்
பட்ட துயர்க்கோர் அளவுண்டோ
அல்லாஹ் அருளால் தவிடுபொடி
ஆண்மைச் சிங்கக் குலவிளக்கே

கையில் ஞான விளக்கிருக்கக்
கண்முன் நல்ல வழியிருக்கப்
பொய்யா ஞானப் பாதையிலே
பூத்த இன்பந் தான் இனிக்க
மையாம் இருட்டஞ் ஞானத்தால்
மறுமைக் குதவும் பயனுண்டோ
ஐயம் வேண்டாம் ஈமான்நம்
அருமைத் தோழன் கரைசேர்ப்பான்.

ஒருதாய் உதரத் துடன்பிறப்பாய்
உலக மக்கள் உளங்கலந்து
சிரித்தே மகிழ்ந்து விளையாடிச்
சிறிதென்றாலும் சேர்ந்துண்ணும்
உறவால் உயர்ந்த மார்க்கத்தில்
ஒருவர்க் கொருவர் பகையுண்டோ
திருவாம் மக்காத் திரவியமே
திருவாய் மலர்ந்த தேனமுதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணும் ஆணும் உளங்கலந்து
பேணும் அறமே இல்லறமாம்
உண்ணும் உணவும் உடைநடையும்
ஒருவர்க் கொருவர் சமபங்காம்
மண்ணில் ஸ்லாம் மார்க்கத்தில்
மனம் வைத்தொருவன் வாழ்ந்தானேல்
அண்ணல் நபிகள் அவன்வாழ்வுக்(கு)
அரசன் என்ப தறிலானாம்.

பொன்னும் பொருளும் நாம்ஒருநாட்
போகும் வழிக்கோர் துணையாமோ
அன்பும் அருளும் வாழ்க்கையிலே
அமைந்தால் அதுவே மெய்த்துணையாம்
துன்பம் சற்றும் நெருங்காது
துய்க்கும் செல்வம் சுருங்காது
இன்பம் நபிகள் எந்நாளும்
இதிலோர் ஐயம் வேண்டாங்காண்.

கதீஜா அன்னை விசுவாசக்
கடலின் அமிழ்தத் திருமகளாம்
மதிசேர் மாதா மணவாளன்
வாய்த்த நபியோர் குணவாளன்
புதுமை ஸ்லாம் பொன்னெறியைப்
போதங்கனித்த மெய்ந் நெறியை
அதிதீ விரமாய்க் கைக்கொண்டாள்
அம்மாள் அழகுச் சீதேவி.

விதவைப் பெண்கள் கவலைக்கோர்
விடிவைக் கொடுத்தும் வாழ்வளித்தும்
இதுவே ஸ்லா மியக்கொள்கை
இறைவன் ஒருவன் எல்லோர்க்கும்
அதுவே முடிந்த முடிபாகும்
அசையா உறுதிப் பிடியாகும்
புதுமை ஞான மெருகூட்டும்
பணியே நபிகள் அணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளும் புறமுந் தூய்மையிலே
உயர்ந்து செல்லும் படிமுறைகள்
கொள்ளும் வேதக் கருப்பொருளைக்
கொடுக்கும் முறையாற் கொடுத்தருளி
துள்ளும் பொறிகள் ஐந்தடங்கித்
தூய ஞான விளக்கதனால்
அல்லும் பகலும் வழிகாட்டும்
அறிவுக் கொடைகள் உடையாய்நீ

கற்புக் கரகி உம்முஸம்மா
கன்னியர்க்கோர் வழிகாட்டி
பொற்புத் தெய்வந் தனைப்பார்க்கப்
போனார் கனவிற் பெருமானார்
அற்புதங்கள் ஆயிரமாம்
அந்நாள் இந்நாள் ஆகாதோ
எற்பும் உருக்கும் இரட்சகனார்
இதயத் தார்வம் பெருகாதோ.

அடிமை இருளிற் பெண்ணினத்தை
அடித்தும் இடித்தும் அழித்தொழிக்கும்
கொடுமை குறித்தும் பெருமானார்
குழந்தை உள்ளம் குமுறிற்றாம்
கடிய கொடுமைச் சிறை உடைத்துக்
கன்னிப் பெண்கள் துன்பமெல்லாம்
கடந்து பெண்மை வாழ்வுக்கோர்
காவல் கண்டே விழிப்புற்றார்.

மூடக் கொள்கை தனில் முளைத்த
முரட்டுப் போருக் கஞ்சாது
சாடிப் பொருது தன்மார்க்கச்
சன்மார்க்கந்தான் தழைத்தோங்க
கூடிக் கலந்து மக்கள் குழாம்
'கஃபாத்' தொழுகைக் கோயிலையே
தேடித் தேடித் தினந்தழுவத்
தேவதூதர் ஜெயம் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் அருளின் வெளிச்சம் போல்
அழகுக் குன்றாம் ஹிராக் குகையில்
சொல்லற் கரிய தவம் புரிந்தும்
தூய ஜிப்ரில் வாக்குணர்ந்தும்
வல்ல ஞானப் பணிபுரிய
வாய்க்கும் நபித்து வம்பெற்றும்
கொல்லும் உலகத் துயர் மறந்த
குருமா மணியை வாழ்த்துதுமே.

அத்தை மகளாம் அன்னை ஸைனப்
அள்ளிக் கொடுத்தாள் ஆயிரம்பொன்
சொத்தை மதியாள் பசித்தழுது
துடிக்கும் ஏழைத் துயர் போக்க
நித்தம் நீண்ட கையுடையாள்
நிறை பூரணத்தேன் நிறைகுடமாம்
உத்தமத்தாய் வழி நின்றால்
உலோப குணந்தான் ஒதுங்காதோ

முன்னாள் அறியாச் சீதனப்பேய்
முகத்தைச் சுருட்டும் ஆதனப்பேய்
இன்னாள் இல்லாள் இல்லாளாய்
எதிர்க்கும் படை ஓர் திருமணமோ
பொன்னார் தமக்குக் கைகொடுக்கும்
புனிதப் பண்பு மணமகனை
முன்னால் வருக என்றழைத்தே
நபி ஓர் முத்தந் தாராரோ.

காமப் பசிக்கோர் வேட்டையெனக்
கன்னிப் பெண்கள் கண்கலங்கக்
காமர் கற்பைச் சூறையிடும்
கள்ளக் காதல் மணம் அல்ல
தேவ நபியெம் பெருமானார்
திருமணங்கள் அத்தனையும்
பூவைப் பொன்னார் விடுதலைக்கோர்
புனிதப் புரட்சிப் புதுமையன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் விளக் கொளிபடர்ந்து
சூழ் இருள் அகற்றினாலும்
அடர் இருள் அதனைச்சுற்றி
அடிப்புறம் செறிதல் போலாம்
உடைமையாம் மக்கா நாட்டில்
உன்புகழ் ஒளியைக் காணார்
மடமையால் திட்ட நின்னை
மதித்தனர் மதினா மக்கள்

பள்ளி வாசல் அமைப்பதற்குப்
பணிகள் புரிந்தார் தன்கையால்
உள்ளம் மகிழ்ந்தே அல்லாஹ்வின்
ஒளியைக் காணும் வழி கண்டார்
வெள்ளம் போல மக்கள் எல்லாம்
விரைந்து திரண்டு விழிப்புற்றார்
கொள்ளைக் கூட்டக் குறைஷியர்கள்
கொடுமை அழிக்கப் போர்புரிந்தார்.

இறைவரின் தூதராய் எம்மைக் காத்தவர்
குறைவிலா ஞானவா ரிதியைப் போன்றவர்
நிறைமதி பூரண நீதி படைத்தவர்
மறை திருக்குர் ஆன் மணி வள்ளல் வாழ்கவே.

அகத்திருள் புறத்திருள் அனைத்தும் அழிப்பது
மிகப் பெரு ஞானப்பொன் மணி விளக்கது
உகந்தவர் உளமெலாம் உறுதி செய்வது
தகை நபி நாயகந் தந்த ஞானமே.

முத்துமுத்தான பொன் முதுமைச் சொத்தது
நித்தம் ஸ்லாமிய நீதி விளக்கது
உத்தமர் ஓதிட உலகந் தழைப்பது
வித்தகத் திருக்குர்ஆன் வேதம் வாழ்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தினைத் திருத்தி மெய் வாழ்வளிப்பது
தினத் தினத் தினந்தினம் தேன் சுவைப்பது
அனைத்தையும் மிஞ்சிடும் ஆன்ம நூலது
இனைத்ததன் பெருமையென் றியம்பற் கரியதே.

வாழ்வைஓர் யோகமாய் மாற்ற வல்லது
ஆழ்ந்துள பொருளது அல்லாஹ் அருளது
தாழ்ந்துள மனிதனைத் தகுதி செய்வது
சூழ்ந்த பொன் மறையது தூய திருக்குர்ஆன்

பாதகமும் படுகொலையும் களவும் சூதுப்
பந்தயமும் தலை குனிந்து பணிந்த தென்கோ!
சாதனையாம் சன்மார்க்கச் சாந்தி மார்க்கம்
சகமனைத்தும் சமாதானம் போந்தமார்க்கம்
வேதனைகள் தீர்த்தசுர வெறி தணித்து
விதம் விதமாம் வாழ்க்கை வளம் எய்திற்றென்கோ!
ஈதனைத்தும் எந்தை நபி நாயகத்தின்
இதய வெளிச் சுடர்ஞான தீப மென்கோ!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவயோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரவர்கள் மண்டூருக்கு வந்தபோது, அவ்வூர் மக்கள் அளித்த

# வரவேற்புப் பாக்கள்

பொன்னாகப் போற்று(ம் நாள்புண்ணிய நாள்
பூசனைக்கென்(று)
உன்னிவா னுள்ளோரு மோடும் நாள் - பன்னரிய
நன்னாள்சுத் தானந்தர் நம்மூர்க்கு வந்தநாள்
இன்னா ளெவர்க்கு மினிது.

அன்பின் வடிவே நீ வருக!
ஆரப் பருகுங் கவி வருக
இன்பத் தேனே யிவண் வருக
எங்கள் ஞானப் பழம் வருக!
என்புமுயிர் பெற் றெழச் செய்த
இளமைத் தமிழின் சுடர் வருக
மன்னும் புகழ்சுத் தானந்த
வள்ளால் மகிழ்ந்து வருகவே!

உள்ளத் தினிக்குந் தீஞ்சொல்லால்
உலகம் போற்றக் கவிபாடி
அள்ளிக் கொடுக்குங் கலையரசே!
அமுதத் தமிழின் தந்தாயுன்
வெள்ளத் தன்பால் வீறுற்றே
வெற்றி யடைந்தார் தமிழ்மக்கள்
துள்ளுஞ் ஞானத் தனிநடையோய்
தூயோய் துதிக்க வருகவே!

புத்தம் புதிய தமிழ் நடையும்
புந்தி செழிக்கு மருட்கவியும்
அத்தன் ஆணை எனத்தந்தாய்
அருவி பெருகி வருவதுபோல்
முத்திப் பீடத் தனியரசாம்
மோனப் பெரியார் அரவிந்தர்
சித்தப் பொலிவே நீ வருக
சீர்சால் யோகி வந்தருள்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணோர் கண்டு மனம்புழுங்க
விளங்கும் பெரிய கலைக்கோயில்
மண்ணோர்க் கென்று நீகட்டி
மனமாய்த் தந்தாய் பாரதியே!
உண்ணா ரமுத மிதுவன்றோ!
உலகுக் கேற்ற பொதுச் செல்வந்
தண்ணார் தமிழின் தகையுள்ளம்
தாய்போ லனையாய் வருகவே!

கட்டுக் கடங்காப் பேருவகை
கொண்டாள் கற்பின் பயனென்றாள்
விட்டுப் பிரியே னினிஎன்றாள்
வீழ்ந்தாள் தொழுதாள் விரைசேர்த்தாள்
முட்டு மானந் தக்கடலில்
மூழ்கிப் புதுமை நிறம்பெற்றாள்
மட்டி லன்பு மனத்தோடும்
மகிழ்ந்தாள் மண்டு ரன்னையுமே.

முற்றுந் தவத்தின் பயனென்கோ!
மோது மருளின் வடிவென்கோ!
பெற்றை மீது தமிழ்தந்த
புதுமைக் குறுநன் முனியென்கோ!
பற்றும் பாச விருள் மடியப்
பாயும் பருதிச் சுடரென்கோ!
குற்றம் பொறுக்குங் குணக்குன்றே
கோடி வணக்கம் நின்னடிக்கே.

பாடிப் புகழ்ந்து பலதரமுன்
பாதம் பணிந்து பக்தியுடன்
ஆடிச் சிறந்து யாபேரும்
அமரத் தன்மை பெற்றுய்ந்தார்
நாடற் கென்றோ வானுலகை
நாட்ட வந்தாய் பாரதியே!
கூடிக் கலந்து மக்களெலாங்
குலமொன் றாகி வாழ்வாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குங் கடலிற் பெரிதம்மா
போற்றுஞ் சுத்தா னந்தரருள்
சங்கத் தமிழ்நூற் சாரமெலாந்
தந்த புதுமைக் காவியமே!
மங்காத் தீபம் பாரதமா
சக்தி என்ற மணிநூலாந்
தங்க மகுடந் தமிழன்னை
தலைக்குச் சூடத் தக்கதுவே.

தூக்கி மக்கள் தமைக்காக்கத்
தொகுத்தாய் யோகசித்தி யெனும்
ஆக்கம் பொலியுங் குறள் நூலை
அதற்குப் பரிசு மார்தருவார்
வாக்குச் சித்தி பெற்றாயெம்
வாணி மகனே! வையமெலாந்
தாக்க மின்றி வாழ்தற்குத்
தந்தாய் பணியும் வேறுளதோ!

சொல்லிச் சொல்லிப் படித்திடுவோஞ்
சுத்தா னந்தர் நூலென்று
அல்லும் பகலு மன்பரெலாம்
அருமை யோகி யென்றார்ப்போம்
கல்லுங் கரையுந் தீந்தமிழைக்
காக்க வந்த கவியென்போம்
வெல்லுந் தமிழ்ப்பேரிகை யென்னும்
வீரச் சுத்தா னந்தரையே!

பூக்கும் புதிய மலர்க்காவிற்
புகுந்த வண்டும் புதுமதுரத்
தேக்கம் பெற்றுத் திரும்புமலால்
தீய பண்டை நிலைபெறுமோ!
காக்குந் தெய்வக் கற்பகமே
காத்து நின்ற மக்கட்குன்
ஆக்கக் கடலி லோர்திவலை
அருந்தத் தந்தா லதுநிறைவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுத் திசையும் நமதாணை
என்றே ஞான வேல்தந்து
விட்டான் தில்லை மண்டூரோன்
வேதத் தந்தை யாமுன்னைக்
கட்டித் தழுவிக் கண்ணீரால்
காலைக் கழுவு(ம்) எம்மன்னை
வட்டத் திங்கள் போலென்றும்
மாறா வடிவம் பெற்றாளே.

பாடற்கரிதுன் பெரும்புகழ் பாடப் பயமறியா(து)
ஓடுங் குழந்தைக் கவிபரந் தோடி யுருகியதால்
சூடத் தகாதென்று சொல்லினும் பேரன்பு சூழ்ந்ததனாற்
பாடத் தகுமென்பர் பல்லாண்டு வாழ்க! நம்பாரதியே.

இப்படிக்கு,
தங்களன்பிலூறும்,

*10-11-52.* **மண்டூர் மக்கள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரம்ம ஸ்ரீ ஆறுமுகநாவலர்

ஆறு முகநா வலர்பெருமை
அடியேன் பாடற் கெளிதாமோ?
தேறு முகப்பொன் மலர்பூத்த
தேசிக மா மணியன்றோ
வீறு கொள்ளணி மிக்கவராம்
மேலோர் போற்றத் தக்கவராம்
ஈறும் முதலும் இல்லாத
ஈசன் இன்பத் தாசனன்றோ!

ஆங்கில மோகத் துள்ளே
அடிமைப்பட் டுழன்றோம் அந்நாள்
ஓங்குவை திக சமயத்(து)
உயர்நெறி ஒழுங்கு மாறத்
தாங்கொணாத் துக்கங் கொண்டு
தலைநிமிர்ந் தரியே றென்ன
ஆங்கொரு சிவசன் மார்க்கம்
அணிபெறத் துணிந் துழைத்தோன்

செந்தமிழ்த் தாயும் சைவச்
சீலமும் செழித்துப் பூப்ப
அந்தமில் பணிக ளாற்றி
அந்தணர் போற்ற வாழ்ந்தார்
முந்தையோர் முறைமை குன்றா
முத்தமிழ்ச் சங்கந் தேர்ந்து
சொந்தமாய்ச் சுதந் திரத்தோ
டரும்பணி புரிந்த தோன்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லரித் துண்வு கொண்டு
சிதைந்தசெந் தமிழே டெல்லாம்
அல்லொடு பகலும் ஆய்ந்து
அரும்பெரும் முயற்சி யாலே
சொல்லொடு பொருளுந் தேர்ந்து
சொந்த அச் சுக்கூடத்தில்
நல்லதோர் பதிப்பாய்க் காண
நற்பணி புரிந்தார் மன்னோ!

திருமுறைக் குரவ ரோடு
சேர்த் தைந்தாங் குரவரென்ன
வருமுறைக் கற்றோர் சொன்ன
வாய்மொழி பலித்த தென்கோ!
குருகுலக் கல்வி ஓங்கக்
கூப்பும்பள் ளிக்கூ டங்கள்
அரும்பெரும் முயற்சி கூடும்
ஆக்கங்கள் அளப்பா ருண்டோ!

ஆகமச் சொத்தா மெங்கள்
அரியதோர் கலைக ளெல்லாம்
சேகரித் தறிஞ ரோடு
செய்தசே வைகள் அனந்தம்
பாகெனப் பயிலும் பைந்தீந்
தமிழெனப் பாடிப் பாடித்
தாகங்கள் தீர்த்த சைவ
சிகாமணி நா வலர்கோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண படனம் பலபுரிந்தும்
பொங்கும் ப்ரசங்க மாரிபொழிந்தும்
அராநின் றாடும் அணிபூண்ட
அம்மை யப்பர் அடிபணிந்தும்
பராமுகமாய்த் தமி ழினத்தைக்
கைவிடாது பரிந் தோம்பி
விராவு சைவத் தமிழ்வளர்த்த
வேந்தர் ஆறு முகநாவலராம்.

பழந்தமிழ் நூல் பதித்தும்
பயிற்றும்ஆ சிரியர் படைத்தும்
இழந்தநம் உரிமைச் சொத்தாம்
இலக்கிய இலக் கணங்கள்
அளந்தளந் தவைக்கண் மெச்சும்
ஆக்கங்கள் பலவுஞ் செய்த
குழந்தைபோ லுள்ளங் கொஞ்சும்
குருமுகங் கண்டுய்ந் தோமே!

அவைக் கஞ்சா ஆண்மைபெற் றோன்
அசட்டுவா சகங் கடிந்தோன்
எவை யெவை காலத் தேவை
அவையவை அள்ளிக் குவித்தோன்
சிவசிவ சிவவென் றோதிச்
சிவபூசைச் சிறப்புப் பெற்றோன்
தவப்பயன் தமிழர்க் கெல்லாந்
தாய்மையாழ்ப் பாணம் வாழ்க!

—★—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டக்களப்பு ஸ்ரீ இராமக்கிருஷ்ண சங்கப் பாடசாலைகளின்**
**முகாமைக்காரராயிருந்த**
**ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தா அவர்கள்மீது அன்பு பாராட்டி**
**மண்டூர் மக்களும் ஆசிரியர்களும் அளித்த**

# பிரிவுபசார வாழ்த்து

நன்மை நலியுங் காலத்தே
நானும் பிறப்பேன் நானிலத்தே
புன்மை அழியும் அறம்வளரும்
புவனிப் பாரந் தீர்த்திடுவேன்
என்றான் கண்ணன் கீதையிலே
இராமக் கிருஷ்ண ரெனப்பின்னாள்
மன்றம் வளர்த்தான் மண்ணகத்தே
மக்கள் வாழ்வு மலர்ந்ததம்மா!

இராமக் கிருஷ்ணப் பெருமன்றம்
எழிலார் மட்டக் களப்பினிலே
பரவப் பணிசெய் பாவலனாம்
பாகு 'தமிழ்யாழ்' நூலாசான்
குரவன் விபுலா நந்தனெனக்
கூப்புந் துறவி அன்பாலே
தரவும் நடரா ஜானந்தத்
தலைமை எய்திச் சிறந்ததம்மா!

எண்ணும் எழுத்தும் இருகண்கள்
ஏழைச் சிறுவர் படித்துய்ய
புண்ணிய மாம் பள்ளிபல
புதுக்கி விட்டாய் ஊரனைத்தும்
உண்டி உடையாந் தேவையெலாம்
உதவி உயிர்போல் ஓம்புகின்றாய்
நண்ணும் நடரா ஜானாந்த
நந்தா விளக்கம் நனிவாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவும் பகலுந் தோற்றாமல்
எடுத்த தீபம் மாற்றாமல்
பரவும் பக்திப் ப்ரவாகப்
'பரமஹம்சன்' பங்கயப்பூந்
திருவடிப் பொன் னீழலிலே
தேக்கிக் கருணைத் தேன்பருகும்
பெருமான் நடரா ஜானந்தப்
பெம்மான் நின்னைப் பிரியோமே.

எல்லா மதமும் சம்மதமாய்
எல்லா உயிருந் தன்னுயிராய்
நல்லார் இராமக் கிருஷ்ணரவர்
நாட்டும் அன்பு நன்னெறியில்
அல்லும் பகலும் சேவையெனும்
ஆத்ம யோகந் தான்பயிலும்
வல்லார் நடரா ஜானந்த
வம்மின் நின்னை மறவோமே!

எருதின் கொம்புக் கணிபூணாம்
எவரும் பார்க்கும் உத்யோகம்
வருகும் போகும் மாமாயம்
மறையுந் திங்கள் இதற்கொப்பாம்
அருமை இராமக் கிருஷ்ணரவர்
ஆத்ம சேவைக் கழிவுண்டோ
உரிமை நடரா ஜானந்த
உன்னைப் பிரிந்தும் பிரியோமே!

கல்விப் பொறுப்பை எடுத்தாலும்
கட்டி டத்தைக் கொடுத்தாலும்
சொல்லும் அரசின் ஆணையிலே
சோத னைகள் சூழ்ந்தாலும்
நல்லார் இராமக் கிருஷ்ணரவர்
நன்னெ றிக்கண் சேவைசெய்ய
வல்லார் எல்லாம் வல்லாரே
வல்லை நீயும் வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பதவி கானலெனப்
பயக்கும் மயக்கும் பக்திநெறி
மட்டும் மாறாச் சுவை சொட்டும்
மலர்த்தும் வாழ்வும் பூரணமாம்
முட்டும் பாசப் பூண்உடைத்த
முத்தா! சித்தர் பத்தரெல்லாம்
கட்டுக் கடங்காப் பேரின்பங்
கண்டார் நீயுங் காணியவே!

உலகமெல்லாம் தழைக்கின்ற
ஒப்பில் இராமக் கிருஷ்ணசபை
பலவாம் பணிகள் செய்வதுவும்
பலரும் பயன்பெற் றேகுவதும்
சிலபேர் செப்புஞ் செய்தியல்ல
தேசம் புகழுந் திருத்தொண்டாம்
மலையி னொளிருந் தீபம்போல்
வளர்க! திவ்யப் பேர்மன்றம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஞானப்பிரகாச மாமணி

தொன்மைத் தமிழ்ச்சொல் அமைதியினைத்
துருவி உலக மொழிகளிலே
பொன்னுக் 'குரைகல்' போலொளிரும்
புத்தி நுட்பத் தெளிவாலே
கன்னித் தமிழ்க்கோர் ஒப்பியல்நூற்
காவல் வரம்பு கட்டிநிதம்
மன்னுஞ் சுவாமி ஞானப்பிர
காச மணியைப் போற்றுவமே.

பலநுண் பொருணூல் படித்தாய்ந்து
பணிசெய் அணியாம் பயன்பூத்துக்
கலைஞர்க் கினிய தேன்சொரிந்த
காம தேனைக் கற்பகத்தை
நிலையில் அசையா நிறைகுடத்தை
நிகரில் தூண்டா மணிவிளக்கை
சிலுவை அன்பு மறைவளர்த்த
தியாக குருவை வாழ்த்துதுமே.

துலங்குந் தூய தமிழுலகத்
தொன்மை வரலாற் றறிஞர்பிரான்
கலங்கி நொந்த மக்களைத்தன்
கையா லணைத்துப் பணிபுரிந்தோன்
பலங்கொள் ஒழுக்கப் படையுடையான்
பலநூ லகம்போற் கொடையுடையான்
நலங்கொள் சுவாமி ஞானப்பிர
காசர்நாமம் வாழியவே!

ஆட்சி தலைமைப் பீடத்துக்
காசைப்பட்டுப் போர் தொடுக்கும்
சூழ்ச்சி மலிந்த கலிகாலச்
சுழியிற் சிக்கி அழியாமல்
காட்சிக் கினிய வேதநெறிக்
கருத்துப் பொருளை விரித்துரைத்த
மாட்சிக் குருமா மணிபடைத்த
வழியால் நடப்போந் தோழர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பதவி பணச்செருக்குப்
பகைப்போர் குமுறும் பாழ்ங்கிடங்கில்
பட்டு மடிந்து மனிதகுலம்
பரித விக்க ஞாயமுண்டோ!
துட்ட ருறவு கூடாது
சுவாமி ஞானப் பிரகாசர்
பட்டப் பகல்போற் பாதையில்நாம்
ஒட்டிக் கொள்வோந் தோழர்களே!

சமயச் சான்றோர் அறநெறியைச்
சார்ந்து மக்கள் குலஞ்சிறக்க
அமையும் புனித கிறித்துவத்தை
அலங் கரித்த குருமணியாய்
இமைப்போ தளவுஞ் சோராமல்
இறுதி மட்டும் பணிபுரிந்து
நமைச்செந் நெறியில் வழிகாட்டும்
ஞான குருவை வாழ்த்துதுமே.

பண்டைச் சான்றோர் பண்பெல்லாம்
பாரில் திரண்டு வடிவெடுத்துத்
தண்ட மிழ்த்தாய் மகிழ்பூப்பத்
தரணி தன்னிற் பிறந்தினிய
தொண்டு புரிந்த துறவிக்கோர்
மண்டூர்க் கவிஞர் வாழ்த்தாமோ
அண்டி நெருங்கும் அன்பாலே
அடியேன் பாடுந் தமிழ்மாலை

ஆண்ட வன்பொற் கோயிலிலே
அன்புக் கவிஞன் தான்பாட
வேண்டும் சுவாமி ஞானப்பிர
காசர் பெருமான் தான்கூடத்
தூண்டும் உணர்ச்சி தலையெடுத்தால்
தொடுக்குங் கவிதைப் பூந்தொடையாய்
யாண்டும் விளங்கும் மணம்வீசும்
யாதும் ஈசன் பணியன்றோ!

29-7-80ம் ஆண்டிற் பாடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களது எண்பதாவது வெள்ளணி விழாவிலே பாடிய

## வாழ்த்துச் செய்யுள்கள்

தில்லைச் சுடரொளி மண்டூர்ப் பொன்மகள்
திகழத் திக்கெங்கும்
திருவளர் முருகன் அறிவளர் திருவடி
முதுபெரும் அன்பாளன்
சொல்வளர் புலவோர் மாமணி பெரிய
தம்பிப் பிள்ளைபயில்
சுன்னைக் குமாரசு வாமிப்புலவர்
பிரான்சீர் மாணாக்கன்
பல்வள மும்பெறு பைந்தமிழ் முற்றிய
பாவலர் நாவலனாம்
பகவான் கண்ண பிரான்பகர் பகவத்
கீதைப் பாற்கடலில்
வெள்ளிய சங்கம் ஒலித்தென வெண்பாச்
சுவைமலி வித்தாரம்
விரிவுரை யாளன் எண்பதி யாண்டாம்
வெள்ளணி மங்கலமே
விழாவுறு மன்பர் உள்ளங்கொடு வாழ்த்த
விளங்குக பல்லாண்டே.

காலைச் செங்கதிர் வரவிற் காதற்
கண்விழி பூங்கமலக்
காட்சி. யெனச்சுடர் கவிதைக் கதிராற்
கண்விழி மாணாக்கர்
ஞாலத் தூக்கிய நற்பணி ஆசான்
நறுமலர் நாற்றம்போல்
நனிசால் பண்புகள் நடையுடை தடைவிடை
நாட்டிய நுண்ணுணர்வோன்
சாலத் தீந்தமிழ் அமுதச் சான்றோர்
சால்பிது சால்பிதெனாச்
சாரும் பேரறி வாளர்க ளன்புச்
சமரச சன்மார்க்கன்
போலும் யாருளர் பொன்வளர் மட்டு
மாவள நாட்டறிஞன்
பொலி பொலி யாண்டுகள் புலவோர் மாமணி
வெள்ளணி பொலிபொலியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுல முறையிற் கூடிய கல்வி
நாவலர் கோயிலிலே
குருமணி குமார சுவாமிப் புலவர்
கொஞ்சும் பேரன்பால்
பரவிய சங்கத் தமிழறி வித்துப்
பண்டித னாக்கியதால்
பற்றிலர் பற்றும் பரம்பொருள் பாடும்
பக்குவ மெய்தியதால்
பெருகிய ஞானக் கடலமு தன்புப்
பெருமான் கண்ணபிரான்
பேசிய பகவத் கீதை யெனும்பெரு
மாளிகை மீதினிலே
உருகுமெய் யன்பால் உறுபொருள் உணரும்
ஒருமைத் தனிவெளியில்
உலாவரு ஞானசி காமணி வெள்ளணி
ஓங்குக பல்லாண்டே!

கழனிகள் விளையக் கவின்செய் குளப்பூங்
கல்லோ யாக்கவியும்
கான மிசைத்திடு ராவண பூபதி
கன்னி ஆய்த்துதியும்
உழுதொழில் மேழிச் செல்வப் பரிசும்
உயர் விபு லானந்தன்
உயிரினை ஓம்புங் குயிலிசை பத்தும்
ஊறிய மெய்யன்பால்
அழகிய தேவ குலங்கள் துதிக்கும்
அணிகவி மாலைகளும்
அமுதத் தீந்தனிப் பாடல்கள் பலவும்
ஆக்கிய கவிராஜன்
பழகிய பண்டித மாமணி கணபதிப்
பிள்ளை உயிர்த்தோழன்
பாகு தமிழ்க்கொரு வாகு படைத்துயர்
பண்டிதன் வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பன் காவிய மாகடல் அமிழ்தம்
கடையுங் கவிமணிகாண்
கற்றவர் மெச்சும் அற்புத கவிதைக்
கவிமொழி மதுரகவி
கொம்பொடு கூத்துங் கோல்விளை யாட்டும்
குரவைத் தாலாட்டும்
குதிகொளும் ஊசற் பாட்டுங் கவியும்
குமுறுங் கலைவளமும்
அம்பொன் வயலும் அணியணி தென்னந்
தோப்பும் பூங்காவும்
அழகு புதுக்கும் வளமிகு நாடாம்
மட்டக் களப்பன்னை
செம்புல மைந்தன் செந்தமிழ் ஐந்தும்
முந்தும் புகழாளன்
சீரிய புலவோர் மாமணி வெள்ளணி
மங்கலம் வாழியவே.

அமிழ்தினு மினிய தமிழ்மக ளுரிமைப்
போரெனும் இந்நாளில்
அவரவர் உரிமைப் பணிசெய வருவோர்க்
கறிவுரை தெளிவிப்போன்
எமதுயர் தொன்மொழி இன்மொழி பொன்மொழி
என்றுதுடித் திளைஞர்
எங்கள் தமிழ்க்கோர் இடர்வர நேரின்
இன்னுயிர் விடுவம்எனா
தமதுயிர் ஓர்திர ணந்திரணந் தமிழ்த்
தாயக உரிமைக்கே
தானெனும் அதிதீ விரநடை தணியத்
தருமப் போர்வீரம்
அமைதரு ஞானப் பாரத கீதைப்
போதனை அந்தணர்பா
ஆர்த்திடும் மூங்கி லாற்றொலி போலவர்
வெள்ளணி மங்கலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்மணியின் "உள்ளதும் நல்லதும்"
நூல் வெளியீட்டு விழாவின்போது பாடிய

## செய்யுள்கள்

உள்ளப் பொய்கை தனிற்பூத்து
உள்ள தும்நல் லதுங்கமழச்
சொல்லும் பொருளும் இதழ்விரித்துச்
சுசந்தம் வீசும் நல்லறிவால்
பல்லோர் பண்பு நடையினிக்கப்
பண்டித மா மணிபடைத்த
நல்லோ வியப்பூங் காவினிலே
நாளும் உலாவி வலம்வருவோம்.

சொந்த வாழ்வின் அனுபவத்தைச்
சுவைக்குந் தமிழ்ப்பொன் உரைநடையில்
முந்தும் ஆர்வத் தொடுபுனைந்து
முத்து மாலை கோத்ததெனச்
செந்த மிழ்த்தாய்ப் பணிபுதுக்கிச்
சிறப்புச் செய்தான் செங்கமலப்
புந்தி பூத்த புலவர்மணி
பெரிய தம்பிப் பிள்ளை மன்னோ!

மட்டு நகர்த்தாய் மண்வளம்போல்
வாவி வளமும் வயல்வளமும்
கொட்டும் அருவிக் கொடைவளமுங்
கொப்புத் தேனும் பாற்குடமும்
வட்டமிட்டுக் கொஞ்சுதமிழ்
வளஞ்சால் புலவர் மாமணியின்
கட்டுக் கவிதைக் கோட்டையிலோர்
தட்டுப் பாடும் இல்லையடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்கொள் தில்லை மண்டூர்வேல்
முருகன் தங்க மணிக்கோயில்
வலங்கொள் தலைமை வண்ணக்காம்
ஏகாம் பரர்க்கோர் வரன்மகனாய்
நலங்கொள் நல்லை நகரா று
முகநா வலன்கா வியச்சோலைப்
புலங்கொள் கவிதை மணிக்குயிலாய்ப்
பொன்னாட் டின்பம் பூத்ததுவே.

சுகந்த ஞானத் தமிழ்ச்சுன்னைக்
குமார சுவாமிப் புலவனடி
உகந்த பேரன் பொடுகலந்தே
உள்ளக் கமலத் தேன்சொரிந்து
அகமும் புறமுங் குருசீட
அமைதி பூப்பத் தமிழ்பயின்று
தகைசால புலவர் மணியாந்தண்
டமி ழாசானை மறப்பேனோ!

கன்னற் பாகைச் செழுங்கனியைக்
கட்டித் தேனைக் கற்கண்டைப்
பண்ணார் கவிதைச் சுவையினிலே
படிய வடித்து விருந்தூட்டி
கண்மா மணிபோல் இளைஞர்களைக்
கட்டித் தழுவி முத்தமிடும்
வண்ணத் தமிழால் வளம்பூத்த
மண்டூர்க் குருமா மணியன்றோ!

நமது மட்டக் களப்பினுக்கோர்
நாவ லன்போற் பணிபுரிந்தோன்
சிவனும் இரவிற் தூதுசெல்லுஞ்
தமிழ்க்கோர் சிலையாய்ச் சிறந்தொளிரும்
தமது படைப்புத் தமிழ்நடைக்கோர்
தலைமை நடைச்சா தனைவகுத்துச்
சமைத்துச் சுவைக்கத் தந்ததமிழ்த்
தாகூர்க் கவியை வாழ்த்தேனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியக் கவியாங் கம்பன்
　　இராமகா வியத்தில் தோய்ந்து
அலட்சியக் காரர்க் கெல்லாம்
　　அமுதத்தீந் தமிழை அள்ளிச்
சிலுசிலுத் தினிக்கச் செய்த
　　சீராமக் கிருஷ்ணா னந்தப்
புலவர்மா மணிமெய்ப் போதம்
　　புயல்வண்ணன் கீதை நாதம்.

சான்றோர் சங்கத் தமிழ்வளமும்
　　தாயு மானார் தமிழ்ச்சுவையும்
ஆன்ற துறவுப் பட்டினத்தார்
　　ஆண்மைத் துடிப்பும் அருட்குரவோர்
பான்மைப் பத்தி மணச்சுவையும்
　　பண்பு வள்ள லார்மூச்சும்
ஊன்றி நடக்கும் புலமர்மணி
　　உணர்ச்சிக் கவிதை ஓட்டமடா.

முத்துச் சுடராம் முத்தமிழை
　　முழுவெண் ணிலவுப் பூரணையில்
நித்தம் பாடும் மீனிசையால்
　　நிலைக்கும் யாழ்நூற் பணிமுடித்த
சித்தன் விபுலா னந்தருக்கோர்
　　சேமக் கவிதைக் குயிற்பத்துப்
பித்தன் அன்புக் காளாகிப்
　　பிரியா விடைபெற் றேகினனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வித்துவசிரோமணி சி. கணேசையர்"

காக்கும் கணேச ரருளாலே
கலைகள் முற்றுங் கணேசையர்
பூக்கும் புலவர் சிகாமணிபொன்
னம்பல பிள்ளை மாணவராய்த்
தேக்குந் தமிழும் சைவமுநற்
சீடர்க் கினிதாய் முதிர்ந்ததம்மா!
ஆக்க மனைத்தும் புன்னாலை
அன்னை செய்த புண்ணியமாம்!

பெருங்கடல் இலக் கியத்தோ
டிலக்கணத் தேர்ச்சி பெற்றும்
வருவட மொழி பயின்றும்
வண்டமிழ் வடிவ மானர்ர்
குருகணே சையர் கொண்ட
கொள்கையில் உறுதி பெற்றுத்
திருவருட் செல்வம் சேரத்
திருமுறை யனைத்துந் தேர்ந்தார்.

மதுரத் தமிழ்த்தாய் மரபினுக்கோர்
மாசில் பொன்மா மணியாகிச்
சதுரப்பாடு தழைத் தோங்கச்
சங்கத் தமிழ்க்கோர் குறுமுனிபோல்
மதிக்குந் தமிழ்மா ணவர்க்கெல்லாம்
மதுரத் தமிழைப் போதித்தார்
கதிக்கும் புலமைக் கனிசொரிந்து
கற்பகத் தேன் விருந்திட்டார்.

வளஞ்சால் பதியாம் வர்த்தலைவிளான்
வயங்குஞ் சித்தி விநாயகர்பால்
உளஞ்சால் அன்பு முறுகிஎழ
ஓங்கும் பத்தி உருகிஎழ
நலஞ்சால் மருத மரத்தடிவேர்
ஞான விநாயக வடிவெடுக்கத்
தலஞ்சால் கூபச் சித்திபெற்றுத்
தருமத் தருபோல் தமிழ்சொரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்னூல் தொல்காப் பியநூலில்
தோய்ந்து திளைத்துத் துருவியதால்
நன்னூ லாரும் நாவலரும்
நயக்கும் உரைபொற் குறிப்பெழுதி
பன்னூ லறிவு தலைப்பட்ட
பண்டி தர்க்கும் பயனளித்தார்
என்னூ லாரும் எடுத்தாளும்
இலக் கணத்தேன் விருந்தளித்தார்.

அரசன் அரச கேசரியார்
அருமைப் பாடல் ரகுவம்சம்
புரிந்து புலமை வளம்பொலியப்
பொன்போல் உரைதந் தொளிபடைத்தார்
பரிந்து பயிலும் மாணவர்க்கோர்
பயந்து பெற்ற தாயன்பிற்
தெரிந்து தெய்வத் தமிழ்விரித்துத்
தேசிக மா மணியானார்.

ஆறு முகநா வலர்மரபுக்
காக்கப் பணிகள் பலபுரிந்து
தேறு மாணாக் கர்பலவரைத்
சீல நடையாற் செந்தமிழைப்
பேறென் றுயர்சை வப்பயிரைப்
பெரிய நெறியிற் பேணிவந்தார்
ஆறும் மதியும் அலங்காரம்
அளிக்குஞ் சடையோன் அமைதிபெற்றார்.

மதுரைத் தமிழ்ச்சங் கம்வளர்த்த
மலராம் எனுஞ்செந் 'தமிழ்' ஏட்டில்
புதிதுபுதிதாம் விருந்து கொளப்
புலமை ஆக்கக் கட்டுரையால்
விதம் விதமாம் விளக்கங்கள்
விரிக்கும் பணியால் அணிபெற்றார்
மதிநுட் பத்தை அளப்பதற்கென்
மதிபோ தாமைக் கென்செய்வேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடும் நூலகமாய் நல்லோர்க்கு
நயம்பெருக்கும் நன்நூ லென்கோ!
படமாடும் மாளிகைபோற் பசுந்தென்றற்
பாகுதமிழ்ச் சித்த மென்கோ!
தடமாடும் மலரென்கோ தரளமணி
முத்தென்கோ! சைவ மென்கோ!
நடமாடி அருளென்கோ! நாவலர்பொன்
மணியென்கோ! நவில்வ தெங்ஙன்!

அழியாத செந்தமிழ்போற் கற்பகம்போல்
அடக்கமணிப் பெட்டகம் போல்
சுழியாத முகமலர்ச்சி வாடாத
சுடர்நந்தா விளக்க மென்கோ!
பழியாதும் படராநல் லொழுக்கமுடன்
பைந்தமிழ்பா ரித்துப் போற்றி
எளிவந்த காட்சிதரும் இனியதமிழ்
வித்வமணி நாமம் வாழ்க!

**(யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் வீமன்காமம் பாடசாலையில் உயர்திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தலைமையில் நடந்த கவியரங்கில் பாடப்பட்டது.)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள்மேல் அன்புததும்பப் பாடிய

# செய்யுள்கள்

பரந்து விரிந்த பண்புநடைப்
பண்டித மணிகண பதிப்பிள்ளை
சுரந்த தமிழ்த்தீந் தமிழ்நடையைச்
சுவைத்தோர் தமிழைச் சுவைத்தோராம்
பெருந்து றைத்தேன் குருந்தநிழற்
பெருமான் கொண்ட குருக்கோலம்
அருந்த விருந்த சிவஞான
போத விருந்தும் அவரளிப்பார்.

நாவலர் பணியை மெச்சி
நைந்துநைந் துருகி நாளும்
காவலர் பெருமான் கட்டிக்
காத்தசை வத்தைத் தமிழைச்
சேவையால் உயர்த்தும் பணிக்கே
சித்தம்வைத் துறுதி பூண்டு
பூவையர் மணம்பே ணாது
பூந்தமிழ் மணம்பெற் றுயர்ந்தார்.

புலவர் குமார சுவாமியெனப்
போற்றுங் குருவைத் தலைவணங்கி
நிலவைத் தலைமேல் வைத்தாரை
நெஞ்சில் நிறுத்தித் தமிழ்கற்றுப்
புலமை பூத்துப் புண்ணியமாம்
சைவச் சீலப் பொலிவுடனே
கலைஞன் கணப 'திப்பிள்ளை
கருதுந் தெய்வக் கதிபெற்றார்.

கந்த புராணக் கலாசாரங்
கனிந்த சைவா சாரமெலாஞ்
சிந்திப் பெருகுந் தேனாறு!
சிந்தைக் கினிய! செவிக்கினிய!
முந்திக் கொள்வார் முழுமுதலை
முற்றுங் கொள்வார் மோசமில்லார்
பிந்திக் கிடந்த பேதையென்மேற்
பிரியம் வைத்தார் பேராசான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயஞ் சமயமெனச்
சாந்தம் மணக்குங் கட்டுரைகள்
இவர் தமைவென் றானந்தத்
தமர்ந்த மோனப் பொன்னுரைகள்
கைவண் ணத்தே னலங்காரம்
கரும்பு மொழிக்கு மொழிசுவைக்கும்
கைவண் ணத்தால் நம்முள்ளம்
கனிந்து பெருகுஞ் சன்மார்க்கம்.

தக்க காண்டத் துரைவளத்தால்
தழைக்குந் தமிழர் பண்பாடு!
சுக்கு நூறாய்ப் பகையிருளைச்
சுட்டுப் பொசுக்குஞ் சுடர்வடிவேல்
கச்சி யப்பர் கனிச்செய்யுட்
கடலில் மூழ்கிக் களித்திடலாம்
பச்சைப் பெருமான் மருகர்மு௫
கேசன் அருகே வாழ்ந்திடலாம்.

கம்பன் கவிதைக் காவியங்கள்
காலத் தழியா ஓவியங்கள்
நம்பன் இராமன் நாமத்தால்
நமக்கு வாய்க்குஞ் சேமத்தால்
செம்பொற் செஞ்சொற் சித்திரங்கள்
தீட்டுங் கையைத் தீதீண்டா
எம்பொன் இலக்கிய கலாநிதியை
இதயந் தழுவ வாழ்த்தேனோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி 'ராமதாஸ்'

பாரத நாடு ஞானப்
பண்பிலே செழித்த நாடு
வீரகா வியங்கள் பாடும்
வித்தகர் பிறந்த நாடு
சீரடி யார்கள் அன்புத்
திருநெறிச் சிறப்பு நாடு
பூரண சித்தர் யோகர்
புண்ணியம் பூத்த நாடு.

தென்றமிழ் உருக்கும் அன்புத்
திருமுறைத் தேனா றோடிப்
பன்னெடுந் திக்கும் பாய்ந்து
பக்தியைப் பெருக்குந் தொண்டால்
உன்னரும் பயனை அள்ளி
உலகெலாம் உறுதி காண
நன்னெறி பரப்பும் நாடு
நமதுபா ரதப்பொன்நாடு.

தாரக மந்தி ரம்போல்
தலமெலாந் தாங்கும் செம்மைப்
பேரறி வாளர் தோன்றும்
பெருமையால் உயர்ந்த நாடு
நாரணக் கடவுள் வானோர்
நல்லருள் பொழிந்த நாடு
ஆரணம் முழங்கும் நாடு
அணிகொள்பா ரதப்பொன் நாடே.

இத்திருப் பொன்னா டெங்கும்
எண்ணிலா ஞானத் தொண்டர்
முத்திபெற் றுயர்ந்த போகம்
முடிவிலே பெற்றா ரன்றி
பக்தியாற் பண்பால் அன்புப்
பணியினால் பயன்பெற் றோங்கும்
சித்திசேர் வழிகள் காட்டிச்
சென்றதும் பழமை யன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டிலே சிறந்த சான்றோர்
தூநெறி துலங்கி ஓங்கக்
கண்டுநாம் வணங்கும் ஞானக்
காட்சியர் கலிகா லத்தே
உண்டெனும் அருமை தோன்ற
உதித்ததோர் ஞான பானு!
எண்டிசை இருண்ட தந்தோ!
இராமதாஸ் ஒளித்த தெங்கே.

கன்னடப் பொன்னாள் செய்த
கடுந்தவக் கற்பி னாலே
முன்னையோர் ஞானப் பண்பாம்
முகை நெகிழ்ந் தவிழ்ந்த பொற்பூ
தன்னிக ரில்லா ஞானம்
தலைச் செருக் கில்லாமோனம்
பன்னரும் ராம தாசின்
பங்கய முகங்கா ணோமோ!

ஞானதத் துவப் பேராளன்
நாட்டினுக் கோர்சீராளன்
நானெனும் செருக் ககற்றி
நற்றொண்டு புரிந்த ஞானி!
கூன்நிமிர்ந் தழகு கூட்டுங்
குவலயங் கூப்பும் ஆசான்
மோன வான் முகடு ராம
தாஸென முழங்க லாமே.

ஏட்டிலே திளைத்த கல்விச்
செருக்கிலே இடர்ப் படாமல்
வீட்டிலே சுவைக்கும் போக
விருந்திலே வீழ்ந் திடாமல்
நாட்டிலே மூட்டும் ஆன்மப்
பணியிலே நாட்ட முள்ளோன்
கூட்டினை விட்டே ஞானக்
குருவிதான் பறந்த தெங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனழுக் கில்லா யோக
பூமிமேற் படிகள் தாண்டிக்
கலகதத் துவங்கள் சீறும்
கடும்புயல் அடக்கிக் காட்டும்
துலவுக்கோர் சிந்தை யாளன்
துறவுக்கோர் ராமதாஸன்
குலவுசன் மார்க்க ஞான
குருவெனக் கூப்பு கின்றோம்.

சேவையால் நின்னோ டொக்கும்
சிவானந்த சரஸ் வதிக்குப்
பூவிலே நினைப் பிரிந்தே
போனவெந் துயரம் போக்கத்
தேவரால் இயலா தென்ற
செய்திகேட் டோடி னாயோ
ஆவிநீ அன்பர் கூவும்
அழைப்புக்கு மீண்டும் வம்மின்!

வீரனாம் விவேகா னந்த
விளக்கொளி புதுக்கும் ஞானப்
பாரகா வியநூல் காட்டும்
பக்குவ நிலைக்குத் தக்கோய்
மாரனார் தொடுக்கும் அம்பு
மழுங்கவே தீட்டும் வாய்மைக்
கூரிய வாட்போர் வீரா
குழைந்தழுங் குரல்கே ளாயோ!

மதவெறி மயக்க மில்லா
மாதவ யோகி தியாகி
நிதம்புரி சேவை யாகும்
நித்திய பூசை செய்வோன்
சுதந்தரப் பறவை துன்பக்
கடலுக்கோர் ஞானக் கப்பல்
இதயமோர் ஞான போதம்
இராமதாஸ் இன்ப நாதம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புருவக் கர்ாதிமகான் அகன்றார் மற்றோர்
அருள்முனியாம் ரமணிரிஷி தானு மில்லை
என்புருக்கும் அரவிந்த யோகி எங்கே?
இந்தியநாட் டிருப்புக்கோர் இனியா ரிங்கு
முன்பிருந்த முத்தர் சித்தர் பத்தரெல்லாம்
முழக்கியசன் மார்க்கநெறி முளைத்துப் பூத்துப்
பின்பிருக்க ராமதாஸ் பெற்றி ழந்தோம்
பேசரிய நட்டத்துக் கீடா ருண்டோ!

(மட்டக்களப்பு - ஆனைப்பந்தி மகளிர் கல்லூரியில் சுவாமி ராம்தாஸ் மறைவுக்காக டொக்டர் சிவஞான சுந்தரம் தலைமையிலான இரங்கற் கவியரங்கில் பாடிய செய்யுள்கள்.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு கலாசூரி, மகாவித்துவான்

# எவ். எக்ஸ். சி. நடராசா அவர்களை விதந்து பாடியது

சந்தனச் சோலைப் பொதிகையிலே – தமிழ்த்
தென்றல் உலாவரும் வீதியிலே
சிந்தனைக் கற்பனைக் கோட்டத்திலே – ஞான
தேசிகன் ஒருவனென் தியானத்திலே
சங்கத் தமிழ்ஊஞ்சல் ஆடுகின்றான் – அங்கே
சந்தனங் குங்குமம் சவ்வாது
பொங்கிடும் அருவிகள் பூத்தனவே – சற்றுப்
பொறுத்திருந் தேன் விறுவிறுப் படைந்தேன்.

மாநெடு மால்போல் மாண்புடையான் – அவன்
மதுரத் தமிழ்த்தாய்ப் பற்றுடையான்
மாபெரு வித்துவான் எனவளர்ந்தான் – அந்த
மகிபன் எவ் எக்ஸ். சீ. நடராசன்
வான்மிகி முனிவனின் வடிவென்பேன் – என்
வாட்டமெல்லாம் பறந் தோடினவே
தேனொடு பால்கலந் தெனக்களித்தான் – கலைத்
தெய்வத்தை நான்மறந் துயிர்வாழேன்.

மாமணியாள் மட்டக் களப்பன்னை – அவள்
மலரடிப் புழுதியில் தவழ்ந்தவன்யான்
தேமணி ஒலித்ததென் சிந்தையிலே – தமிழ்த்
தேசிகன் கொலுவரக் கனவுகண்டேன்
கோமணி வெள்ளணி என்பதெனக் – கேட்டுக்
கூக்குரல் போட்டொரு பாட்டிசைத்தேன்
நாமணி பாமணி சூட்டி விட்டேன் – அவன்
நல்லணி வெள்ளணி தழைத்தோங்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியச் செம்மலென் றிசைவளர்த்தான் - பொங்கும்
இன்பத்திலே மனந்திளைத் துருண்டேன்
கலக்கமொன் றறியாக் கட்டழகன் - அவன்
கலங்கரை விளக்கம் போலானான்
துலங்கும் எழுத்துநடை துள்ளுநடை - அவன்
சொல்லுரை உரைஆ சிரியர்நடை
இலக்கண நூல்பல வரிசையிட்டான் - அவன்
இதயத்தின் ஆழத்தை என்சொல்வேன்.

நாட்டுப் பாடல்நயம் எடுத்துரைப்பான் - பண்டை
நாவலர் பாவலர் பற்றுடையான்
ஊட்டும் புலவர்மணி பெரியதம்பி - உயிர்த்
தோழனின் வலக்கரம் போலுழைப்பான்
பாட்டைக் கேட்டுப்பர வசப்படுவான் - விபு
லானந்தன் ஆய்வுரை தெளிந்தறிந்தான்
வீட்டுக்கு வரும்பல மாணவர்க்குத் - தமிழ்
விருந்தளிப்பான் மொழிக் கரும்பளிப்பான்

பாட்டை நிறுத்தமனம் வரவில்லை - அவன்
பத்தினி மக்களுக்கோர் கைகொடுத்தான்
கேட்டுச் சுவைத்த பலபெரியோர்க்கும் - மலர்க்
கிண்கிணிக் காலழகுச் சிறுவருக்கும்
நாட்டுப் பணிபுரியும் நங்கையர்க்கும் என்
நாவிற் பிறந்த கவித் தேனளித்தேன்
சூட்டுங் கவிமாலை முத்தமிட்டேன் - தெய்வச்
சுந்தரி மட்டுநகர் வாழியவே!

வாவி வளம்படைத்த மான்கண்ணாள் - அவள்
மட்டக் களப்பன்னை தேன்அன்னை
ஆவிக் குரியவிபு லானந்தன் - அவன்
சீடன் புவவர்மணி பெரியதம்பித்
தேவி நல்லாச்சியென் அக்காள்என்பேன் - அவள்
திருமனை குருக்கள் மடத்திலென்பேன்
சேவைக் குயர்ந்த நடராஜவள்ளல் - அவன்
தெள்ளு தமிழறிவென் உண்மைஎன்பேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியிலே ஒருவன் பாடுகின்றான் - மகா
வித்துவான் உறவினை நாடுகின்றான்
சித்தத்திலே எனக்குக் குருவானான் - இதிற்
சிறுதும் ஐயமில்லை வையமறியும்
வித்தகர்க் கோர் மகாவித்துவானாம் - இவன்
வெற்றி மட்டக்களப்பன்னைப் பூணாரம்
சுத்தசத்தி வாணி என்சொல்லிலுண்டு - ஞானச்
சுடர்விளக் கொன்றும் என் இல்லிலுண்டு.

மங்கலக் குருவிகள் பாடினவே - என்
வாய்மையிலே தூய்மை பிறந்ததுவே
சிங்காரச் சிலுவையில் யேசுவைக்கண்டேன் - தியாகத்
தெய்வத்தை மறந்துநான் உயிர்வாழேன்
பொங்குக பல்லாண்டு வைரவிழா - தமிழ்ப்
பூமி வளம்பெறுக தமிழ்வளர்க
தங்கத் தமிழ்ப்பலகை நான்கண்டேன் - தெய்வச்
சரவணப் பொய்கையும் வாழியவே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டித, வித்துவான் வி. சீ. கந்தையா அவர்களின்

# நினைவாஞ்சலி

மாமணி மட்டு நகர்ப்பொன்னாள்
மாண்புகழ் அன்பு மணம்வீச
மண்டூ ரன்னை நினைப் பெற்றாள்
மடியில் வளர்த்தித் தாலாட்டும்
தேமணி மழலை பொழிந்தனையோ
தீந்தமி ழோடுற வாடினையோ
திங்களை வாவென் றழைத்தனையோ
தென்றலை அன்பொடு தழுவினையோ
மாமது ரத்தமிழ்ப் பண்டிதனாமுயர்
மன்னு திராவிடப் பண்டிதனாம்
மாநில மெங்குந் தமிழ்வளர
மாபெரி யோருளந் தான்மகிழக்
கொண்ட லெனக்கவி கொட்டினையோ
குலமணி மரபுக் கொளிவிளக்கே!
கொஞ்சு தமிழ்க்கொரு கந்தையாக்
கோமக னோஎன தண்ணாவோ!

மண்டூர்க் கந்தன் வீதியிலே
வடதென் சேரி விளையாடும்
வம்மிக் கொம்பு மரம்பேசும்
மாமகள் கண்ணகி வரலாறாம்
கண்டூர் காவியக் குயில்பாடக்
கான வசந்தன் அடித்தாட
கன்னித் தென்தமிழ் இசைபொழியக்
காளையர் கொம்பு முறித்தாட
வண்டூர் வம்மி மலர்சொரிய
மாமண இன்பத் தென்றல்வர
வசந்தப் பொன்மகள் வடிவொழுக
மத்தள சல்லரிக் கூத்தாட
கொண்டல் திரண்டபூங் குழல்மடவார்
குரவைகள் ஆர்ப்பக் கண்ணகித்தாய்க்
கோயில் வலம்வரு கந்தையாப்
பண்டிதன் தண்டமிழ்க் கொடிஆடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் வித்தகன் சாமிவிபு
லானந்த மாமுனி யாழினிக்க
முந்தைத் தமிழிசை மரபினிலே
முழுமதி நிறைவெண் ணிலவினிலே
தத்தைய ராமநீ ரரமகளிர்
தாமிசை பாடும் மட்டுநகர்
தரளச் சுடரொளி வாவியிலே
தண்டமி ழின்பம் வழிந்தோட
வித்தைத் தேனிசை நூல்விரித்து
வி. சீ. ப் பண்டிதன் கந்தையா
விண்ணோர் புகழ்விபு லானந்தன்
இசைவிருந் துண்ண விரைந்தனனே
உத்தமி கங்கேஸ் வரிமனையும்
உயர்பொன் மக்களும் ஓலமிட
ஒருபெரு நண்பர்கள் சுற்றமெலாம்
உள்ளங் குழைந்தழ ஒளித்தாயோ.

ஊர்ஊர் தோறுமோர் கோயிலென
உண்டது கண்டது தொண்டென்றே
ஊக்கமோ டோடி உழைத்தெழுதி
ஒப்பில்மெய்ச் சைவ நெறிநிறீஇ
பேர்பெறும் இந்து கலாசாரப்
பேரவை மந்திரி நூல்வடிக்கப்
பெருமணி செய்துனை வரவேற்கப்
பேசிய வாசனைத் தமிழ்மலர
சீர்பெறு வீ. சீக் கந்தையா
செந்தமிழ்ச் சேவை அளப்பரிதாம்
சிறந்தது சைவசித் தாந்தமொடு
செழித்தது வேதவே. தாந்தம்பார்
நார்பெறும் முள்ளக் கோயிலிலே
நம்பன் சிவபெரு மான்காட்சி
நல்கிட நல்லருள் நெறியினிலே
நாடு மகிழ்ந்திடச் சென்றனரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பற்பல பெற்றவராம்
பாரத யாத்திரை செய்தவராம்
பைந்தமிழ் விரிவுரைப் பணியினிலே
பன்னூ றாயிர மாணவராம்
மட்டக் களப்புத் தமிழகப்பொற்
பனுவல் படைத்தநற் பண்டிதராம்
மங்கைகங் கேஸ்வரி மனைவியொடு
மதுரத் தமிழ்நடை இல்லறமாம்
சுட்டும் நல்லற நெறியினிலே
சுடர்விளக் கென்னச் சூழ்ந்தவராம்
தோன்றல்கள் நால்வருங் கல்வியிலே
துலங்கிடத் தொண்டு புரிந்தவராம்
வட்டக் களரிக் கூத்தினிலே
வடதென் மோடி அறிந்தவராம்
வானுல கோர் தமிழ்ஓதிடவே
மண்ணுல கந்தொழச் சென்றவராம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் பூபாலபிள்ளை அவர்கள் பண்பு

பண்டிதர் பூபால பிள்ளை
பண்பினைச் சற்றுக் கேளீர்
கொண்டகொள் கையிற்கா லூன்றிக்
குறிதவ றாது நிற்பார்
மண்டலம் எதிர்த்த போதும்
மனங்கலங் காத நெஞ்சம்
விண்டிடும் வார்த்தை யெல்லாம்
வீரகெம் பீரம் முழங்கும்.

தாய் மட்டக் களப்பா மென்றால்
தலைநிமிர்ந் தெழுச்சி காட்டி
வாய்வெட்டுக் காரர் நாணி
வழிதெரி யாமல் ஓட
ஓய்விலா துழைத் துழைத்தே
உயர்பணி செய்வா ரென்றும்
காய்சினத் துள்ளே பாசக்
கனற்பொறி தெறித்துக் கக்கும்.

வித்தகன் விபுலா னந்தன்
விழுத்தகு சீட னாகும்
பத்தரை மாற்றுத் தங்கப்
பதக்கம் போற் பளபளக்கும்
சுத்த மெய்ஞ் ஞானி போலச்
சுடரொளி முகத்தில் வீசும்
முத்தமிழ் முழக்கஞ் செய்யும்
மூதறி வாள னென்கோ!

ஆசிரிய கலாசா லைக்கோர்
ஆண்சிங்கம் வாய்த்த தொக்கும்
பேசும்போ தகப்பொரு ளின்பம்
பீறிட்டுப் பெருகி ஓடும்
வாசனை மட்டக் களப்பு
மண்ணென்றே மார்பு தட்டிப்
பூசனை புரியும் போதும்
புன்னகை முறுவல் பூக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராமக் கிருஷ்ண ரென்றே
சீவனை மாய்த்து நிற்பார்
பேரான ராமக் கிருஷ்ணப்
பெரும்பணிக் கோடி நிற்பார்
தாரர்ள மாக அன்பு
ததும்பியே வழிந்து பொங்கும்
ஏராள மான கதைகள்
எடுத்தெடுத் துரைத்து நிற்பார்.

தமிழ்தமிழ் தமிழென் றோதித்
தாய்மொழிக் குரிமை தேடும்
அமிழ்தமென் மொழிகள் தோறும்
அருங்கலை இன்பம் ஆர்க்கும்
தமதுமா ணவரைக் கண்டால்
தளர்நடை வேண்டா மென்று
நமதுபண் டையவீ ரத்தை
ஞாபகப் படுத்திச் செல்வார்.

வாரத்து வெள்ளி தோறும்
மாமாங்கப் பதியென் றோடிச்
சாரத்தை எடுத்துச் சொல்லித்
தனித்திரு வாச கத்தை
ஈரத்தை இனிது பாடி
இதயக்கண் ணீர் சொரிந்து
பாரத்தைத் துரும்பாய்ச் செய்வார்
பண்டிதர் பூபால பிள்ளை.

மரக்கறித் தோட்டஞ் செய்வார்
வயலிலே கொடுக்குக் கட்டி
செருக்கொடு திரண் டடர்ந்த
களைகளைத் திருகிச் சேர்ப்பார்
தரக்குறை வான செய்கைத்
தலைவரைப் பொறுக்க மாட்டார்
பரக்கும்பைந் தமிழைக் கேட்டுப்
பைங்கூழ்வான் முகட்டை முட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசஞ்செய் வோரைக் கண்டால்
நடுநின்று தடுத்து நிற்பார்
பாசமோ டான்ம ஞானப்
பைந்தமிழ்ப் பயிர் வளர்ப்பார்
நேசமோ டெல்லோ ருக்கும்
நீதிநன் னெறியே சொல்வார்
வீசிளந் தென்றல் கொஞ்சும்
வீதியில் உலாவி வருவார்.

கமத்தொழில் நாட்டத் தோடு
கைத்தொழில் விருத்தி காண்பார்
சிவத்தொழிற் பணிகள் செய்யுஞ்
சேவையே சேவை யென்பார்
அமைத்ததோர் கவிதை பாடி
அதன்பொருள் விரித்து நிற்பார்
சமைத்தது வாய்த்து விட்டால்
சரமாரிப் பேச் சொலிக்கும்.

இலக்கணம் எடுத் துரைத்தே
இலக்கியத் தமைதி காட்டிக்
கலக்கத்தை நீக்கி நல்ல
கவிநயஞ் சுவைக்கச் செய்வார்.
குலக்கொடிக் கேற்ற வீரக்
குருகுலக் கொம்பன் யானை
விலக்குவ விலக்கி நாளும்
வேண்டுவ வேண்டி நிற்பார்.

நெற்றியில் நீறு பூசி
நித்தனை நினைத்துப் பேசி
உற்றமெய்ப் பொருளை உள்ளி
உறுபகை யனைத்துந் தள்ளி
பற்றுவ பற்றிப் பற்றிப்
பரமனார் கோயில் சுற்றிக்
கற்றிடும் மாண வர்க்கோர்
கலங்கரை விளக்கம் போல்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புடன் நடந்து கொள்வார்
வேதனை மனத்தில் இல்லார்
பழிப்பன செய்ய மாட்டார்
பாசாங்கு வேடங் காட்டார்
வழிப்போக்கர் மனைக்கு வந்தால்
வாட்டத்தைக் குறிப்பாற் கண்டு
உழைப்பிலே சிறிதென் றாலும்
உவந்தளித் தனுப்பி வைப்பார்.

நாடகக் கூத்தும் வல்லார்
நகைச்சுவை தனிலும் வல்லார்
வீடக வெளிச்சம் போலும்
விழுமிய பண்பு சாலும்
பாடகர் பத்திப் பாட்டிற்
பரவசப் பட்டுக் கேட்டு
ஊடகத் துறுதி யுள்ளார்
உளங்கலந் துறவு கொள்வார்.

குழந்தைபோற் கொஞ்சு தமிழைக்
கூறுவார் ஏறு போல்வார்
வளர்ந்திடும் பிள்ளை கட்கோர்
வழிவிளக் காகி வாழ்வார்
குழைந்துநைந் துருகிக் குழந்தை
முருகனைக் கை குவிப்பார்
இழந்ததைப் பற்றி எண்ணார்
எங்கள்பூ பால பிள்ளை.

சமுதாய நலத்தை யன்றித்
தன்னலங் கருத மாட்டார்
நமதுபொன் மட்டக் களப்பு
நல்லதோர் வளநா டென்பார்
எமதுசெந் தமிழின் பத்தில்
என்றுமே திளைத்து நிற்பார்
தமர்பிறர் என்று பாரார்
தமிழினந் தழைக்க வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகச் செருக்குக் காட்டார்
வீறாப்புப் பேச மாட்டார்
பத்தரைப் பணிந்து நிற்பார்
பாடலோ டாடல் செய்வார்
சித்தரைப் போல வாழ்வார்
சீறிப்பாய்ந் துறும மாட்டார்
தத்துவங் கடந்த சோதித்
தாடலை வணக்கஞ் செய்வார்.

பட்டத்தைப் பதவி தன்னைப்
பதரெனத் தள்ளி வீசிக்
கொட்டத்தை அடக்கிக் கெட்ட
குணக்கேடர் தமைத் திருத்தி
நட்டத்துக் கஞ்ச மாட்டார்
நயத்தையுங் கெஞ்ச மாட்டார்
கட்டத்தைப் பாரா தென்றுங்
கடமைக்கு முந்திச் செல்வார்.

புலவர்கள் சூழ்ந்த மட்டக்
களப்பன்னை உளம்பூ ரிக்க
புலவர்பூ பால பிள்ளைக்கோர்
பொற்சிலை எடுப்ப தெப்போ?
பலவரு டங்கள் போச்சு
பறந்தது நமது மூச்சு
சிலைவைத்துச் சிறப்புச் செய்யுஞ்
சேவைக்கு விரைந்து வாரீர்!

பிறநாட்டைச் சுற்றிப் பார்த்த
பெரியோரைக் கேட்டுப் பாரீர்
நிறமத சாதி பேதம்
நிலைத்தென்றும் நிற்ப தில்லை
குறையினைத் திருத்திக் கொள்வோம்
குறிக்கோளைச் சேர்மின்! விழிமின்!!
இறைவனின் அருளால் யாவும்
இன்பமாய் முடியும் மாதோ!

சொல்வன சிறிது சொன்னோம்
சுவைப்பன சுவைத்துக் கொள்வீர்
வெல்லுதல் தோற்றல் வாழ்வில்
வெறும்விளை யாட்டுப் போலாம்
வல்லவேல் முருகன் அன்பால்
வானாடு மகிழ்ந் தடைந்தார்
நல்லபண் டிதர்பூ பால
பிள்ளைதன் நாமம் வாழ்க!

—★—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப்பீடப் பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள்மீது

# நினைவுச் செய்யுள்கள்

எறிந்த கொடுங் கணை செவியைப் பிளந்ததென்கோ!
இக்கொடுமை பெருங்கொடுமை கொடுமை என்றே
அறிந்தறிந்துன் அன்பரெல்லாம் உளங்கலங்க
ஆசிரியப் பேருலகம் ஐயோ என்ன
மறலிவிட்ட கொடும்படைவாய் மடுத்த தென்கோ!
மாமணிசந் திரசேக ரப்பே ராளன்
நிறைந்த கலைப் பொற்குடந்தான் நொறுக்கிற்றாமோ!
நெட்டூரக் கொடுநெருப்புச் சுட்ட தந்தோ!

எப்படியுன் உயிர்துடித்துப் பிரிந்த தென்ன
எண்ணுவார் நெஞ்சமெல்லாம் எரிந்து பற்ற
கொப்பளித்துன் உடற்குருதி கொட்டிக்கொட்டிக்
குற்றுயிராய்க் கிடந்துழன்று முடங்கி னாயோ
அப்பாவி மக்களுயிர் குடித்த கூற்றம்
அற்றம்பார்த் தறிஞனுயிர் குடித்ததாமோ!
ஒப்பாரி வைத்தழுதாள் மண்டூ ரன்னை
உனைக் கிடத்திக் கதைகேட்ட மடியைப்பார்த்தாள்!

கல்விக்கோர் வரம்பாகிக் கலைஞ னாகிக்
காணுந்தாய் மட்டுநகர்க் கிளை யாகி
பல்கலையாழ்க் கழகப்பே ராசா னாகி
பட்டப்பின் மாண வர்க்கோர் பாட மாகி
நல்லாற்றுப் படைக்கோர்நக் கீரனாகி
நாடுவிபு லானந்தப் பணி புதுக்கும்
சொல்லாற்றுச் சந்திரசே கரன்ஜொலித்த
சுடர்நந்தா விளக்கிழந்து தமிழ்த்தாய் சோர்ந்தாள்.

பிறந்தது மண்டூர் மண்ணில்
பிஞ்சிளங் கல்வி பூப்பச்
சிறந்தது சிவானந் தாவில்
சேவையில் கலைக்கூ டத்தில்
நிறைந்தது ராமக் கிருஷ்ண
நெறியினில் நிறை குடம்போல்
உறைந்தது யாழ்ப்பா ணத்தில்
உயிரொளி மறைந்த தென்கோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பணிக்கோ ரணிபுதுக்கிக்
காட்டும் பகவான் சத்யசாயி
நல்வழிச்செம் புலத் தோய்ந்து
நயந்து வியந்து நனிசுவைத்து
பல்கால் அறிஞர் பேரவையிற்
பரிந் துரைக்கும் பேருரைத்தேன்
சொல்விற் பன்னன் சந்ரசேகரன்
சொல்லோ வியப்பொன் சொரிந்தொளித்தான்!

உடம்புக் கூறு செய்தாலும்
உணர்ச்சிக் கூறு செய்வாரோ?
உடம்புச் சுமையைப் பேணாமல்
உயர்ந்தோர் பண்பைப் பேணியநீ
நடந்த புல்லுச் சகாதாம்
நமனார் கொடுமை ஆகாதாம்
உடமை கல்விச் செல்வமல்லால்
மற்றோர் உடமைப் பற்றில்லாய்!

புலவ ரெல்லாம் புகழ்பெரிய
தம்பிப் பிள்ளை அண்ணாவின்
பலசிந் தனைத்தேன் சீதைவெண்பாப்
பகவான் பணிக்கோர் அணியாகி
அலசிப் பலநூல் ஆய்ந் தாய்ந்து
ஆழ்ந்த நுண்மாண் நுழைபுலத்தோய்
வலிது வலிது விதிவலிது
வைய்ய வாழ்வோர் மயக்கமட்டா!

வடக்குக் கோர் நாவலன்போல்
கிழக்குக் கோர் விபுலானந்தன்
வடக்கொடு கிழக்குப் பூத்த
வரிசைக் கோர் சந்திரசேகரன்
முடக்கெலாம் நிமிர்த்துங் கல்வி
முகத்தலங் காரங் காட்டும்
உடுக் கணைச் சந்ரோ தயப்பொன்
ஒளிநிலாப் பட்ட தந்தோ!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கம்பன் இளங்கோ வள்ளுவனார்
கல்விக் கரும்பு மொழிபிழிந்து
செம்பொன் மேனாட் டறிஞர் பண்புச்
சிந்த னைத்தீஞ் சுவைகலந்து
நம்பொன் னாட்டு மாணவர்க்கோர்
ஞானக் கனிபோற் பசிதீர்க்கும்
சந்திர சேக ராநீயும்
சடுதிப் பயணம் போனாயோ!

மூங்கி லாற்று வயல்காட்டி
முனிவன் தனிநா யகஅடிகட்(கு)
ஓங்கும் இயற்கை அழகூட்டி
உள்ளங் குளிர நீராடி
கோங்கு பூத்த தில்லைமண்டூர்க்
கோயில் வீதி வட்டமிடும்
ஆங்கி லத்தோ டழகுதமிழ்
அலங்கா ரத்தேர் உடைந்ததடா!

உலகப் பெரியோ ருள்ளத்தே
ஊறும் பண்புத் தென்றலிலே
பலகற் பனைத்தேன் மலர்பூத்த
பண்ணைக் கல்விப் பயிர்வளர்த்து
கலகப் போலிக் களை யகற்றிக்
காதலன்பு நீர் பாய்ச்சி
குலை குலையாய்ப் பயன்கொடுக்குங்
கொற்றக் கொம்பு முறிந்ததந்தோ!

பார தத்தாய்ப் பண்பாய்ந்து
பகற்செஞ் ஞாயிற் றொளிபரப்பிக்
கூர்ந்த புலமைப் பரிசில்பெற்றுக்
குறிக்கோள் தவறாக் குணங்காட்டிச்
சார்ந்த கல்வித் தத்துவத்தைச்
சான்றோர்க் சமுத மெனப்படைத்துச்
சேர்ந்த புகழாம் ஈழத்தாய்ச்
சேவை மூச்சு நின்றதடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமேதை சோக் கிறற்றி
வாழ்ந்தபொன் னாட்டைக் கண்டு
ஆ! மேதை அறிவுக் கோயில்
அழகு நாடென்னப் போற்றிக்
கோமேதை இலட்சி யத்தைக்
குறிபார்த்துக் கல்வி யூட்டும்
நாமேதை சந்திர சேகர
நாவலன் மறைந்தான் அந்தோ!

ஏழை எளியோர் எதிர்ப்பட்டால்
இனிய முறுவல் முகம்பூத்துக்
கோர்ழை தீர்த்துக் குணங்கொடுத்துன்
கொடைக்கை நீளுங் குறிப்பினிலோர்
கூழென் றாலும் மாக் சியத்தேன்
குலவுங் கொள்கை கொஞ்சுமடா!
தோழர்க் குதவுந் தோள்வலிமை
சோரப் பயணம் போனாயோ!

பற்பல அறிஞர் பூத்த
பல்கலைக் கழகந் தன்னில்
கற்பவர்க் கிலக்கி யம்போற்
காவியப் பாயிரம் போல்
சற்குணச் சால்புச் சந்திர
சேகரச் சான்றோய் நின்னைப்
பெற்றவர் உற்றார்க் கெல்லாம்
பெரும்புகழ்ப் பேறாய்ச் சென்றாய்!

(யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கல்வித்துறைப் பேராசிரியப் பணிபுரிந்த திருவாளர் ப. சந்திரசேகரம் அவர்களின் அகால மரணச் செய்தி செவிக்கெட்டியபோது பாடிய இரங்கற் செய்யுள்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்த மண்டூர்க் கவிமணி த. வீரசிங்கம்மீது பாடிய

# நினைவுக் கவிதை

தில்லை மண்டூர்க் கந்தனென்றால்
 தீரா நோயுந் தீர்ந்ததெனச்
சொல்லிப் பாடிச் சுகங்கண்டு
 துள்ளி யாடுங் காவடிகள்
வல்ல தங்க வேல்முருகன்
 மலரடிக் கோர் தமிழ்மாலை
கல்லும் உருகக் கனிந்திசைத்த
 கவிமா மணிகாண் வீரசிங்கம்!

இரட்டைப் புலவர் நாங்களென
 இதயங் கலந்து கொண்டாடி
தெருட்டுந் தெய்வப் பாட்டிசைத்துத்
 தித்திப் பூட்டி விருந்தளித்தோம்
முரட்டுச் சமூகத் துறவாலோ
 முன்னாள் செய்த வினையாலோ
வெருட்டுங் காலன் விளையாட்டோ
 விதியோ சதியோ நீபிரிந்தாய்.

பொன்னாட் டமரர் நீபாடும்
 பூரிப் பான கவிசுவைத்து
என்னாட் டவர்க்கும் எட்டாத
 இனிய சுகம்பெற் றுய்ந்தார்கள்
என்னாட் டத்துக் கன்பாயென்
 இதயத் துள்நீ இருக்கின்றாய்
உன்னாட் டத்துக் கன்பாய்நான்
 ஓடி வருவேன் பொறுத்திருப்பாய்!

வடதென் மோடிக் கூத்தியற்றி
 வளரும் பயிர்க்கோர் வழிசமைத்துச்
சுடச் சுடநாம் பாட்டிசைத்துத்
 துள்ளி யாடும் அந்நாளைப்
படைக்கும் பாட்டால் அலங்கரித்தோம்
 பைந்த மிழ்த்தாய்ப் பணிபுரிந்தோம்
முடக்குங் கால முடக்கினிலே
 கிடக்குங் காலங் கழிந்ததடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலித் தேன் கவிதையென்ன
        வட்டக் களரிக் கூத்தென்ன
தேனொலித் தீம் இசையென்ன
        தேடும் புதுமை மெட்டென்ன
கானொலித் தீங் குயிலென்ன
        கதைக்கும் மழலைக் கிளியென்ன
நானொலிக்க நீ யொலிக்க
        மீண்டும் பிறவி நாமெடுப்போம்.

பாவலன் வீர சிங்கம்
        பறந்தெனைப் பிரிந்த போதும்
தேவ தேவன் திருவருளால்
        திரும்பவுஞ் சேர்ந்து வாழ்வோம்
காவலன் கருணை மண்டூர்க்
        கந்தனார் கடாட்சம் நம்மைச்
சேவைக்குத் தூண்டும் இன்பச்
        செந்தமிழ்க் கொடியும் ஆடும்.

பரம்பரைப் பாட்டன் பூட்டன்
        பவித்திரக் கலை வளர்த்தோம்
மெருகிட்டு நாம் புதுமை
        மேவிட இசை யமைத்துச்
சொருகிய கிடுகுக் கட்டும்
        சுதந்த்ரக் கவிதை பாடும்
பெருக்கெடுத் தோடும் வெள்ளம்
        முன்அணைக் கட்டென் செய்யும்.

சீவனுள்ள மட்டு முன்னைச்
        சிந்தை மீது வைத்தன்பாற்
சேவைக்குத் துணிந்து செல்வேன்
        செந்தமிழ்ப் பூங்கா வைப்பேன்
பூமியில் தமிழ்த்தாய் உரிமைப்
        போராட்டந் தணியக் கண்டேன்
சேமமாய்ச் செகமும் வாழும்
        சிறிதுநாம் பொறுத்துப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றித் தமிழ்க்கோர் முரசம்போல்
வேந்தன் கவிதை வீரசிங்கம்
முற்றுந் தனது பணிமுடித்து
முன்னே போக நான்பின்னே
சற்றுக் களைத்துத் தள்ளாடிச்
சறுக்கி விழுந்தும் நிமிர்ந்தெழுந்தேன்
பற்றுத் தமிழ்த்தாய்ப் பற்றல்லால்
மற்றோர் பற்றும் நமக்கில்லை.

மாமன் மருகன் நாமிருவர்
மண்டூர்க் கவிஞர் எனவாழ்ந்தோம்
காமக் கதிரை யாத்திரைக்கோர்
கைவிளக்காங் கவி சமைத்தாய்
சாமப் போதுங் கவிபாடித்
தாளத் தோடுங் கூத்தாடிச்
சேமத் தோடும் மகிழ்ந்திருந்த
செகஜா லத்தை என்சொல்வேன்.

—★—

## இனிய பண்பு நடை வாழ்க!

அன்னை மண்டூர் அறிவுமகள்
அசோகாம் பிகைஎன் மருமகளின்
மன்னும் மதுரத் தமிழ்ப்பாசம்
மலர்ந்த தென்றல் நடைவாசம்
'கொன்றைப் பூக்கள்' அடுக்கடுக்காய்க்
கொஞ்சுங் கதைகள் மிஞ்சுநயம்
என்றுந் தமிழ்த்தாய் இதயத்தின்
இனிய பண்பு நடைவாழ்க!

★



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களுவாஞ்சிக்குடி ஓவியப் புலவர்மணி திரு. புவனகேசரி அவர்கள் மீது

# நினைவுமாலை

கண்ணன் கோயிற் களுவாஞ்சி
குடிக்கோர் கைவல்லமா மணியென்கோ!
புண்ணி யப்பொற் படாம்விரித்த
பூந்தோட் டப்பூங் கோயிலென்கோ!
வண்ணத் தெய்வக் கோலமெல்லாம்
வாரி யெடுத்து வடிவாக்கும்
அண்ணன் புவன கேசரியை
அடியேன் மறந்து வாழ்வேனோ!

கைவண் ணத்தால் தீட்டுகின்றான்
கருத்தில் அமைத்துக் காத்ததெல்லாம்
மெய்வண் ணத்தால் உலகுமெச்ச
மேனி சிலிர்க்குங் காட்சியிலே
மைவண் ணத்தான் பாற்கடலில்
சேடன் மடியிற் பள்ளிகொண்டான்
துய்வண் ணத்தால் அலங்காரம்
துலக்கும் புவன கேசரியாம்.

மதி மயக்கம் பெற்றாலும்
மன மயக்கம் பெறாமன்னன்
அதிஅற் புதமாம் ஓவியங்கள்
அடியேன் பாடுங் காவியங்கள்
பதிஅற் புதமாம் படம்பார்த்து
பழிச்ச வம்மின் பத்தர்குழாம்
கதிஅற் புதமாங் கைநெல்லிக்
கனிபோற் பலிக்குங் காணீரோ!

அலைக்கடல் ஆழி தன்னை
அருணனின் வருகை தன்னை
கலைக்கடற் காட்சி தன்னை
கமலப்பூம் பொய்கை தன்னை
மலைக்குகை வாசன் தன்னை
மாங்கல்யக் கொடிமின் னாரை
பலப்பல கோணந் தன்னிற்
புவனகே சரிபார்க் கின்றான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கலைஞரைப் போற்றா நாடு
கவலை நோய்க் காடு வீடு
கலைஞரைப் போற்றா நாடு
கல்வியில் லாத காடு
கலைஞரைக் கை கொடுத்துக்
காக்குங்கற் பகப்பொன் னாடு
கலைஞரைக் காத்து ஞானக்
கண்பெற்று வாழக் காணீர்!

உலாவித் திரியும் வேளையிலே
கலைஞர்க் குதவி செய்வீரே
சுலாவும் வறுமை கலைஞர்க்குச்
சொந்தச் சொத்தாம் உணர்வீரே
பலாவைப் பழத்தைப் படத்தினிலே
படைத்து ஞானப் பசிபோக்கும்
கலாப மயிலைக் கலைமகளைக்
கலையைப் போற்றி வாழ்மின்னோ!

கலையை வளர்க்க வளர்வதல்லால்
கடைசி முடிவைக் காணோமியாம்
கலைஞர் முகத்தைக் கண்கொடுத்துக்
காப்போர் கடவுட் கரங்காக்கும்
மலையைக் குடைந்து சிற்பங்கள்
வடித்தோன் வண்ணச் சிற்பியன்றோ
கலையின் உயிரே கலைஞன்உயிர்
கை கொடுத்துக் காப்பீரோ!





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் போற்ற வருகவே!

உளஞ்சால் ராமக் கிருஷ்ணரருள்
உலாவி ஓங்கி விளையாடும்
வளஞ்சால் தில்லை மண்டூரில்
மலர்ந்த முருகன் திருவிழா
வலஞ்சால் வீதி வணங்கவரும்
ஆத்ம கனானந் தாவருக
நலஞ்சால் மண்டூர் மக்களுளம்
நன்று போற்ற வருகவே.

ஊக்கத் துறுதி குலையாமல்
உண்மை ராமக் கிருஷ்ணமகான்
ஆக்கப் பணிகள் புதுக்கவென
அல்லும் பகலும் உழைக்கும்அன்பு
தேக்கும் ஜீவர் னானந்தா
தில்லை மண்டூர்க் கந்தனருள்
வாக்குப் பலிக்கப் பணிபுரியும்
வாய்மை மணிகாள் வருகவே!

இராக வண்ணல் ராஜேஸ்வரா
னந்தன் மழலைத் தமிழினிக்கும்
இராமக் கிருஷ்ண பஜனையிலே
இரும்பு மனமுங் கரும்பாகும்
சரா சரங்கள் உயிர்க்குயிராம்
சாரதை மா தேவியன்பு
பராவும் பைந்தீந் தமிழ்மாலைப்
பயன்பெற் றோங்க வருகவே!

வெண்ணீ றணிந்த சடைக்கடவுள்
வீரச் சுடராந் திருமுருகன்
கண்ணீ ரருவி சொரிந்தழுவார்
கவலைக் கடலைக் கடந்தருள்செய்
பொன்னார் ஞான முகம்பூப்பப்
போற்றச் சங்கத் தவில்முழங்கப்
பண்ணார் பாடற் பத்தர்தொழப்
பரிந்து மகிழ்ந்து வருகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி சாம்ப சிவமென்றால்
சங்கீ தத்தீங் குரலினிக்கும்
நம்பி ராமக் கிருஷ்ணமொழித்
தேன் நனைந்து வழிந்தோடும்
அம்பி கைப்பொன் னம்பலவன்
அழகுக் குழந்தை ஆறுமுகன்
தெம்பு மிகுந்து திரண்டொலிக்கும்
தேனார் தொண்டன் வருகவே!

காலக் கொடுமைக் கனல்தணிந்து
கன்னித் தமிழ்ப்பண் பாடோங்க
சாலச் சிறந்த சைவசித்
தாந்தத் தமைதி தரவருக!
கோலக் குமரன் கொஞ்சும் அன்பால்
குதுகலித்துக் கொண்டாட
ஞாலம் போற்றும் ராமக்கிருஷ்ண
நந்தா மணிகாள் வருகவே!

அன்னை சாரதா தேவி
ஆத்ம சக்திக் கனல்தூண்டும்
பொன்னை மணியை வயிரத்தைப்
புதுமுத் தம்மாள் போதத்தால்
பெண்மை வாழப் பிறந்தமணிக்
குழந்தை ரேழப் பெருஞ்செல்வம்
நன்மை வாழ நங்கையர்தம்
நல்வாழ் வோங்க வருகவே.

ஏழை எளியர் முகம்மலர்ந்து
இதயஞ் செழிக்கச் சகலகலைப்
பாளை விரிந்து மணம்வீசப்
பண்பும் அன்புந் தழைத்தோங்கக்
கோழை நிமிரக் குருமகராஜ்
கொற்ற முரசுக் கடல்முழங்க
பாலைத் தேனைப் பரமஹம்சர்
படைக்கச் சுவைக்க வருகவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமை இனிமை இனிமையென
இராமக் கிருஷ்ண விருந்துண்ணக்
கனிமை கனிமை கனிமையெனக்
கல்விக் கரும்பு மொழிபிழிந்து
தனிமை தனிமை தனிமையெனச்
சக்தி பிறந்து மூச்சினிலே
அணிமை அணிமை அணிமையெனும்
அன்பு பொங்க வருகவே!

**(மண்டூர்ப் பதிக்கு வருகைதந்த ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தவப்பெருந் துறவியாரை வரவேற்றுப் பாடியது.)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு ஸ்ரீ ராமக்கிருஷ்ண சங்கத்திற் சேவை புரிந்த துறவியர்

## அன்பு மாலை

பேரணிச் சீடர் பல்லோர்
பேரன்புத் தியாக சேவைச்
சீரணி உரம்பெற் றோங்கிச்
செழிப்புடன் தலை நிமிர்ந்து
நாரணன் ராமக் கிருஷ்ண
நற்பணிச் சங்கப் பைங்கூழ்
காரண மில்லா மூலக்
கடவுள் போல் வாழி மன்னோ!

மதுரத் தமிழ்க்கோர் வரம்பாகி
மன்னும் மட்டக் களப்பினிலே
துதிக்கும் ராமக் கிருஷ்ணசங்கத்
தூய பணிநெறி மணிவிதைத்தோன்
புதுக்கும் யாழ்நூல் ஆசானைப்
புலவர் பாடும் புகழ்விளக்கை
மதிக்கும் விபுலா னந்தனையெம்
மனத்துள் இருத்தி வாழ்த்துதுமே!

அத்தன் ராமக் கிருஷ்ணசங்க
அடிகள் அவினா ஷானந்தா
சித்தன் விபுலா னந்தனையெம்
சேர்ந்த சேவைச் சிறப்பாளன்
பக்தி யோகப் பணிபுரிந்து
பரம கம்சர் அருகிருக்கும்
முத்தன் புகழைச் சித்தத்துள்
முளைக்கும் வித்தை வாழ்த்துதுமே!

கடமை உணர்ச்சி கனவினிலுங்
கருதிப் பணிசெய் கருணானந்தா
மடமை இருளைப் பிளந்தெறிந்து
மன்னும் ஞானப் பரிதியென்கோ!
அடைக்கும் வறுமைச் சிறைஉடைத்தோர்
அறிவுக் குழந்தை முகம்பார்க்கத்
திடங்கொண் டுழைத்த ஸ்ரீராமக்
கிருஷ்ண சங்கத் தேன்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதாம் ராமக் கிருஷ்ணபணி
பிரண வேசா னந்தன்அணி
சிறுவர் கொஞ்சும் சிரித்தமுகச்
செவ்வி செந்தா மரைமலர்ப்பூ
உறுதி மூச்சாம் சேவையொன்றே
உயிருக் குயிராம் ஒளிபடைத்தோன்
அருமைத் தொண்டுக் காயிரம்பொன்
அள்ளிக் கொடுப்போர் ஆக்கம்பார்!

சுதந்தர சூரி யன்போல்
சுதந்தரா னந்தன் சேவை
இதந்தரும் ராமக் கிருஷ்ண
இதயமாம் புதையல் பெற்றோன்
விதம்வித மான சேவை
வித்தைக்கோர் சித்தன் பத்தன்
பதவிக்கோர் பதக்கம் ஞான
பானுவின் பணிநின் றோங்க!

நிறைகுடம் போன்ற நெஞ்சம்
நிலையினிற் கலங்கா நெஞ்சம்
குறையினை நிமிர்த்தும் ஞான
நிறைவிலே குமுறும் வீரம்
முறைநடை தவறிக் கெட்ட
மூடரைக் கெஞ்சார் அஞ்சார்
இறைமகன் நிஷ்கமா னந்தா
உயர்பணித் தலைமை வாழ்க!

இராமக் கிருஷ்ணப் பணிக்குரைகல்
இனிய ரிரதஜா னந்தாவாம்
உரிமை ராமக் கிருஷ்ணசங்க
ஒளிக்கோர் தூண்டு கோலானோன்
வறுமைச் சிறுவர் முகவாட்டம்
வருமுன் துரத்தும் வரம்பெற்றோன்
குருவை நினைத்தஞ் சலிசெய்யக்
கொடுத்து வைத்தோர் வாழிமன்னோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப் பணிக்கும் முந்திநிற்கும்
ரிஷிகே ஜானந் தாவைநெஞ்சே
சொந்தக் குரலால் துதிபாடிச்
சுவாமி என்றால் சுகம்பெருகும்
எந்தச் சோர்வும் இதயத்தே
இல்லா தோடி அகன்றழியும்
சிந்தித் தொருகால் ஸ்ரீராமக்
கிருஷ்ண சேவைச் சித்தைப்பார்!

பத்தினிக் கோயில் காரை
தீவெனப் பளிச்சிட் டோங்கும்
சித்தனாம் விபுலா னந்தன்
சேவையைப் பின் தொடர்ந்த
பத்தன் நடரா ஜானந்தன்
பங்கயக் கால் படாத
எத்தரைப் புழுதி யேனும்
எழில்மட்டக் களப்பில் உண்டோ?

தலையணிப் பாகை வாகைச்
சாமிகூ டஸ்தா னந்தா
புலமையிற் பூதி துய்த்துப்
பூரித்தேன் அந்த நாளில்
கலைமணங் கமழுங் கன்னித்
தமிழ்மணங் கமழுந் தென்றல்
நிலைமணி ராமக் கிருஷ்ண
நிறைகுடத் தொண்டன் மாதோ!

சாந்த குணஞ்சால் சர்வாதீ
தானந் தாநங் குருநாதன்
போந்த கதிர்கா மப்பதியிற்
புரிந்த சேவைக் களவுண்டோ!
வாய்ந்த ராமக் கிருஷ்ணமடம்
மக்கட் கமுத சுரபியெனச்
சேர்ந்த சேவைச் சிறப்பெல்லாம்
செவ்வேட் குமரன் திருவிழாவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த ஊர்ச் சுகங்களெல்லாம்
துரும்பெனத் தூக்கி வீசி
வந்தனை புரிந்து ராமக்
கிருஷ்ணரைச் சரண் புகுந்து
சிந்தையில் தெளிவு பூத்த
ஜீவனா னந்தன் வாழ்க்கைச்
சுந்தரப் பணியைப் பாடச்
சுந்தரத் தமிழ்முன் னிற்கும்!

உத்தமச் சேவைச் சீடர்
உரமிட்டு வளர்த்த கோயில்
நித்தனாம் ராமக் கிருஷ்ண
சங்கமோர் நினைவின் சின்னம்
பத்திமைத் தொண்டர் நாமம்
பல்லாண்டு பல்லாண் டோங்க
முத்திரைத் தமிழில் மட்டக்
களப்பன்னை மொழிகின் றாளாம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியந் தவறாச் சதாசிவ ஆசான்

இசைஞானக் குருவாகி இரக்கத்தால்
எனக்கிசையிற் பயிற்சி தந்து
வசையகற்றி ஆங்கிலமுஞ் செந்தமிழும்
வளர்ந்துநலம் பெருக வைத்து
பசையன்பு பாலித்துப் பண்புள்ளத்
தன்பாலே பரிந்து ஞான
நகைமுகப்பொன் சதா சிவமாம்
நல்லாசான் தனைத் தினமும் வாழ்த்துவேனே.

திருமுறைத் தோத் திரத்தில்
தித்திக்குந் திருப் புகழில்
உருத் திரு வாசகத்தில்
உளங்கனிந் துவகை பூப்பப்
பெருநெறி எனக் களித்துப்
பிரியம்வைத் தென்னை யன்பால்
உரிமையோ டுளங் கலந்த
உத்தமா சிரியன் மாதோ!

பக்கத்தில் என்னை வைத்துப்
பாரதி பாட்டைப் பாடி
தக்கநற் றமிழ்தித் திக்கச்
சாலவும் அன்பு தந்து
எத்திக்கில் நான்சென் றாலும்
அத்திக்கில் அறிஞர் கண்டு
நித்தமும் வாழ்த்தச் செய்த
நிறைகுடம் வாழ்க மன்னோ!

தமிழிலிலே ஆங் கிலத்தில்
தகுதிபெற் றுயர்ந்து பட்டம்
அமைந்திட அமைதி யோடு
ஆசிரி யப்பேர் பெற்று
நிமிர்ந்திடச் சேவை செய்த
நின்னை யான் மறப்பதெங்ஙன்
சமரச ராமக் கிருஷ்ண
தத்துவ முணர்ந்தோன் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகன் விபுலா நந்தன்
விரும்புநன் மாணாக் கன்நீ
உத்தம ராமக் கிருஷ்ண
உயர்பணி ஒழுக்கம் பூண்டாய்
பத்தி தித் திக்கப் பாடிப்
பரவச மடைந்து நிற்பாய்
சத்தியந் தவறா துற்ற
தமிழ் மணி நீயா மன்றோ!

தமிழகப் பெரியா ரோடும்
சைவநற் பெரியா ரோடும்
கமழ்மண மலர்போ லன்பாற்
கற்பன கற்றுத் தேர்ந்து
எமதன்புத் தில்லை மண்டூர்க்
கந்தனை என்று மேத்தித்
தமக்கொரு துணைவ னாகச்
சதாசிவம் வாழ்ந்தார் மாதோ!

படித்தமா ணவரைப் பண்பாற்
பேணிநீ பயிற்சி தந்தாய்
எடுத்ததோர் பணிக்கு ராமக்
கிருஷ்ணரைச் சரண் புகுந்து
தொடுத்ததோர் பணி முடித்துச்
சுதந்தர மாக வாழ்ந்தாய்
விடுத்தெமை நீ பிரிந்த
வேதனை தாங்க லாமோ!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் நீலாவணன்மீது பாடிய

# இரங்கற் செய்யுள்கள்

கொத்துக் கணக்கில் முத்தளந்து
குவியற் கணக்கில் நெல்லேற்றி
மொத்தக் கணக்கில் மணச்சரக்குக்
கப்பல் முழங்க அந்நாளில்
பத்துப் பாட்டுப் புகழ்படைத்த
பண்டம் மலிந்த ஈழத்தில்
மெத்தப் பஞ்சம் இந்நாளில்
வெளியே சொல்ல வெட்கமடா.

பசிப்போர்ப் பகையைப் புறங்கண்டு
பலவாம் உணவு வளம்படைத்துப்
புசிப்போர் வீரப் புயந்திரண்டு
பொறுப்போ டுழைக்கும் ஜெயவாழ்வில்
வசிப்போர் மனைகள் தொறும்அமுத
சுரபி மலர்ந்து வளர்ந்ததென
இசைப்போர் இசைக்கும் ஈழவள
நாடென் றினிது பாடேனோ!

தனக்கோர் உரிமைச் சாண்நிலத்தில்
தமிழ்த்தாய் வாழக் குடியின்றி
மனப்போர்க் கவலை வாழ்வினிலே
வாடுந் தமிழ்க்கோர் மணிக்கோயில்
அணைப்போர் அன்புக் கரத்தாலே
அமைக்கும் பணியில் அடியேனும்
பணிப்போர் பணியில் பங்கெடுத்தென்
பசிக்கு விருந்து கொள்ளேனோ.

என்று முழங்கி எங்குறைகள்
எல்லாம் இறைவற் கிசைப்பனென்னச்
சென்றாய் கடிது சிவலோகச்
சிறப்பை நுகர்ந்து மறந்தனையோ
குன்றம் வழிந்த கவிவெள்ளங்
குமுறும் நீலா வணாஎம்மை
இன்றித் துயரக் கடல்நடுவில்
ஏங்க விடுதல் நினக்கழகோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுத் தமிழர் பரம்பரைக்கோர்
ஆண்மை படைத்த நடைபயிலும்
பழகற் கினிய நல்லூராம்
பெரிய நீலா வணைத்தமிழ்க்கோர்
இளமைப் புதுமை விருந்தூட்டி
எழில்கொள் ஞாயிற் றொளியூட்டும்
வளமைக் கவிநீ லாவணா நீ
மாயக் கூடு துறந்தனையோ.

நானே கவிஞன் எனச்செருக்கும்
நடிப்புக் குகைக்குள் ஒடுங்காமல்
பானேர் இளமைக் கவிஞருக்கோா
பண்புக் கவிதை நடைபயிற்றி
தேனேர் கவிதைப் புலங்காத்துச்
செழிக்கச் சேவை செய்தாய்நீ
நானோ பிந்த நீமுந்தி
நடந்தாய் வானோர்க் கமுதானாய்.

படலை மட்டும் பள்ளியன்புப்
பாசம் பின்னால் இல்லையடா
சுடலை அன்பு கொள்ளிவைக்கத்
தூக்கு மட்டுந் தொலைந்ததடா!
கடமை அன்புக் கவிஞனுக்கோர்
காதல் தோழர் உண்மையெனில்
கடமை நீலா வணன்கவிதை
நடையைப் பொன்னூல் ஆக்குவதே!

கவிதைத் தேனை உள்ளமெனுங்
கற்ப கற்பூங் காவினிலே
அவியாய் அள்ளிச் சொரிந்துவிட்டாள்
அன்னை வாணி அருள்வெள்ளம்
செவியுட் பாய்ந்து சிந்தைவயல்
செழித்து விளைந்தால் இன்பமலைக்
குவிய லெதிரே துன்பமெனுங்
கோட்டை இடிந்து தகராதோ!

கண்டைப் பாலைக் கனியமுதைக்
கலந்தே இன்பக் கடல்சமைத்து
மண்ட லத்தை வளம்படுத்தும்
மதுரக் கவிகள் மக்களெல்லாம்
கண்டு சுவைத்துக் களித்துண்ணும்
கவியரங்க விருந் தூட்டும்
தொண்டைப் புரிந்த கலைக்கழகத்
தொண்டர்க் கன்பு வணக்கங்கள்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு நாவற்குடா
சங்கரதாஸ் சாண்டோவுக்கோர் நினைவுமாலை.

# சுடரொளி நாமம் வாழ்க!

ஈழத்துச் சிங்கமென எல்லோருங்
கொண்டாடும் இரும்பு ராசன்
கோழை எனும் பதக்கடையைக்
குழிதோண்டிப் புதைத்தெறிந்த கொற்றவீரன்
வேழத்தைப் புழக்கையிற் பிடித்தடக்கி
விழச் செய்து விருது பெற்றோன்
ஆழத்தை யாரறிவார் சங்கரதாஸ்
சாண்டோவை அளப்பா ருண்டோ.

மணித்தியா லக்கணக்கில் மடுவுக்குள்
மூச்சடக்கிப் புதைத்து மீண்டோன்
கணித்தறிய முடியாத கட்டழகுக்
காளையெனக் காட்சி மிக்கோன்
பிணித்தபெரும் இரும்புச்சங் கிலியைப்பேர்த்துப்
பின்னவிட்ட கட்டெல்லாம் அறுத்தெறிந்தோன்
பணித்தபல பணிதெய்வக் கதிர்காமப்
பன்னிருகைக் கந்தன் சாட்சி.

சாதிமதப் பேயழித்துச் சமரசத்தேன்
விருந்துண்டு சக்தி பெற்றோன்
பாதிமதி நதிசூடும் பரமசிவனைப்
பணிந்துபராக் கிரமம் பெற்றோன்
ஆதிகுரு நாதனென ஆனைக்குட்
டிச்சாமி அடி பணிந்து
வேதவே தாந்தங்கள் விரித்துரைக்கும்
ஆத்மீக வீறு பெற்றோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கொண்ணாப் பாரமெல்லாந் துரும்பென்னச்
சுமந்ததோள் வலிமை சொட்டப்
பார்க்கின்ற படிவத்தைப் பருத்தோங்கப்
பலர்வியக்கப் படைக்கும் பார்த்தன்
ஆக்கங்கள் பலபுரிந்தான் அழகுமட்டக்
களப்பன்னை விழித் தெழுந்தாள்
தாக்கங்கள் நமக்கில்லை தமிழுரிமைக்
கரும்புமொழி தழைத்து வாழ்க.

எந்திரத்தின் கடுவிசையை இருகையாற்
பிடித்திழுத்து நிறுத்தி வைப்போன்
தந்திரத்தாற் புகையிரதத் தண்டவா
ளத்திரும்பைத் தகர்த் தெறிந்தோன்
இந்தியத்தாய் மைசூரில் சக்கரவர்த்தி
விருதுவெள்ளித் தண்டு கொண்டோன்
சொந்தமட்டக் களப்பன்னைத் துடிப்புவெற்றித்
துவசமெனத் துலங்கு கின்றான்.

நல்லரும் நாடு முற்றும்
நமதுபொன் இளைஞர்க் கெல்லாம்
வல்லரும் வலிமை வாழும்
பரம்பரை மரபுக் கேற்ற
வில்லினால் வீரத் தண்டா
யுதத்தினால் வீமன் போன்றோன்
சொல்லரும் சங்கர தாசின்
சுடரொளி நாமம் வாழ்க!

படித்துச் சுவைக்கும் பாரதத்தில்
பயன்சேர் ராமா யணப்பாட்டில்
இடித்துக் கூறும் வீரத்தால்
ஏற்றப் பெற்றோர் சாரத்தால்
நடித்துக் காட்டும் நாடகங்கள்
நமக்கோர் வீரக் கூடகங்கள்
அடித்துச் சொல்லும் ஆவேசம்
ஆண்மைக் கவிஞன் பாநேசம்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1954ல் பாக்குக் கடலை நீந்தித் தாண்டி**
**பாரெல்லாம் ஜெயப்பறை முழங்க வந்த**

## திரு. நவரெத்னசாமியை

**பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் வரவேற்றபோது**

## பாடியது

துடிப்புள்ள வீர நெஞ்சத்
துணிவுள்ள தொண்டர் நாளும்
படிப்புள்ள பயனைக் காட்டிப்
பணிபுரி தொண்டம னாற்றில்
எடுத்ததோர் இலட்சி யத்தில்
எள்ளள வேனுந் தவறா
முடிப்புள்ள நவரெத்ன சாமி
வருகென் முழங்குஞ் சங்கம்.

பரவையிற் பயின்ற நீச்சல்
பாக்குநீ ரிணையைத் தாண்டி
உரிமையாம் வெற்றிக் கொடியால்
உளம்மகிழ்ந் துலகம் மெச்ச
முறுகிப்பே ரலை எதிர்க்க
முகங்கொடுத் தெதிர்த்து முறைக்கும்
செருவென்ற மறவன் நவரெத்ன
சாமிச்செந் தமிழா வருக!

நானொரு தமிழன் என்ற
நற்பெயர் சொல்வ தென்றால்
ஈனம தாகும் என்ற
இருளறி வாளர்க் கெல்லாம்
ஞானசூ ரியனாய் வந்த
நவரெத்ன சாமி மன்னா!
மானமே உயிர்க் குயிரென்
றொலித்திட வருக நன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமொன் றில்லை யென்றே
அருங்கவி பாடிச் சென்ற
மெச்சுபா ரதியின் சொல்லை
மெய்யென எடுத்துக் காட்டி
வச்சிரத் தோளும் நல்ல
வாலிபக் களையும் பொங்க
நிச்சயம் வெற்றி யென்றே
நீந்தினாய் வருக நன்றே!

முத்தமிழ் மன்ன ரில்லை
முடிவிலாக் கீர்த்தி செய்து
சித்திரப் பல்லக் கேற்றிச்
சிறப்பொடு விழா வெடுக்க
உத்தமன் கம்ப னில்லை
உன்புகழ் போற்றிப் பாட
வித்தகன் நவரெத்ன சாமி
விளங்குக பல்லாண் டம்மா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவை நாவலன்
மாஸ்டர் சிவலிங்கம் அவர்களைப் பாராட்டிப் பாடிய

# செய்யுள்கள்

'மட்டுநகர் மாஸ்டர்சிவ லிங்கம்' என்றால்
மனக்கவலை பறந்தோடும் மகிழ்ச்சி கூடும்
சொட்டுநகைச் சுவையினிலோர் துள்ளி போதும்
துரும்புக்கும் ஜீவகளைத் தேன் தெறிக்கும்
பட்டமரக் கனிசுவைத்துப் பறவை பாடும்
பசிமறந்து குழந்தைஇன்ப மழலை கொஞ்சும்
சட்டாம்பி ரெத்தினப்பொன் மனையாள் செல்லத்
தங்கத்தாய் பெற்றமைந்தன் தகுதி கேண்மின்!

பிறந்தபொன் னாட்டுக் கின்பம்
பெற்றதாய் தந்தைக் கின்பம்
சிறந்தசெந் தமிழுக் கின்பம்
செல்லும்ஊர் தோறும் இன்பம்
சிறுவருக் கின்பம் அன்புச்
சிறுமியர்க் கின்பம் முத்து
முறுவலைச் சொரியும் முல்லைக்
கொடிக் கெலாம் இன்பம்மாதோ!

பாமர மக்க ளோடு
பண்டிதர் பலர்பா ராட்டச்
சேமவிற் பாட் டிசைத்துச்
சிரிப்பினாற் கலை வளர்க்கும்
நாமகள் கடாட்சம் பெற்ற
நாவலூர் மைந்தன் விந்தை
நாவலன் சிவலிங் கத்தின்
நகைச்சுவை ஆட்சி வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணல் இராமன் கோதண்ட
ஆண்மை வில்லிற் சொல்லம்பால்
பண்ணார் பாட்டுப் படைதொடுத்துப்
பைந்தமிழ்த் தாய் தலைநிமிர
மன்னன் மாஸ்டர் சிவலிங்கம்
மகுடஞ் சூட்டி விழாச்செய்தான்
தின்னத் தின்னத் தெவிட்டாததேன்
தெம்மாங் கின்பம் பருகுமின்னோ!

'மட்டக் களப்பு நாடென்றே'
மார்பு தட்டி விழிப்பூட்டும்
பட்டம் பெற்ற பண்டிதன்பூ
பால் பிள்ளை முருகன்பொன்
மட்டார் குழல்மங் கையர்க்கரசி
மகளுக் கன்பு மணவாளன்
சுட்டும் விவேகா னந்தன்அன்புச்
சுதனோ டுலாவுங் கலையின்பம்!

ஈழத்தைச் சுற்றிச் சுற்றி
எண்ணிலா இடங்கள் தோறும்
வேளைக்குத் தக்க வில்லுப்
பாட்டினால் விறல் ததும்ப
ஞாலத்தில் ரசிகர்க் கெல்லாம்
நவரசச் சுவைதித் திக்கப்
பாலொடு தேன் கலந்த
பைந்தமிழ்ப் பாவை வாழ்க!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாட்டால் இடித்துப் பதமாய்ப் புடமிட்டார்

**கலிவெண்பா**

மூவேந்தத் ஆட்சி முறையால் அறந்தழைக்கப்
பாவேந்தர் பாராட்டிப் பாடும்பே ரன்பாலே
கட்டி அரசாண்ட கன்னித் தமிழ்நாட்டில்
வெட்டி அரசாண்ட வேப்பங்காய் வேற்றுமையால்
ஒற்றுமைகள் எல்லாம் உருக்குலைந்து போனதடா
ஈட்டிவாள் அம்பை எதிர்த்துப் புறங்கண்டோர்
போட்டிபே ராசை பொறாமைப் பகைமூண்டு
செட்டை இழந்த சிறுகுருவி போலாகிப்
பண்டைப் புகழ்மறந்து பரவச் சுமையானார்.

வெள்ளாச்சி வெள்வெருட்டில் நல்லாச்சி மொத்துண்டு
எள்ளாச்சி ஆகியே ஏங்கிப் பொலிவிழந்து
கண்பார்வை குன்றிக் களையிழந்து காலிடறிப்
பண்குறைந்து சோர்ந்தநடைப் பல்லவியே பாடினாள்
செந்தமிழ்ச் சீதேவி செய்த தவப்பயனோ
முந்தைப் புலவோர் முயற்சி பலித்ததுவோ
சீதனப்பேய் வாய்க்கொழுப்புத் தீட்டுப் படாதமகன்
மாதனம் பூத்த மலைத்தேன் மணமறிந்தோன்
வண்ணத் தமிழ்க்காதல் மாப்பிள்ளை நானென்று
சின்ன வயதினில்ஆண் சிங்கக் குரலொலித்த

சுப்ரமண்ய பாரதிக்கோர் தோத்திரந்தான் பாடேனோ
பாரதத் தாயுரிமைப் பாசக் கனல்தூண்டும்
வீரர் வரலாறும் வெற்றிப் பரணிகளும்
ஓதி உணர்ந்துறுமி உள்ளங் குமிறிஎழ
அன்னியர் கைக்குள் அடிமைத் துரும்பாய்ச்
சுணைகெட்ட நெஞ்சைச் சுடர்வேல் துளைத்ததெனப்
பாட்டால் இடித்துப் பதமாய்ப் புடமிட்டான்
தேசாபி மானமொடு பாஸாபி மானமும்
வாசமிகு மண்குடிசை மக்கள் கவியானார்
பண்டிதக் கொட்டகையில் பகடைக்கூத் தாடிநின்ற



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வண்டமிழை மக்களின்ப வாழ்வுக் கொளியூட்டும்
புத்தணிமுத் தாரப் பதக்க மணிக்குயிலாய்க்
கூவுங் குரலினிமை கொப்புத்தேனாய்ச் சமைத்தான்
பாப்பாவின் பண்புப் பயிரோங்கப் பாத்திகட்டித்
தாய்ப்பால் அமுதத் தமிழ்வெள்ளம் பாய்ச்சினான்
நேரான சாதனையைச் சீரான போதனையால்
ஏராள மாயினிக்க எங்கும் ஒலிபரப்பித்
தாராள மாகத் தமிழை அலங்கரித்தான்
மூச்சான பெண்ணுரிமை மின்னல் முழக்கத்தால்
ஆச்சிமார் கூன்நிமிர்ந்தே ஆவேசக் கூத்தாடப்

பூரிக்கும் பெண்வாழ்வு பூத்துமணம் வீசுதடா
தண்ணீர் விடாய்மூண்டு தாவும் சுதந்திரத்தாய்
மண்ணுரிமை மக்களுக்கோர் மானம்முறுகிஎழ
அன்னியரை ஓட்டும் அறம்பாடி வெற்றிகண்டான்
கொற்றக் குடியரசுக் கூத்துக் களரியிலே
பாட்டாளி மக்கட் படைக்கோர் தளபதியாய்
கைத்தொழில்விஞ் ஞானக் கதிருதயக் காட்சியிலே
சித்தி பல செழித்துச் செல்வம் பெருகுதடா
பத்திமலர்க் கண்ணன் பணிபுரியும் பாத்திரமும்
சர்வமதம் போற்றும் சமரசத் தோத்திரமும்

கூடுகின்ற யோகக் குடுகுடுப்பைச் சாத்திரமும்
சஞ்சலப்பேய்க் காய்ச்சலுக்கோர் சஞ்சீவி மாத்திரையாம்
சாதி மதச்செருழுகுச் சாக்கடைநோய் தீர்க்கும்
சமூக மருத்துவனாம் சாந்திமணம் வீசும்
கவிதை உணர்ச்சியிலே கற்பனையும் அற்புதமும்
பொற்பும் புதுச்சுவையும் பூரிக்கும் சொற்பதமும்
வீதியெலாந் தித்திக்கும் வெற்றி முழங்குதடா
பாரதிநூற்றாண்டுப் பவனி விழாநடக்கும்
சேரியுமோர் காவிரிப்பொன் னாடாய்ச் செழிக்கின்ற
வேள்வியிலோர் சின்ன விருந்துண்டு செல்லீரோ?
ஊர் மக்கள் உள்ளங் குளிர.

குறிப்பு: கொழும்பு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், அகில இலங்கை ரீதியில் நடத்திய பாரதி நூற்றாண்டு விழா கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிதை. 4-4-83.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைந்தமிழ்ப் பயிற்சிச்சாலை

வரகவி சுப்ர மண்ய
பா்ரதி வண்ட மிழ்க்கோர்
குருகண பதியைக் கூப்பும்
மணக்குள விநா யகன்சீர்
பரவுநான் மணிச்சொல் மாலை
பத்திகொண் டொருகாற் பாடத்
தரமுயர் கவிதை நாவில்
தனிநடை படைத்துத் தாவும்

பாரத நாட்டைப் போற்றும்
பராசக்தி வடிவ மாக
ஆரணத் தமிழாற் பாடும்
அருட்கவி சுப்ர மண்ய
பாரதி விழாநூற் றாண்டுப்
பசிக்கொரு பிடிச்சோ றிட்ட
சேரியுங் கா விரிப்பொன்
னாடெனச் செழிப்புக் காட்டும்.

பற்பல புகழ் படைத்த
பாரதப் பசும்பொன் னாட்டின்
அற்புதச் சரிதங் கூறும்
அறிவொளிச் சுரங்கம் இன்பச்
சொற்பொருட் கனிக ளாய்ந்து
சுவைத்திடுங் கவிதைச் சோலை
பற்றொடு படிப்போர்க் கேற்ற
பைந்தமிழ்ப் பயிற்சிச் சாலை.

மன்னரைப் புகழ்து பாடி
வயிற்றையே நிரப்பித் தூங்கும்
தன்னலப் புலவ ராலே
தமிழ்மொழிக் கிழுக்காம் என்ற
புன்சொலை ஒழிக்குஞ் ஞானப்
பொக்கிஷப் புதுமை யீந்த
சொன்னலப் புலவன் சுப்ர
மண்யபா ரதிநூற் றாண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய விழா வெடுக்கப்
பூவையர் அணி திரண்டு
மண்ணிலே விறல் படைத்து
வானையும் ஆட்சி கொள்ளும்
பெண்ணினம் விழிக்கப் பாட்டால்
விடுதலைப் புரட்சி செய்த
அண்ணல்நூற் றாண் டரங்கில்
ஆய்வுரை நிகழ்த்து கின்றார்.

கூனும் நிமிர்ந்து கூத்தாடும்
குழந்தை உள்ளம் பூரிக்கும்
வானம் பார்க்கும் வயலுழவன்
வாரி பெருக மழைபொழியும்.
தேனும் பாலுந் தித்திக்கத்
தெருவில் இரப்போன் அமுதுண்ணும்
ஞானக் கவிதை நடையினிலோர்
மானக் கட்டுக் கோப்பினைப்பார்.

பூவையர் கலவி இன்பப்
போதையாற் சுவைக்குங் காமப்
பாவைகள் என்றே வீட்டுப்
பாசறைப் பொந்திற் பூட்டுங்
காவலைச் சுட்டுக் கற்புக்
கன்னியர்க் கறிவு தூண்டும்
ஆவலை முழக்கிக் காலைச்
சேவலைக் கூவச் செய்தான்.

பண்டிதச் சொற் சிறைகுட்
பாவைக் கூத் தாடிநொந்த
வண்டமிழ் மகளை மக்கள்
வாசல்மண் குடிசை தோறுங்
கண்டுகண் களித்துக் கொஞ்சுங்
கவிநடைக் குரல் இனிக்கும்
வண்டுபோல் வட்ட மிட்டு
வலம்வர வழி சமைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமைப் பண்பு தழைத்தோங்கி
அறத்தால் உயர்ந்த தமிழ்நாட்டில்
தருமங் குன்றித் தலைசாய்ந்து
தத்தளித்துத் தடம் புரண்டு
சரிந்து பிரிந்த சமூகத்தைச்
சமன்செய் ஞானக் கீதையினால்
வரிந்து கட்டி வாழ்வளித்த
வரகவியை வாழ்த் தேனோ?

அருந்தமிழ் அழகு நாடு
அன்னியர்க் கடி பணிந்து
பெருந்தவ றிழைத்த தாலே
பிரிவினைப் பிளவு மிஞ்சிச்
சுருங்கிய இருளில் ஞானச்
சுடரினைப் பரப்பி அன்பால்
நெருங்கிய தோழன் மக்கள்
நிறைகுடக் கவிஞ னானான்.

வாட்டிய வறுமை நோய்க்கோர்
மருந்தினைக் கைக்கொள் ளாமல்
நாட்டிலே ஊர்கள் தோறும்
நடப்பதை நுனித் துணர்ந்து
வீட்டையே மறந்து மண்ணை
விறைத்ததோர் கவிஞ னாகப்
பாட்டெனும் பணி எலும்புக்
கூட்டிலே உயிர்த்தான் மாதோ!

தேசியப் பாடல் கேட்டுத்
திடுக்கிட்டார் ஆங்கி லேயர்
மோசமாயச் சட்டத் தாலே
மூடியும் தமிழ்மூச் சுள்ள
தாசனாம் பார திக்குத்
தமிழ்க்கவி ஊற் றெடுத்த
வாசலைத் தடுப்பா ருண்டோ!
வாழிய சுதந் திரத்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி மதப்போர் வெறிமூண்டு
சமூகம் மாறித் தலைகீழாய்
மோதிக் கொதிக்கும் மூர்க்கத்தால்
முன்பின் அறியாச் சமுதாயச்
சோத னைப்போர்ப் பகைச்சனிக்குத்
தூபம் போட்ட தாய்நாட்டைச்
சோதித் தமிழால் விழிப்பூட்டிச்
சுடரச் செய்தான் பாரதியே.

புத்தன் யேசு பிரான் அல்லா
புகட்டும் மார்க்க போதனைகள்
நித்தம் சைவ நெறிகலந்து
நினைத்தால் இனிக்கும் சமரசத்தேன்
பித்தன் பேயன் என்றேசிப்
பிரானைத் தொழுதான் ஆரூரன்
பத்திக் கனலை முறுக்கிவிடும்
பாடல் பொழிந்தான் பாரதியே.

குழந்தை கை கொட்டி ஆடக்
குயிலெனப் பெண்கள் பாட
இளைஞர்தாய் நாட்டுக் கேற்ற
எதிர்காலத் திறமை ஊட்டும்
நலங்கொள்விஞ் ஞான வித்தைத்
தொழில்பல வளங்கள் கூட்ட
அளந்தபா ரதிநூற் றாண்டில்
சுதந்திரக் கொடிபூத் தாடும்.

துரும்பெனக் கிடந்து தூங்கும்
சுணைகெட்ட துரையன் ஓர்நாள்
ஒருபெருஞ் செயல்செய் வாய்நீ
வாவென்ற பாட்டைக் கேட்டு
இரும்பெனத் தோளைத் தட்டி
'இழிந்தவன் நானா' என்றே
சுரும்பெனப் பறந்து வீர
சுதந்திரப் படையிற் சேர்ந்தான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பறையரைப் புலையர் தம்மை
விடுதலைப் புரட்சிப் பாட்டால்
முரசினை முழக்கி ஞான
முத்திரை தரித்துக் காட்டிச்
சுருசுருத் தோடும் ஜீவ
சக்தியைச் சுடரத் தூண்டும்
உரிமையாம் சுதந் திரத்தாய்
உணர்ச்சியால் ஒளி கொடுத்தான்.

கண்ணன் பாட்டுங் குயிற்பாட்டுங்
கற்புக் கரசி பாஞ்சாலி
வண்ணப் புடவை வரிப்பாட்டும்
மருவுங் காதல் மணப்பாட்டும்
உண்ணும் உணவுத் தொழிலாளர்
உணர்ச்சிப் பாட்டும் உரைப்பாட்டும்
பண்ணார் தமிழுக் கலங்காரப்
பதக்கம் மாலை புரிசுகள்பார்.

புதுச்சுவைப் பெருள் வளங்கள்
பூரிக்கும் புதுப்பண் பாடி
கதுமெனக் கருத்தில் ஞானக்
கண்ணொளி மலரச் செய்தான்
விதம்வித மான மெட்டில்
வேதனை முழுதுந் தீர்க்கும்
புதயலைக் கிளப்பித் தந்த
புலவனை மறப்ப தெங்ஙன்!

மூச்சிலே தமி ழுணர்ச்சி
முத்தொளி நகைத்தேன் சிந்தும்
பேச்சிலே எளிமை அன்பு
பெருந்தடை வ்வேகம் மிக்க
ஆச்சியாய் அறிவுத் தாயாய்
அனைவர்க்கும் புத்தி சொல்விக்
கூச்சமில் லாது வாழக்
குரல்கொடுத் தொளித்தான் எங்கோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை வென்று வாழுங்
கவிதைக்கோர் உயிரைக் காட்டி
மூலத்தைத் தொட்ட மூச்சாம்
முயற்சியால் வெற்றி பெற்ற
பாலத்தைப் படைத்திப் பாரைப்
பரிசனம் ஆக்கிக் கொண்டு
ஞாலத்தை அலங் கரிக்கும்
நாடகம் ஆடிச் சென்றான்.

பட்டுத் தலைப்பாக் கட்டறிவு
படர்ந்த நெற்றி குங்குமப் பொட்(டு)
இட்டுச் சுடரும் அகன்றவிழி
எடுப்பாம் முறுக்கு மீசையுடன்
கட்டுக் கடங்காக் கவியுணர்ச்சி
கனலுங் கன்னித் தமிழ் நெஞ்சம்
தொட்டால் இனிக்கும் பாரதியின்
தோற்றம் பார்த்துக் கொள்தமிழா!

**யாழ்ப்பாணம் - மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றமும் பாரதி சனசமூக நிலையமும் நடாத்திய அகில இலங்கை ரீதியிலான பாரதி நூற்றாண்டு விழாக் கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிதை.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஞான விளக்கு

நெடுமால் போலோர் மலைமேலே
நீந்தும் அருவி தவழ்ந்தோடும்
சுடுவா னிரவி சாய்போதிற்
சோலை அழகோ குயில்பாடும்
தொடுமால் கவிஞன் உள்ளத்தைத்
துள்ளுங் கவித்தேன் வழிந்தோடும்
படுவான் கரையேயார் பாவலனாம்
பாட்டைப் பருக வாரீரோ.

வான முதலைம் பூதமெலாம்
மலரும் இயற்கை வனப்பன்றோ
ஞான வாழ்வுக் குயிரூட்டும்
நாட கப்பொன் மேடைகளாம்
மோனப் பண்பி னாழத்தே
முளைக்கும் சத்தி நடமாடும்
கான முழக்கம் இபற்கையெழிற்
கன்னி பாடுங் காவியமே.

ஓய்தலறியாத் தொழிலாளி
உலகுக் கொருவன் முதலாளி
சாய்த லில்லாத் தயவுடையோன்
சாத்துங் கருணைப் பெருஞ்சோதி
மாய்த லில்லாப் பயனுடையோன்
மௌன விரதம் மிகவுடையோன்
ஆய்த லறியா அஞ்ஞானி
அவனைக் காண்ப தரிதாமே.

வான வெளியில் விளையாட்டாம்
வட்டப் பந்து சுழல்வதுபார்
ஊனமொக்கும் இப்பூமிக்
குயிரைக் கொடுக்கும் ஒளிப்பிளம்பாம்
ஞான பானு நல்லொளி சூழ்
நந்தா விளக்குத் தூண்டுவதார்
தான மனைத்துந் தருமியற்கைத்
தாயின் தத்துவ விந்தையதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணப்பூந் தென்றற் காற்றினிலே
மனத்தைக் கவரும் விஞ்ஞான
அணுப்பூந் துகளைப் புகுத்துவதார்
அமிழ்த நிலவால் அவனியெலாம்
கணக்குப் போட்டுக் காட்டுவதார்
கவிஞன் இதய கலசத்தே
உணர்ச்சித் தேனை நிறைப்பதியார்
உண்மை உணர வேண்டாமோ.

இரையும் வண்டின் இன்னொலியில்
இசையின் பெருமை தொனிப்பதுகேள்
விரைசெய் மலர்ச்செந் தேன்சொரிந்து
விருந்துக் கழைக்கும் சோலையெலாம்
இரசக் கனிகள் ஆயிரமாய்
இனிய கரத்தே யணிந்தேந்திக்
கரையி லின்பக் கருணையுளங்
கவின்பூங் காவிற் காட்டுவதார்.

கவிதைக் கன்னி யூற்றரும்பிக்
களித்துப் பாடுஞ் சிற்றாறு
புவியின் ஞானப் பயன்பொழிந்து
புரட்சி புதுக்கும் பொருளதுகேள்
கவின்செய் ஞானக் கலைமயிலாள்
கான வீணை மீட்டுகின்றாள்
செவியில் ஊட்டுந் தேன்விருந்தாம்
சேர்ந்து பருக வாரீரோ.

நாவல் லோரின் பாட்டழகு
நடைபோ லோடும் நடைபாடும்
காவல் லோரின் கண்ணருள் போற்
கலந்து மக்கள் காப்பாகும்
கூவல் குளங்கள் ஓடையெலாங்
குதித்துக் குமுறி நீர்சொரிந்து
தாவும் அருவி முத்தாடித்
தாலாட் டினிது பாடியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையி னூர்ந்து கருமேகம்
மண்ணி லோடும் பாலாறாம்
அலைகள் புரளும் ஆழியிலே
அடங்கிக் கலக்கும் அதிசயம்பார்
நிலைகொள் வெள்ளி பலகோடி
நீல வாளில் வீசியதார்
கலைகள் பூக்கும் வான்மீதிற்
கருத்தைக் கவருங் காட்சியதே.

வேறு

என்றுயர் கவிதை பாடி
இயற்கையோ டுருகிச் சேர்ந்து
குன்றென நிற்கும் பின்பு
குயிலெனக் கூவுந் தாவும்
கன்றெனக் கதறுங் கூடுங்
கலைமகள் அருள்போல் இன்பத்
தென்றலைக் கொஞ்சுங் கெஞ்சும்
தீந்தமிழ்ப் பிச்சை கேட்கும்.

உள்ளத்துக் காதல் பொங்கும்
உணர்ச்சியி னூடு மூழ்கும்
வெள்ளத்திலாடும் பாடும்
மெய்சிலிர்த் தோடுங் கூடும்
கள்ளொத்த கவிதை மாலை
கட்டுதல் கவிஞ னுக்கோர்
முள்ளொத்த துன்பம் ஓட்டும்
முதன் மருந் தமிழ்த மன்றோ.

வேறு

என்னே மதுரத் தமிழின்பம்
இயற்கை பாடுங் காவியமாம்
அன்னாய் காக்கும் அமுதவல்லி
அறிவுத் தீம்பா லளிப்பவளே
என்னா இயற்கை தனிற்கவிஞன்
இதயம் விட்டுப் பாடுகிறான்
பொன்னாம் என்று பலர் போற்றப்
பொழுதோ நீண்டு போனதுவே.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கனவு கண்டு விழித்தவன்போற்
கவிஞன் உணர்ந்தான் வெளியினிலே
நினைவு தூண்டத் தன்வீட்டு
நினைப்பு மூண்டு பற்றியதால்
மனையாள் காதன் மறவாதோன்
மனைக்குச் சென்றான் சுவையுணவு
நினையா முன்னம் படைத்தன்பால்
நீட்டுங் காந்தட் கைமணக்கும்.

பூசை நடக்கும் போதினிலே
பொருந்தும் பத்தி பொலிவதுபோல்
ஆசை நடக்கப் படைக்கின்றாள்
அமிழ்த முண்டு களிக்கின்றான்
மாசின் மணிச்சொற் பாவாணன்
மணப்பூந் தென்றற் கால்வாங்கி
வாசல் உலாவி மனமகிழ்ந்தோர்
மலர்ப்பூ மெத்தைப் பள்ளிகொண்டான்.

அந்தி மயங்கும் வேளையிலே
அழகு நங்கை வீட்டினிலே
செந்தீ விளக்கம் ஏற்றுகையில்
திருப்பாட் டொலியின் திறம்கேட்கும்
செந்த மிழ்த்தேன் கவிபாடும்
செஞ்சொற் கவிஞன் கவிதையெலாம்
எந்த மூலை கிடந்தாலும்
இனிது காக்குங் கலைமகளாம்.

கண்ணைக் கவர்சந் திரகாந்தக்
கப்பல் வானக் கடல்தவழும்
மண்ணின் முத்துப் பாயழகாம்
மக்கள் கூடி மகிழ்கின்றார்
புண்ணி யந்தான் செய்தாளோ
பூமி சூடும் புகழ்மாலை
கண்ணை விழித்தான் கவிஞனுமே
கவிதை மாலை சூட்டுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேறு

பாற்குடமோ பாலாறு சொரிந்த தாமோ
பளபளக்கும் வெண்கும்பம் படைத்த தாமோ
ஊற்றுநிலாப் புத்தழகுச் சுரப்புக் கண்டேன்
உயிர்க்களையே குளிர்நிலவே உனக்கா ரொப்பார்
நீற்றெடுத்த திருமேனிக் கோலங் காட்டி
நெக்குருகத் தவம்பலித்த நிலைதா னூட்டி
போற்றரிய செஞ்சடைமேற் பவனி வந்தாய்
புதுவிளக்கே பூரணையே பூரிப்போமே.

உன்னழகுச் சாந்தியிலோர் உணர்ச்சி கூடும்
உள்ளமெலாம் நின்தண்மை ஒளியே மூடும்
பொன்னழகே முத்துநகைச் சுடர்ப்பி ழம்பே
புதுமுல்லைப் பூந்தட்டே புலமை பூக்கும்
பன்னரிய பொருள் சுவைத்துப் படிக்கும் ஞானப்
பனுவலிலே தெளிவதெலாம் பருகிக்கொண்டேன்
அன்னமுறை வெண்பூவே கொஞ்சுகின்றேன்
அமுதமளித் தருள்வீசும் ஆசைப் பூவே.

வெள்ளைமலர்ப் பட்டுப்பூ மகளுடுத்தாள்
விலைகோடி பொன்கொண்டு விற்றாயோநீ
கள்ளமிலாச் சொல்லுருவக் காட்சி போலக்
கதைக்கின்றாய் கலைமதியே கவிஞனோடு
துள்ளருவிக் கொளியூட்டித் தூய்மை யாக்கிச்
சுவைக்கின்றாய் நானன்புத் தோழ னன்றோ
தெள்ளு தமிழ்த் தேன்கூட்டித் தித்திப் பூட்டித்
திருடியெனைக் கலக்கின்றாய் திங்கட்செல்வா.

உணவுசிறி துண்ணுங்கள் என்றாள் பாடும்
உணர்ச்சிக்குத் தடைபோட்டு நிறுத்துகின்றாள்.
குணப்பண்டாள் உயிர்கினியாள் கொழுநன் அன்பாற்
கூடிமகிழ்ந் துண்ணுகின்றான் நடுயா மம்பின்
சுணங்காமல் நித்திரைக்குப் போங்க ளென்றாள்
துரியநிலைச் சமாதியெனத் தூங்குகின்றான்
மணங்கமழுங் குழலியவள் அன்பு தீண்டும்
மணவாளன் கவிஞனுக்கோர் வாய்த்தசெல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு வாசல் கூட்டுகிறான்
கிழக்கே வெளிப்புத் தோன்றவில்லை
நாட்டு மக்கள் ஊசாட்டம்
நாலு தெருவும் நடக்கவில்லை
பாட்டுப் புலவன் துயிலுணர்ந்தான்.
பட்டினத்தார் பாடுகிறான்
மூட்டும் படலை ஓரத்தோர்
முணுமுணுப்புக் கேட்டதுவே.

கேட்ட குரலோர் கிழவிகுரல்
கிட்டச் சென்று பார்க்கையிலே
பாட்டி நிலைமை ஏட்டினிலே
'பசித்தோர் முகம்பார்' எனும்பாடம்
தீட்டும் பட்டி னப்பிள்ளை
திருவாய் மலர்ந்த திருப்பாடல்
நாட்டுச் சூழல் நடமாட்டம்
நம்முன் காட்டும் பயன்பாடல்.

காகம் இருக்கப் பழம்விழுந்த
காட்சி எதிரே கண்டதுபோல்
தாகம் அதிகம் மகனே நீ
தாராய் தண்ணீர் ஏதேனும்
சோகக் குரலோ பாட்டியுள்ச்
சோர்வு காட்டும் சொல்லோட்டம்
வேகமாகக் கவிஞன் கை
விரைந்து படலை திறந்ததுவே.

ஆட்டுந் துன்பச் சுழியினிலே
அடிபட் டழிந்தோர். அவனியிலே
காட்டுங் கணக்கோ ரளவில்லை
கதைகள் படித்தோம் தமிழேட்டில்
பாட்டி கோலம் பார்த்ததுமே
பரிவோடணைத்துப் பண்புடனே
கூட்டி வந்தோர் மெத்தையிலே
கும்பிட் டிருத்திக் களிகூர்ந்தான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேலை யாவும் விருப்புடனே
வீட்டில் முடித்து வேல்விழியாள்
நூலைப் படித்துச் சுவைதட்டி
நுகரும் அன்புக் கணவனிடம்
பாலைக் கொடுக்கும் வேளையிலே
பாட்டி ஒருத்தி பக்கத்தே
காலை நீட்டிக் கனிவோடு
கதைக்கும் அழகு கண்டாளே.

கண்டாள் கோதை ஓர் நொடியில்
காய்ச்சும் பசும்பால் கோப்பையிலே
கண்டுப் பொடியுங் கலந்துடனே
பாட்டி கைபிற் கொடுக்கின்றாள்
கெண்டை விழியாள் அன்புடனே
கிளத்தும் கிள்ளை மொழியூறும்
தண்ட மிழ்த்தேன் சுவைகலந்து
தமிழ்போற் பாலும் இனித்ததுவே.

கொவ்வைக் கனிவாய்க் கிளிமொழியாள்
கொடுக்கும் பாலைக் குடிக்கின்றாள்
அவ்வைக் கிழவி போலறிவுப்
பாட்டி அமிழ்த மீதென்றாள்
நவ்விக் கண்ணாள் தனைப்பார்த்து
நாலு மறிந்த பெண்ணென்றாள்
மௌவலன்ன புன்னகையோ
மணிமுத் தரும்பிப் பூத்ததுவே.

புருடார்த் தங்கள் பொன்னேட்டிற்
படித்த புலவன் மனையாளே
குருட்டு மாலைக் கண்ணிருட்டிற்
கூடும் இரவோர் மரத்தடியிற்
சுருட்டிக் கிடந்து சுவைத்தேனென்
சோகக் கதைதான் கேள்மகளே
குருட்டுக் கிழவிக் கொளி கொடுத்துக்
குலவும் ஞான விளக்காம் நீ.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கணவன் குற்றம் கடுகளவும்
கண்டு கடியாக் கற்பரசி
குணவன் போடு குலப்பண்பு
கொளுத்துங் குத்து விளக்கே நீ
பணவன் பில்லாப் பாவலனின்
பாட்டுப் பணிகள் பூண்டவளே
மணவன் புதிரும் மாமலரே
மதுரக் கிளியே வாழிய நீ.

குறிப்பாலறியும் புலமையளே
கொடுத்து வைத்துப் பிறந்தவளே
சறுக்கி வீழ்ந்து தள்ளாடிச்
சடையைக் கோலி கைப்பிச்சை
குறித்துத் திரிந்த கிழவிக்குக்
கொள்ளை உணவுச் சுவையூட்டி
மறித்தும் இருப்பாய் பாட்டியென
மனம்விட் டுரைத்த மணிக்குயிலே.

இயல்பாய்ப் புலமை பூத்தரும்பும்
இதயச் சிறப்பை ஈந்தவளே.
கயல்போற் பிறழுங் கண்ணாளே
கவிஞன் கவிதைக் குயிர்கொடுக்கும்
தயவா லுயர்ந்த தவமகளே
தன்னேரில்லாத் தத்தாய்நின்
அயலாள் கூனற் கிழவிதனை
ஆரா அன்பால் அணைத்தவளே.

என்னும் பாட்டி புகழ்மாலை
ஏட்டில் எழுத முடியாதாங்
கன்னல் மொழியாள் காதலிலே
கவிஞன் கலந்து கவிபாடும்
அன்னப் பெண்ணாள் அறிவுக்கோ
அகிலம் முழுதும் தலைவணங்கும்
மன்னும் இன்பத் தமிழ்ப் புலவன்
மனையின் ஞான விளக்கவளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டி பவளப் பைங்கிளிக்குப்
பளபளக்கும் பதக்கங்கள்
சூட்டல் போலும் சொல்லின்பச்
சுவையி வீடு பட்டவனாய்
கேட்டு ரசித்துக் கிடக்கின்றான்
கீதங் பாடுங் குரலாலே
மூட்டும் அமிழ்த முழக்கம்போல்
வானுஞ் சற்று முழங்கிற்றே.

அந்த வேளை தனிற் புலவன்
அறிவுப் பாட்டி முகம்பார்த்து
இந்த வேளை சிறிதுணவாம்
இருகைப் பிடிதா னிதற்காக
அந்திவேளை வருமட்டும்
அன்பால் தொடுக்கும் புகழ்மாலை
சொந்த வேலை யாகிடுமோ
சொல்லாய் பாட்டி சொல்லென்றான்.

கணத்திலே மறைந்தாள் பாட்டி
கவிஞனோ காண வில்லை
இணையிலோர் சோதி அந்த
இடமெலாம் வீசிற்ற ம்மா
குணமுயர் கோதையோடு
கொழு நனும் திகைத்து நின்றான்
அணைந்திடு வீணை போலும்
அசரீரி பாடும் வானில்.

பாட்டிபோ லுன்னைத் தேடிப்
பசியொடு வந்தேன் பாலை
ஊட்டினாய உணவு தந்தாய்
மெத்தையில் உறங்கச் செய்தாய்
வீட்டிலே சுட்ரு ஞான
விளக்கினைக் கண்டேன் அன்புப்
பாட்டுடைக் கவிஞா நீயும்
பயன்பல நுகரக் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகளுக் குயிரும் நானே
கலைமகட் கடவுள் நானே
பலசுவை பயக்கும் பாடல்
பாடுக வரமுந் தந்தேன்
சலசலத் தருவி போலுஞ்
சங்கொலி நாதம் போலும்
பலநவ ரசங்கள் சொட்டும்
பாட்டுக்கள் தீட்டிக் காட்டாய்.

தலமுயர் கவிஞா செல்வம்
தழைக்கநன் மனைய றங்கள
பலபுரிந் திடுக பண்புப்
பாவலா நாவலா நின்
புலமுயர்ந் திடுக ஞானப்
பொன்விளக் கொளியால் மேலும்
நிலவுக நீடு யாவும்
நேரிலே கவிஞன் கண்டான்.

**இலங்கைச் சாகித்திய மண்டல வெளியீடான 'கலைப்பூங்கா' 1964 சித்திரை இதழில் வெளியானது.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சிங்கள வருடக் கவிதை

அறுசீர் ஆசிரிய விருத்தம்

அழகுசூழ் இலங்கை நாடு அகிலமும் விருந்து கொள்ளப்
பழகுமோர் பண்பு நாடு பண்ணைசூழ் விளைச்சல் நாடு
பழந்தமிழ்ப் பத்துப் பாட்டிற் பளிச்சிடும் ஈழநாடு
உலகெலாம் உளம்பூ ரிக்க உலாவுமுல் லாசநாடு.

சித்திரச் சிகிரி யாவும் சிவனொளி பாத மலையும்
புத்தரின் ஞானம் பூத்த முத்திரை மோனப் பண்பும்
பத்திமைச் சைவம் ஸ்லாம் பரன்யேசு மார்க்க மெல்லாம்
சித்தத்தில் அமைதி யூட்டும் நித்திலச் சாந்தி நாடு.

எத்தனை மலைகள் கலைகள் இனியதீங் கனிக் குலைகள்
முத்தமிட் டருவி பாடும் மோகனப் பூம் பொழில்கள்
சத்தியம் அகிம்சா தர்மம் சாந்திநல் லொழுக்கச் சால்பாம்
வித்தகச் சான்றோர் ஞான விளக்கொளி பூத்த நாடு.

வீசிளந் தென்றல் கொஞ்ச விண்கணம் உகுத்த தென்னத்
தேசுமிழ் மணிகள் மின்னத் தேன்விளை ஞான் ஊற்றாய்ப்
பேசிளந் தமிழைப் போலப் பெருகிடும் பெருமை வாய்ந்த
மாசிம் மா வலிநீர்க் கங்கை வளம்படைத் தோங்கும் நாடு.

புத்த சமயம் இந்துமதப் பூங்கா பூத்த பொன்மலராம்
சுத்த சன்மார்க் கத்தின்பச் சோதரர்போல் நாம்வாழப்
பத்தி பெருக்கும் பண்பாடு படைத்த நாடு நம்நாடு
முத்தன் விபுலா னந்தன்யாழ் முழங்கு மின்பத் தேன்நாடு.

ஆத்திரப் பட்டுழன்றே அறிவுக்கண் விழித்ததாலே
கோத்திரக் குலங்கள் கொட்டுங் குப்பைச்சாக் கடையைச் சுட்டு
சாத்திரக் கிடங்கை மூடிச் சண்டைகள் மூட்டுந் தண்ணிப்
போத்தலை உடைத் தெறிந்து புத்தாண்டுப் பூவை பூத்தாள்.

மனிதன் வாழும் மாநிலத்தில் மனிதப் பண்பு மணம்வீசும்
புனித வாழ்க்கை பூக்கட்டும் பொன்னிலங்கை வீதி யெல்லாம்
இனிய வருடச் சித்திரைத் தேன் இன்பத் தென்றல் வீசட்டும்
கனிகள் சிந்துங் கவிச்சோலைக் கலைநா டகங்கள் நடக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக் கேற்ற கவிதை கவிஞாநீ பாடிக் காட்டு
சாலமாய்ப் பதுங்குங் கவிதைச் சாட்டுப் பொய்க் கணக்கு விட்டு
ஞாலத்தை ஏமாற்றாதே நாவலர்க் கதுநஞ்சாகும்
ஏலத்திற் பொருளை விற்கும் வாணிபக் கவிதை சாகும்.

பிறக்கும் போது மூச்சோடு பிறந்த பாசந் தமிழ்ப் பாசம்
இறக்கும் போதும் நம்மண்ணில் இடறி வீழ்ந்து மடிவோம்நாம்
சிறக்கும் பணியால் நம்ஈழ நாடு செழிக்கச் சேவைசெய்வோம்
உறக்கம் சோம்பல் வேண்டாங்காண் ஊக்கம் நமது பேராக்கம்

கழிந்த துன்பப் புண்மாறாக் கருத்திற் கனவே தனைத்தீயால்
வழிந்த இன்பம் வற்றியது மாறுபட்ட நெஞ்சத்திற்
பிழிந்த கவிதை இனிக்காது பேசிச் சற்றுத் தொலைக்கின்றேன்
இழிந்த கொடூரம் இலங்கை மண்ணில் எதிர்காலத்தில் இன்னுமுண்டோ?

போன காலம் போகட்டும் போர்க் களங்கள் ஒழியட்டும்
ஆன காலம் ஆகட்டும் அமைதி அன்பு சமாதான
ஞான பானு உதிக்கட்டும் நல்ல சமூகந் தழைக்கட்டும்
வானம் பாடி வாழ்த்தட்டும் வருடப் பிறப்புச் சிறக்கட்டும்

வானத்திற் சுடரும் வெள்ளிப் படலத்தை எண்ண லாமோ?
பானுவெண் திங்கள் தன்னைப் பகைத்தவை மோதிற் றாமோ?
ஞானத்தை இறைவன் தந்தான் நன்நெறிப் பட்டு வாழ
மானத்தாய் இலங்கை மண்ணை மறந்துவே றெங்கு போவோம்?

தேசிய ஒருமைப் பாடோர் தேசத்தின் ஜீவ நாடி
வாசனை அன்பில் லாத மக்களுக் கின்ப முண்டோ?
தாச்மார்க் கத்தால் வாழும் சமூகத்தை வீழ்த்தொண்ணாது
நேசத்தோ டுழைக்கும் நாட்டில் நினைத்தது பலிக்கும் மாதோ!

ஒன்றுபட் டுழைத்தால் வாழ்வாம் ஒற்றுமை நீங்கில் தாழ்வாம்
என்றசொற் பொருள் பரந்த எழுச்சித் தேன் விருந்தளித்துச்
சென்றநம் பார திக்குத் தேவைநம் சேவை ஒன்றே
குன்றென நிமிர்ந்து வீரக் குரல்கொடுத் துழைப்போம் வாரீர்.

ஒற்று மைக்கோர் வித்திட்ட உணர்ச்சிக் கவிஞன் பாரதியைப்
பற்றிப் பற்றி நாம் பயின்று பட்டிக் காட்டைப் பட்டினம் போல்
சுற்றிப் பார்க்குந் தொழில்வளங்கள் சோரா மாரி எனப்படைப்போம்
சற்றுப் பொறுத்துப் பாருங்கள் கொற்றச் சங்கம் முழங்குதுகேள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீச்சுத் தோணிக் கடல்குளித்து வீரச் சுறாமீன் பிடித்தடக்கும்
மாச்சலறியா நம்மீழ மண்ணைக் காக்கும் மறவர்கள் நாம்
ஓச்சும் செங்கோற் குறளாட்சி உறுதி படைத்த மக்களெங்கள்
பேச்சி லுயிர்க்கும் அழகுதமிழ்ப் பெரியம் மாவின் தமிழ்மூச்சு!

பெரிய தோர் மறுமலர்ச்சி பேணும்பே ரனு பவத்தால்
அரிய தோர் பணிக்கு நம்மை அழைக்கின்றார் பிரேமதாசர்
உரிமையிற் காலையூன்றி உளங்கலந் தொன்று கூடிச்
சிறந்த தோர் தேசி யத்தாய் செழித்திடச் சேவை செய்வோம்.

வாய்த்த மக்கள் ஒற்றுமைக்கோர் வரம்பு கட்டி நம்நாட்டைத்
தேய்த்த இனப்போர் இருள்வெளிக்கத் தேசியப்பொன் விளக்கெடுப்போம்
காய்த்த மரங்கல் லெறிபட்டுங் கனிகள் சொரியக் காண்கின்றோம்
மாய்ச்ச லறியா ஜனாதிபதி வறுமை ஒழிக்குங் குணாதிபதி.

பூத்த தமிழ்சிங் களவருடப் புத்தாண்டுச்சித் திரைப்பொன்நாள்
மூத்த சான்றோர் மூதுரைப்பொன் மணிமுத் தார வடம்பூண்டு
சேர்த்த ஞானப் பதக்கமுடன் செஞ்சொற் சேவைப் பாட்டூஞ்சல்
ஆர்த்து முழங்கி அழகுதமிழ் அமுத விருந்திட் டாடுகின்றாள்.

சங்கத் தமிழ்த்தாய்ப் பண்பாடு சகத்தி லெங்குந் தழைத்தோங்க
வங்கக் கடல்சூழ் இலங்கையிலே வாழும் மக்கள் உளச்சாந்தி
பொங்கும் இன்பப் புதுவருடப் பூவை அன்புப் பணிபுரிந்தாள்
சிங்களர்செந் தமிழ் முஸ்லிம் சிறக்குஞ் சகோதரத் துவம்வாழ்க!

வசந்த காலத் தோழிமண மலர்கள் சொரிந்து வரவேற்க
இசைத் தேன் குயில்கள் பண்பாட இயற்கை அழகு வழிந்தோட
அசைக்கோர் அன்ன நடைமயிலாள் அழகுக்கூந்தல் அவிழ்ந்தாட
பசும்பொன் மேனி பளபளக்கச் சித்திரைப் பொற்பாவை வந்தாள்.

பெற்ற தாயும் பிறந்த நாடும் பேசும் மொழியும் நமக்குயிராம்
செற்றச் செருக்காம் மொழிச்சண்டை தேசி யத்துக் கோர்நாசம்
சுற்றுங் கலகத் தீமூட்டும் சுடலைக் காடா நம்நாடு?
பற்றும் இலங்கை ம்ணிநாட்டுப் பாசம் இரத்த பாசமன்றோ?

மக்கள் வாழ வழிவகுத்து வறுமை மாளப் போர்புரிந்து
தக்க தமிழ்ச்சிங் களவருடச் சமாதா னப்பொன் விருந்திட்டு
அக்காள் அன்புச் சித்திரைப்பெண் அவனி செழிக்க உலாவுகின்றாள்
பக்கத் தூஞ்சற் பாட்டினிலே பருகு மின்பந் தமிழின்பம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை யன்பு முகமலர்ந்து உள்ளங் குளிர உறவாடி
வண்ணத் தமிழும் சிங்களமும் மகிழ்ந்து கொஞ்சிக் கைகுலுக்கும்
அண்மைக் காலப் பேச்சினிலோர் அமைதிக் குழந்தை பிறந்தன்பு
மண்ணி லெங்குந் தேசிய மழலை பொழிந்து தவழ்ந்ததடா.

காதல் வீரம் ஞானநெறி கலந்தினிக்கும் வாழ்க்கையிலோர்
மோதல் நடக்க ஞாயமில்லை முற்றித் திரண்டு முறுகும்போர்ச்
சாதல் வேட்டைச் சூதுக்கோர் சகடக் காயோ மக்களினம்
போதும் போலிப் போதனைகள் புரிவோம் அரிய சாதனைகள்.

சொந்த நாட்டில் ஒற்றுமையாய்ச் சுதந் தரம்பெற் றன்போடு
எந்த மக்கள் இனமெனினும் இன்புற் றிருத்தல் இயல்பாகும்
சுந்த ரப்பொன் இலங்கையினைச் சுட்ட துன்பம் போதாதோ
சிந்த னைத்தேன் மொழிபொழிந்து சித்தி ரைச்சே யிழைசெப்பும்.

பிள்ளைப் பேறே தேட்டமெனப் பெருக்கும் மடமை நாட்டினிலே
அள்ளும் உணவைக் கிள்ளியுண்டால் ஆண்மை அழகு வளாந்திடுமோ?
கொள்ளும் பாரந் தாங்காமற் குடும்ப வண்டில் அச்சுடைந்தால்
உள்ள முடைந்த குடும்பமிடிப் பள்ளம் நிறைவ தெந்நாளோ?

சித்திரை வருட மென்றால் சிறுவர்க்குப் பேரா னந்தம்
புத்தாண்டுப் பட் டுடுத்துப் புன்னகை முறுவல் பூத்து
அத்தனா லயத்தைச் சுற்றி அஞ்சலித் தமுத முண்டு
நித்திரைக் கனவிற் கூட நினைப்பெலாம் ஊஞ்சலாடும்.

கலிவிருத்தம்

சித்தி ரைத்திரு மாமகள் பூத்தனள்
வித்தை கற்றவர் வேண்டுந் தொழில்பெறும்
இத்தி னத்தில் இளைஞர் மகிழ்ந்திடச்
சத்தி யஞ்சமா தானந் தழைக்கவே.

(1990 சித்திரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டூர் 1ம், 2ம் குறிச்சி பாலமுனை மாதர் கி. மு. சங்கப் புதுக் கட்டிடத் திறப்பு விழாவின்போது பாடிய

## வரவேற்புப் பாட்டு

மண்டூர்ப்பொன் மாதர்சங்க மணிக்கோயில் பாரீர்
வம்மின்கள் பெரியோரே வாழ்த்துகிறோம் வம்மின்
வண்டூறும் சோலையெலாம் வரிக்குயில்கள் பாடும்
வளமதுரத் தமிழ்மண்டூர் மாதர்பணி பாரீர்.

மண்டூரின் புகழ்ராச மாணிக்கமே வருக
மாமதுரத் தமிழன்பு மனைவியுடன் வருக
தொண்டு நம் புகழோங்கும் துரைராசி லிங்கம்
தோகைமயி லாள்பண்புத் துணைவியுடன் வருக.

இனியதமிழ்க் குயிர்ராச நாயகமே வருக
இலங்கைவளர் இயக்கடலின் துறைத்தலைவன் வருக
கனியமுதக் கனதசொல்சுப் பிரமணியம் வருக
கலகலத்துச் சிரிப்பொலிக்குங் கனகமணி வருக.

பெரியதம்பிப் புலவர்மணித் தம்பியெனும் பண்புப்
பெருமைசிதம் பரப்பிள்ளைப் பெருமகனே வருக
உரியதனிக் கடமையிலே உயர்குமார சாமி
ஊர்மக்கள் அன்போடும் உடன்கூடி வருக.

உழவுக்குந் தொழிலுக்கும் உயர்தில்லை மண்டூர்
உடைபெருக்குந் தொழில் நெசவுப்பள்ளி உதவிடுவீர்
அழுதழுது துறைதாண்டும் அநியாயம் பாரீர்
அலைசிறும் ஆறுமக்கள் உயிர்குடித்தல் பாவம்.

கல்விடறக் கரணமடித் துருண்டுவிழுந் தெருக்கள்
கரத்தைகளும் குடையடிக்கும் கழிந்தமரப பாலம்
பொல்லாத றோட்டென்று மறுத்துவிடும் மோட்டார்
போக்குவரத் தடைவழிகள் புதுக்கும்பணி புரிவீர்.

சொன்னதுபோல் செய்பவரே துணிவான பெரியோர்
சூதாட்டப் போரினிலே சுகமிழந்தார் மக்கள்
பொன்விளையும் பூமியெலாம் புதுவெள்ளம் பாய்ந்தும்
புதழ்பாடும் அணைக்கட்டைக் கட்டும்பணி புரிவீர்.

மண்டூர்மண் காணாத மாவித்தியா லயமாம்
மாணவர்கள் துறைதாண்டும் மாரிமழைப் பவ்வல்
கண்டோர்கள் ஏளனம்செய் கவலையெலாந் தீர்ப்பீர்
கண்ணோட்டம் உள்ளோரே காவல்புரிந் திடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மன்ற

# மங்கல வாழ்த்துச் செய்யுள்கள்

வாய்க்கால் வெள்ளப் பாய்ச்சலிலே
வயற்பொன் வாரி சொரியுதடா
தாய்க்கால் அன்புச் சாரதைமா
தேவி ஏழைக் காவியடா
நோய்க்கால் ஓடி விளையாடும்
நொடிக்கும் அன்புக் கதிர்வீச்சில்
சேய்க்கால் வாங்கிச் செழிக்குதடா
ராமக் கிருஷ்ணச் சித்தினைப்பார்.

இந்து மதமும் தானினிக்கும்
இயேசு மதமுந் தித்திக்கும்
இந்தின் இன்பப் பிறைபோற்றும்
ஸ்லாம் மதமும் எதிர்நிற்கும்
புந்திக் கினிய புத்தமதப்
பொருளுங் கனிந்து புகழ்வீசும்
எந்த மதமும் ஸ்ரீராமக்
கிருஷ்ண ரென்றால் இணங்கிவரும்.

முத்தமிழ் வளம்போல் ஓங்கி
மூங்கிலா றென முழங்கி
நர்த்தனம் புரியும் நங்கை
நல்வளம் சுரக்கப் பாயும்
பத்திமைத் தில்லை மண்டூர்
பரன்மகன் முருகன் அன்புச்
சித்திசேர் இராமக் கிருஷ்ண
திருப்பணி மன்றம் வாழ்க.

நாளை மறையும் நம்வாழ்வு
நடையில் ஞானப் பணிபுரியும்
வேளை யறிந்து விரைந்திடுவோம்
விழிமின் எழுமின் தோழர்களே
காளை நூறு சேர்ந்திழுத்தாற்
கருங்கல் மலையும் உருண்டோடும்
ஊளை நரிகள் நாம்அல்ல
உணர்ச்சிப் பரிகள் நாமன்றோ.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குருவாம் ராமக் கிருஷ்ணரருட்
கொள்கைக் காந்த இழுப்பினிலே
துரும்பாம் சொந்தச் சுகம்வீசித்
துடித்துப் பிணைந்த தொண்டாளன்
உருக்கொண்டாடும் சுவாமிஜீ
வானானந்தன் சேவைத் தீங்
கரும்பைச் சுவைத்த கவியாலென்
கண்மா மணியை வாழ்த்தேனோ.

மண்டூர் இராமக் கிருஷ்ணமன்றப்
பணியாம் அணிகள் மலர்ந்தோங்க
கண்டூர் கன்னித் தமிழ்மணக்குங்
கலைப் பூஞ்சோலைக் கல்லடியில்
பண்டூர் பரமகம்ஸ ரருட்
பழைய இல்ல மாணவர்தம்
தொண்டைப் பலகால் வாழ்த்தேனோ
தூய ராமன் அருளாலே.

பரம கம்ஸத் தேனாறு
பாயுங் கூட்டுப் பிரார்த்தனையும்
சிரம தானச் செஞ்செழிப்பும்
சீர்சால் அன்னக் கொடைவனப்பும்
குரவர் வாணி பூசைகளும்
குலவப் பணிசெய் மணிமன்றத்(து)
அருமை இளைஞர் ஊக்கப்பே
ராக்கம் நிறைந்து வாழியவே.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 'மாமி காணாள்'

காலையடிப் பால்முட்டிக் காவினோடு
கதைநடுவே அன்புள்ளக் காவுங்கூடும்
மாலைபடக் காலையடித் தீனாமுட்டி
மடிசுமக்கும் எருமைகளை அன்பாற் கூட்டிப்
பாலையடி முத்தருவிப் பாட்டினோடு
பண்மீட்டு நீந்திவரும் பருவக்காளை
மூலையடிப் பலாப் பழத்தை மச்சாள் காட்ட
முன்னிருட்டு மாலைக்கண் மாமிகாணாள்.

—★—

## சொர்க்கலோகம்

ஓலைப் பாயில் நெல்காயும்
உரலை நாட்டும் உலக்கைக்கை
வேலை யென்று பாராமல்
விரும்பிக் குத்தும் விளையாட்டாம்
வாலைக் குமரி என்மச்சாள்
வருத்த மறியாச் சீமாட்டி
சோலைக் குயிலாள் வாழுமிடம்
சொர்க்க லோகம் எனக்கென்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழறப்பொன் நாட்டுப் பெண்ணே!

உனைமணக்கப் பூமிமனை எழுதிக் காட்டும்
உறுதிங்கு நானுன்னை மணக்க வில்லை
மனைவிளக்கு நீயெனக்கு வாய்த்த செல்வம்
மணிக்கிள்ளாய் பவளப்பூம் பிள்ளாய் உள்ளாய்
கனவினிலும் எனைக்கலக்குங் காதலன்பே
கனியமுதே மணிக்குயிலே கரும்பே தேனே
நினைவினிலே புனைகவிதைச் சுவைநீ யானாய்
நிலை குலையாத் தமிழறப்பொன் நாட்டுப் பெண்ணே!

—★—

## "பரிசுமுண்டோ!"

பூச்சட்டிப் பூவுக்கும் பொன்மனைவா
சலிற் சிரிக்கும் பூரிப்புண்டாம்
பாற்சட்டித் தயிருக்கும் பற்பலமங்
கலவீட்டுப் படைப்பு முண்டாம்
தாச்சட்டிப் பலகாரக் குவியலுங்குந்
தனைக் காவுந் தகுதியுண்டாம்
பாச்சட்டிப் புலவனுக்குப் பதக்கடைமண்
ணாங்கட்டிப் பரிசு முண்டோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பூங்காவில் புகுந்த புன்சிரிப்பு"

சிந்தனைத் துடிப்பைத் தூண்டும் சித்திரை வருடப் பிள்ளாய்!
சொந்தச்சிந் தனையால் தோன்றும் சுதந்தரப் பாதை யுள்ளாய்
முந்திய வழியில் தைத்து முறிந்தமுள் ளெல்லாங் கிள்ளாய்
சுந்தரக் கவி யரங்கத் தென்றலில் உலாவும் நல்லாய்!

பூங்காவில் புகுந்த முல்லைப்புன்சிரிப் போடு பூத்த
தீந்தமிழ் மண்டூர்க் கீரைக் கடையலாம் எனது பாடல்
மாங்கனிச் சுவை பிழிந்து வைத்ததிங் கவி அரங்கில்
ஆங்கவித் தலைவன் ஆறு முகனுக் கோர் அன்புவணக்கம்:

கரும்பெனச் சுவை கனிந்த கவிமழை பொழிந்து தள்ளும்
அருங்கவி வாண ருக்கும் ஆர்வத் தேன் ரசிகருக்கும்
அரும்பு மென் கவிதை உள்ளத் தன்புசேர் வணக்கம் இன்று
பிறந்தபுத் தாண்டின் பேரால் பெறுங்கவிப் பரிசு கொண்மின்!

உள்ளமோர் பூங்கா வாகும் உயர்குணம் எல்லாம் பூக்கள்
தெள்ளுமெஞ் ஞானத் தேனைத் தேடுமா ணாக்கர் வண்டாம்
கொள்ளுவோர் உள்ளந் தோறும் குமுறுமா னந்த வெள்ளம்
உள்ளொளி முகத்தி லோடி உதிக்கும் புன் சிரிப்பா மன்றோ!

பொன்னகைப் பூணா ரங்கள் புதுப்புது வர்ண மான
மின்னகை மேனிக் கேற்ற மினுக்குகள் மெருகு தீட்டும்
பன்னகை படைத்தும் மக்கட் பண்பிலாள் பதடி யாவாள்
புன்னகை முகத்திற் பூக்கும் புடைத்தங்கப் பவுணா மன்றோ!

சித்திரைப் பட் டுடுத்துச் சிறுநகை முறுவல் பூத்து
முத்தலங் காரம் மொய்த்த மோகனக் குழல் முடித்து
சித்திரை வருடப் பொன்னாள் சிறுவர்க் கோர் பரிசளித்து
உத்தமப் பணிகள் செய்து உலாவினாள் வீதி தோறும்.

சேவையாற் சிறந்த மேலோர் செய்கையாற் செறிந்த ஞானப்
பார்வையால் மக்கள் வாழ்க்கைப் பாதைக்கோர் விளக்க மானார்
பூவையர் புன் சிரிப்பில் புதைந்தநற் பொருளை யெல்லாம்
ஆர்வமாய் அடுத்துக் காட்டும் அணிமுகச் செவ்வி பாரீர்.

மக்களை மக்க ளாக மதித்தருள் அன்பால் அணைக்கத்
தக்கவர் தலைவ ராகுந் தகுதியை விளக்கிக் காட்டும்
மிக்கபுன் சிரிப்பின் மேன்மை வித்தகத் தத்து வங்கள்
சித்திரக் கலைஞர் தீட்டும் செந்தமிழ்ப் பண்பா மன்றோ!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மோனப்புன் னகையாம் ஞான முத்திரை மோக னத்தால்
ஞானியர் உலகில் நாளும் நடப்பதைத் தெளிந்து செல்லும்
தேனமு தான தெய்வச் சிற்சுகம் பூத்த வாழ்வின்
ஆனந்த முகத்தோர்க் கெல்லாம் அறிவொளி ஆக்கம் அன்றோ!

சீரிய மனிதப் பண்புச் செழிப்பெலாம் வறண்டு போக
நாரியர் உள்ளம்மாறி நடைமுறை தலை கீழாகக்
கூரிய அறிவு குன்றக் கொடுமனக் குரங்கு பாயச்
சேரிப் பூஞ் சோலை எல்லாம் சிரிக்கும் புன் முறுவல் பாரீர்!

நோக்கொடு நோக்கம் ஒத்தால் நுண்மையாங் காத லின்பம்
ஊக்கமாய் வளர்ந்து நாளும் உளங்கலந்தினிக்கு மன்றோ
போக்கெலாம் பாலை, மாறிப் பூத்த பொன் மருதத் தூடற்
சேர்க்கையால் வாழ்க்கை இன்பந் தித்திக்கும் அறமாம் அன்றோ?

அதிகமாய் அளக்கும் பேச்சால் அறிவொளி அணைந்து போகும்
விதம் வித வெற்றுப் பேச்சு வில்லம்பால் வேட்டையாடும்
பதவியில் மறைந்து பல்லோர் பணியெனப் பிணியைத் தூண்டும்
சதியினைக் கண்டு ஞானத் தாமரை சிரித்தல்பாரீர்.

புத்தகப் பூச்சி யாகிப் புலமையாற் கொழுத்தோம் என்று
வித்தகச் செருக்கில் ஏறி விழுந்து கால் முறிந்தோர் பல்லோர்
நித்தமும் அமைதி பூத்த நெறியிலே நிலைத்த மோனச்
சித்தர்தம் உள்ளச் செந்தா மரைமுகச் செவ்வி பாரீர்!

பாட்டிலே தேர்ந்த ஞானப் பாவலர் படைத்த பாடல்
ஏட்டினைத் தொட்டும் பாரார் இராமனின். இலட் சியத்தை
சாட்டுக்குச் சளப்பிச் சறுக்குந் தலைவரைச் சிரித்துப் பார்க்கும்
காட்டுப் பூ வண்டுங் கம்பன் கவிச்சுவை வெறித்துப் பாடும்.

பூங்கொடிப் பந்தர், ஊஞ்சலில் ஆடிப்
புன்னகை பூத்தனள் ஒருத்தி
கூந்தலை வளைத்துக் கொள்ளைவண் டினங்கள்
குதுகலித் தேற்றபண் பாடத்
தூங்கிய கூத்து மயிலெழக் குயிலின்
சுவைக்கவிப் பயன்சொலக் கிளிகள்
வாங்கிளந் தென்றல் வானொலி, பரப்பும்
வாசலிற் சிரித்தது வசந்தம்.

இலங்கை வானொலிக் கவியரங்கம் 03-04-83.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “தரணியொடு வானாளத் தருவரேனும்”

காட்சிக் கரிய மெய்ப்பொருளாய்க்
        ககனப் பரப்புக் கப்பாலாய்
மாட்சிக் குரிய மணிமுடியை
        மலர்க்கா லடியை மாலயனும்
சூழ்ச்சிக் கருத்தால் உணராமெய்ச்
        சோதி வடிவை வரம்பிசந்த
ஆட்சிப் பொருளாய் அகண்டசிவன்
        அன்பர்க் கருகாய் நின்றானே.

அப்பர் மணிவா சகர்போல
        அடியேன் பாட முடியாதாம்
தப்பித்தவறி நான் பாடுந்
        தமிழைத் தட்டிக் கழிப்பாயோ
ஒப்பி லப்பா உயர்தில்லைக்
        கூத்தா உன்பூங் கழற்பூதி
அப்பிக் கொள்ளும் ஆர்வத்தால்
        அன்புக் கவிதை ஆகாதோ!

நாவினுக் கினியசொல் சிவாயநம மந்திரத்
        தேனமுத ஞான ஊற்றாம்
நாதனருள் மாரிவள மானசிவ மார்க்கமே
        நன்னெறிச் சன்மார்க்க மாம்
ஓய்விலா தன்பர்பணி செய்வதென் பணியலால்
        உலகினுயர் பணிக ளில்லை
உனதுதிரு வருள்வடிவ மானதிரு வடியலால்
        உயர்ந்த தோர் செல்வமில்லை.

காவியக் கவிஞரோ டோவியக் கலைஞர்தங்
        கற்பனைச் சுவை யமுதமே
கட்டிக் கரும்பேஎன் பொட்டுக் கவிக்குமோர்
        சொட்டலங் கார வடிவே
காவல்புரி யாதவயல் கைவிடுதல் போலெனைக்
        கருதா திருத்த லழகோ?
கலங்கிநொந் தழுதகுரல் காதில்விழ வில்லையோ
        கற்பகக் கடவு ளாரே.

பட்டலங் காரப் பணியெலா மணிந்து
பகல்செய்முத் தணிநிலா வெறிக்கும்
கட்டலங் காரக் கலைகளாற் சிறந்து
கவின்செய்பொன் மாடிமேற் காதல்
முட்டலங் காரத் துடியிடை மாதர்
முருக்கிதழ் சுவைத்துமுத் தாடும்
துட்டலங் காரப் பொறிமுறித் துனையே
துதித்திடத் துணையருள் சிவனே.

மயக்கிடும் உலக வாழ்க்கையில் மயங்கி
மலர்த்திரு வடியினை மறந்தேன்
கயலினை முத்தைக் கமலமொட் டிணையைக்
காந்தளைக் கழையினைப் பிடியைப்
புயலினைக் குயிலை மயிலினைப் புகழ்ந்தே
புலந்தடு மாறுமென் மூடச்
சுயநினை வினிலோர் விழிப்பினைத் தந்த
சுடரருட் சோதியே போற்றி.

சேர்க்கும் பொருளுக் குழையாது
சிந்தித் தன்பால் அழையாது
ஆர்க்கும் உலக வாழ்க்கையிலே
அல்லற் பட்டுச் சுழன்றோமால்
காக்குந் தலைவன் அருகிருக்கக்
கருதுஞ் செல்வம் வேறுளதோ!
ஆக்கம் பெருக்குஞ் சிவவிரதத்
தடியார்க் கென்றும் ஆனந்தம்.

விரிந்த உலகில் விஞ்ஞான
வித்தைச் செல்வங் குவிந்தாலும்
சரிந்த வாழ்வைக் கண்டதல்லாற்
சமூகத் தமைதி கண்டோமா?
வரிந்த பாச ஞானத்தால்
மயக்குஞ் செல்வம் நிலையாது
சொரிந்த அன்புச் சிவவிரதச்
சுருதிப் பயனுங் குலையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா பொன்னம் பலத்தாடும்
அரனே அடிமைக் கோர்வரம்நீ
தப்பா தருள வேண்டுமப்பா
தனக்குத் தானொப் புடையானே
இப்பா ருலகில் வறுமையிலே
இடர்ப்பட் டேழை அழிந்தாலும்
செப்பற் கரிய சிவநாமச்
செல்வஞ் செழிக்கச் செய்வாய்நீ.

பண்பொன் றறியார் வாசலிலே
பலநாட் பழகிப் பயின்றாலும்
அன்பொன் றில்லார் வஞ்சிக்க
அடியேன் அலைந்து கலங்குவதோ
என்புன் நிலைமை தீர்த் தெளியேன்
இதயம் புரிந்து கொள்வாய்நீ
மன்று ளாடும் மணியேநின்
மலர்க்கா லடியேன் தலைச்செல்வம்.

பட்டப் படிப்பு முடிப்பினிலோர்
பண்புப் பயிற்சி பெற்றோமா
மட்டி லன்புக் கனிசுவைத்தோர்
மாற்றம் மனதில் அடைந்தோமா
எட்டற் கரிய சிவவிரதத்
தின்பஞ் சற்று நுகர்ந்தோமா
தொட்டுக் கேட்டால் மனச்சாட்சி
சொல்லும் நம்து ரகசியங்கள்.

அடியார்க் கருளுஞ் சிவராத்ரி
விரதத் தார்வம் மிக்கூர
முடியா முதலை முதற்பொருளை
முன்வைத் துள்ளப் பொருளாக்கிப்
பிடிக்கும் அன்பு வலைவீசிப்
பெரிய பொருளைப் பிடித்தோமா?
நடிக்கும் உலக மேடையிலோர்
நம்பன் பணியை நாடோமா..



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வஞ்சித் துழைக்கும் வாழ்க்கையிலே
        வரம்பு கடந்த பேராசை
மிஞ்சிக் கொதிக்கும் மேதினியில்
        மேலோர் மதிக்குங் குறிக்கோளைக்
கிஞ்சித் தொருகால் நினைத்தோமா?
        கிட்டுந் துறையைக் கிட்டாது
அஞ்சித் துடிக்க வைத்ததடா!
        அற்பப் பொருட்பேய் ஆட்டமடா!

விழித்தா ரெல்லாம் விழித்தாரோ
        விழிக்கும் பொருளில் விழித்தாரோ
கழித்தார் இரவைக் கழித்தாரோ
        கருதும் பொருளிற் கழித்தாரோ
அளித்தா ரெல்லாம் அளித்தாரோ
        அரனார் பூசைக் களித்தாரோ
உழைத்தா ரெல்லாம் உழைத்தாரோ
        உழைக்கும் பொருளுக் குழைத்தாரோ.

காணி ஆயிரங் காசுபல் லாயிரம்
        கட்டிக் காத்த பொருள்கள்பல் லாயிரம்
பூணும் இச்சைப் புதுப்பணி ஆயிரம்
        பூப்பன் னாடைப்பொன் னர்டைகள் ஆயிரம்
பேணும் இன்ப சுகங்கள்பல் லாயிரம்
        பின்னும் பின்னும் பெரும்புக ழாயிரம்
சேண சுன்ற சிறப்புக ளாயிரம்
        சேரினும் சிவச் செல்வமுன் நிற்பவோ.

(இலங்கை வானொலிக் கவிதைகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடத் தைப்பொங்கல்

பூவிற் பூத்த தைவருடப்
பொங்க லின்பக் கவியரங்கில்
நாவிற் பூத்த நடையினிக்க
நம்மை அழைக்கும் நடராசன்
சேவை பூத்த செம்மலுக்கும்
செழிக்குங் கவிதைப் பாவலர்க்கும்
பாவிற் பூத்த ரசிகர்க்கும்
பணிவாம் அன்பு வணக்கங்கள்.

பார்வளம் புதுக்குந் தெய்வப்
பகலவன் வடபால் நோக்கும்
சீர்வளம் பொங்கத் தங்குந்
திருவளம் வீட்டிற் பொங்க
ஊர்வளம் பொங்க ஓதும்
உயர்கலை வளங்கள் பொங்க
ஏர்வளம் பொங்க எங்கும்
இனியதைப் பொன்னாள் பொங்கும்.

சோம்பல் அறியான் தொழிலாளி
துன்பம் போக்கும் உழைப்பாளி
ஆம்பல் முயற்சி அணியுடையான்
அவனே உழவுப் படைநடையான்
தேம்பான் கூம்பான் தேகத்தைப்
பிழிந்தும் அழிந்தும் சோர்வில்லான்
பூம்பொன் வயலைப் புரக்கின்றான்
புவனிக் குணவு படைக்கின்றான்.

சொற்பதங் கடந்த தெய்வச்
சுடரொளிக் கடிமை பூண்ட
நற்றவச் சான்றோர் நாட்டும்
நன்னெறி தழைக்க நாளும்
முற்படும் உழவர் ஞான
முயற்சியால் இன்பம் பொங்கும்
அற்புதப் பொங்கல் உண்ணும்
அருணன்பொற் கரங்கள் மாதோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தொழில்கள் பலவளர்க்கும்
உரிமைத் தாயாம் உழவுதொழில்
பலகைத் தொழிற்பூங் கொடிகட்கோர்
பாரந் தாங்குங் கொளுகொம்பாய்
நிலவுந் தொழிலைப் புதுமையிலோர்
நிறை குடம்போல் ஆக்கோமோ
குலவும் ஈழப் புகழ்வெற்றிக்
கொடிகண் டுள்ளங் குளிரோமோ.

எந்தி ரங்கள் இரைந்துழவு
செய்யும் வேகம் இந்நாளில்
விந்தை உலகில் விஞ்ஞான
வித்தைப் புதுமை நெல்லினங்கள்
முந்தி விளைக்கும் நல்லுரங்கள்
மூட்டும் அறிவுப் போதனைகள்
முந்தை உழவன் வேதனைகள்
முற்றும் ஒழிக்குஞ் சாதனைகள்.

கண்டு களிக்கும் நவயுகப்பொற்
காலந் தன்னில் நாம்வாழ்ந்தும்
பண்டு களித்த தன்நிறைவைப்
படைத்திந் நாளிற் பாரோமோ
அண்டை நாட்டுக் குணவளித்த
அழகாம் ஈழ வளநாட்டைக்
கண்டு களிக்குங் காவியங்கள்
கவிஞர் பாட வேண்டாமோ.

பிள்ளைப் பேறே தேட்டமெனப்
பெருக்கும் மடமை நாட்டினிலே
அள்ளும் உணவைக் கிள்ளியுண்டால்
ஆண்மை அழகு வளர்ந்திடுமோ
கொள்ளும் பாரந் தாங்காமற்
குடும்ப வண்டில் அச்சுடைந்தால்
உள்ளம் உடைந்த குடும்பமிடிப்
பள்ளம் நிறைவ தென்னாளோ.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஊணும் உடையும் இருகண்கள்
உலக நடையால் உயர்பெண்கள்
ஊணைச் சிலநாள் வெறுத்தாலும்
உடையோர் கணத்தும் வெறுப்பாரோ
பேணும் நெசவுத் தொழிலாலுன்
பெத்தாவுக்கோர் சேலை கொடு
பூணும் உடைக்கோர் ஆயிரம்பொன்
தருமாப் பிளையை மணப்பாய்நீ.

பேனா பிடிக்குங் கைக்கின்னாள்
பிழைப்புக் கிடைப்ப தருமையடி
மானே என்னைப் பழிக்காதே
மறுப்புச் சொல்லி விழிக்காதே
தேனே அனைய துரோபதைக்குத்
திருமால் மானங் காத்ததொழில்
ஞானக் கலைப்பூந் தொழிலால்நம்
நாடு செழிக்க வேண்டாமோ.

சீதனந் தேடி அலைகிறார்
பிறந்த நாட்டிலோர் சேவைசெய்தறியார்
மாதனம் பூக்கும் மணமகட்குரிய
மணமகன் எவனும்முன் வரட்டும்
மாதன மகளை மாமணம்முடிக்க
மாமனை ஆதனங் கேட்பார்
சீதனம் இவையோ செப்புதல்
வெட்கம் சிறியவர் ஆசையீ தொழிமின்.

படித்துக் கண்ணீர் வடிக்காதீர்
பதவிக் கோடித் துடிக்காதீர்
குடும்பம் தழைக்கக் கைகொடுக்கும்
குடிசைத் தொழிலை மறக்காதீர்
அடிமைத் தொழிலுக் கேங்காதீர்
ஆக்கப் பணியில் தூங்காதீர்
இடித்துக். கூறுகின்றேன் என்
ஈழமணிநாட் டிளைஞர்களே.

(இலங்கை வானொலிக் கவிதைகள்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "எனையிடர் செய்தவையே"

பிறக்கும் போதோ படுந்துன்பம்
பெற்றாள் அறிவாள் பிறரறியார்
இறக்குங் காலம் வருவதற்குள்
எண்ணத் தொலையாத் துன்பவெள்ளம்
உறக்கத் துள்ளும் உறங்காமல்
உயிரைக் குடைந்து கொல்லுமதை
ஒறுக்கும் ஞானம் உதிக்காமல்
உலக வாழ்வில் உழன்றேனே.

பிஞ்சிளம் வயதி லென்னைப்
பெற்றவள் பிரிந்து விட்டாள்
அஞ்சிடுந் துயர்கள் பொங்கும்
அலையிலே அடிபட் டந்தோ!
துஞ்சுத லின்றி நாளும்
துரும்பெனச் சுழன்று நொந்தேன்
கொஞ்சிடுந் தாயன் பில்லாக்
குழந்தையின் கோலங் காணீர்.

சிறுபிழை ஒன்று செய்தாற்
சீறுவாள் சிறிய தாயே
உறுசுவை உணவை ஊட்டி
உவந்திடும் மலர்க்கை காணேன்.
குறுகிய மனத்துக் குண்டோ
குழந்தையைத் தாங்கும் பண்பு
எறிந்திடும் அம்பு பாயும்
ஏச்செலாந் துன்ப மம்மா!

தாயிலாப் பிள்ளை நாக்குத்
தட்டியே ருசிப்ப துண்டோ!
வாயிலர்க் குஞ்சுக் கின்ப
வளர்ச்சிதான் வாய்ப்ப தாமோ?
செய்தகும் குறும்பு கண்டு
சிரிப்பதுந் தாய்மைப் பண்பாம்
ஒய்விலாக் குருவி ஓட்டம்
ஒருசிறு குழந்தை ஆட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டினை விட்டுச் சற்று
வெளியிலே தோழ ரோடு
ஆட்டமும் போட்டுச் சென்றால்
அடிப்பழஞ் சுவைக்க வேண்டும்
ஏட்டினை ஏடடா என்றால்
எமபயம் எதிரே தோன்றும்
சூட்டிலே புழுப்போல் நானுந்
துடித்ததோர் குழந்தைக் காலம்.

அக்கரம் எழுதுங் கையில்
ஆயிரம் அடிதான் போட்டால்
தக்கதோர் பள்ளி வாழ்க்கை
தான்சிறைச் சாலை யன்றோ!
துக்கமுந் துயரத் தாலும்
தொலைந்தது பாதிச் சீவன்
வக்கணைப் பாய்ச்ச லாலே
வளருமோ கல்விப் பைங்கூழ்.

புத்திதான் தெளியாக் காலம்
புதல்வருக் குறுதி யேது?
சித்திக ளேது ஞானச்
சிறப்புக ளேது கல்வி
வித்தைக ளேது நன்மை
தீமைகளேது யாவும்.
இத்தலப் புதுமை யன்றோ!
இளமையி லிடர்செய் யார்தீர்!

ஈதிளம் பருவத்துள்ளே
இரண்டொரு கவிதை கேட்டீர்
தீதிலாக் குழந்தை துன்பத்
தீயிலே எரிதல் பாவம்
சாதனை பயிலும் போது
தவறுத லியற்கை யன்றோ!
ஆதலால் அன்பி னாலே
அணைப்பது குழந்தைத் தர்மம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரப் பருவங் குதூகலித்துக்
கொஞ்சும் பருவங் கொடிமின்னார்
அமர்க்கண் குத்தும் அப்பருவம்
அன்பாற் கலக்கும் மணப்பருவம்
நமக்கு மட்டும் புதிதல்ல
நமன்வே தனையிற் பொல்லாதாம்
சுமக்கொண் ணாத மலைசுமக்குந்
துரும்போ நூலோ துணுக்குற்றேன்.

பக்குவம் அரும்புங் காலம்
பால்மணப் பண்பு தோன்றும்
தக்கவ ரறிந்தன் பாலே
தனையரைத் தாங்கு வார்கள்
சிக்கலை வெல்லும் ஞானம்
செழித்திடத் தூண்டா விட்டால்
சுக்குநூ றாக வாழ்க்கை
சுடுபடும் இடரே கூற்றம்.

வேலைப் பூட்டி வில்வளைத்து
வெறித்தென் ஆவி வேட்டையிடும்
சேலைக் கண்டு திடுக்கிட்டுச்
செத்துப் பிழைத்தேன் சிறைப்படுத்தும்
நூலிற் சிக்கி இரண்டு மதக்
கொம்பு கிழித்த நோதீரக்
கோலக் கொவ்வை இதழமுதங்
குடிக்குங் கனவா லழிவுற்றேன்

உணர்ச்சிக் காதல் வெறியூட்டி
உயிரைக் கவர்ந்தாள் ஒருத்தியவன்
புணர்ச்சிக் காகப் புறப்பட்டுப்
போகும் வழியோ யமலோகம்
மணக்கும் என்றால் முயற்கொம்பாம்
மதுர மொழியாள் உறுதிமொழிச்
சுணக்கத் தாலே உயிர்விடுமோ
சோகக் கடலில் வீழ்ந்துழன்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லற் கரிய விதியோமுன்
வினையோ சனியன் விளையாட்டோ
கொல்லக் குதிக்குங் கொடுங்கூற்றோ
குறையோ முறையோ கூறாதீர்
முல்லைச் சிரிப்பு முறுவலிலே
மோகம் விழுங்க மூர்ச்சித்தேன்
நல்லாள் இன்பக் கடல்குளித்தால்
நமக்குத் துன்பம் பிரிவன்றோ!

நனவிற் கானல் நீர்குடித்தே
நானும் மானும் நேரானோம்
கனவி லின்ப மணிக்குயிலைக்
கலந்தாற் காதற் பசிபோமோ?
நினைவுக் கடலில் ஓடம்போல்
நீந்தும் பவளப் பூங்கொடியாள்
புனையுங் கவிதைப் பூணாரம்
பூண்டாள் பொன்னா ரம்பூணாள்.

உடம்பி னழகோ அழகென்றேன்
உள்ளத் தழகே அழகென்றாள்
உடம்பு முடம்புங் கூடுவதோ
உணர்ச்சி மிக்க புணர்ச்சியென்றேன்
உடம்புக் கிளமை மாறிவிடும்
உயிநக் கேது முதுமையென்றாள்
உடம்போர் கருவி உழு துண்டு
உயிர்வாழ் வோமென் றுலாவுகின்றாள்.

நமக்கு நாமும் எதிரிகளே
நல்லோர் நமக்குச் சொல்லிவிட்டார்
எமக்கு ஞானம் இனிவேண்டாம்
இதற்கு மறுப்புத் தாணில்லை
சுமக்குந் துன்பச் சிறைக்குள்ளே
தூய்மை யில்லா மனக்குரங்கு
இமைக்குள் மயக்கி வீழ்த்தியதால்
இன்பம் ஓடி ஒளித்ததுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தும் படைத்த ராவணனார்
பலத்தை அழித்த படையென்ன
கொத்தும் நாகக் கொடியனுயிர்
குடித்துக் குலத்தைக் குமைத்ததென்ன?
பித்துப் பிடித்த இந்திரனார்
ஆயி ரங்கண் பெற்றதுமேன்
சித்த மென்னுங் கண்ணாடி
சிதறி விழ்ந்த செயலன்றோ!

சற்றோர் துயரில் இடறிவிட்டால்
'சபாஷ்' என் றிளித்துக் கைதட்டும்
அற்பர் வம்புச் சேட்டையிலே
அறிவைப் புதைக்கும் இருள்கண்டேன்
புற்றுப் பாம்பு போல் மறைந்து
புன்மைச் சதிசெய் போலியரை
உற்றுப் பார்க்கக் கண்கூசி
ஒளித்தோர் மூலைக் கோடிவிட்டேன்.

சாதி வெறிப்போர் தான்தூண்டிச்
சமூகம் அழியப் பகைமூட்டும்
பாத கத்தோர் தமது சொந்தப்
பதவி காக்கப் படைதிரட்டும்
சூதுக் கிடங்கில் வீழ்ந்தோர்கள்
துன்பச் சேற்றில் புதைந்தழுதார்
நீதி யறியா நீசர்களை
நினைத்தால் நெஞ்சங் கொதிக்குதடா!

இனத்தைப் பிரிந்த மான் கதறி
ஏங்கி விழுந்து களைத்தோடி
வனத்துக் கொதுங்க மதிவயங்கி
வஞ்சந் தீர்க்க வழிமறிக்கும்
சனத்துட் சிக்கிச் சதிவலைக்குள்
சாகுந் துன்பக் கொடுமையைப்போல்
சினத்துச் சீறிப் பழிவாங்கும்
சிறியோ ராலுந் துயருற்றேன்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெள்ளைச் சீனி மூடைகளை
வேண்டி யறிந்தே விடியமுன்பு
கொள்ளை லாபம் அடிப்பதற்கே
குகைக்குட் பதுக்கி மெள்ளமெள்ளக்
கள்ள 'மாக்கற்' நடத்துகின்றார்
கனவான் பெரிய முதலாளி
கொள்ளி வைத்தார் ஏழைகண்ணீர்
கூரம் பாகக் குத்தாதோ!

வருந்தி வருந்தி உழைத்தாலும்
வருடம் முழுதும் வறுமையொன்றே
விருந்தா யுண்டு மேனிகெட்டு
மெலிந்தார் தேடும் பணத்தையெல்லாம்
இருந்த படியே சிலர்வாங்கி
இருப்புப் பெட்டி தனிற்பூட்டச்
சுருண்டு மடிந்தோர் பசியாலே
சுழன்ற நெருப்புப் பற்றாதோ!

நெல்லுச் சங்க மனேச்சருக்கு
நிகரோ சொல்லக் கூடாதாம்
கல்லுக் குவியல் போலவர்கைக்
காசுக் கட்டோ களியாட்டம்
மல்லுக் கட்டிப் பார்த்தாலும்
மாதஞ் சல்லி மிஞ்சுதில்லை
பல்லுக் காட்டும் உத்தியோகப்
பட்டஞ் சுமந்து கெட்டோமே.

வேட்டி உடுத்துச் சென்றாலோ
விசர்நாய் போலக் கடித்துறுமும்
கோட்டுஞ் சூட்டும் போட்டாலோ
கொஞ்சிக் கொடுத்துக் கைகுலுக்கும்
நாட்டான் என்றால் நகைப்பதுவும்
நகரான் என்றால் நயப்பதுவும்
காட்டும் அரசாங் கத்துரைமார்
கர்வத் தாலுங் கலங்கிவிட்டேன்.

(கவிஞர் நீலாவணன் தலைமையில்கல்முனை தமிழ்ச் சங்கம் நடாத்திய கவியரங்கில் பாடப்பட்ட செய்யுள்கள்.)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீதும் நன்றும் பிறர்தரவாரா

வான வெளியைப் போல்நமது மனமும் பரந்த வெளியாகும்
வான வெளியாம் விஞ்ஞான வரம்பைக் கடந்த மெய்ஞ்ஞான
மோன வெளியில் ஆனந்த முத்தி பெற்றார் முனிவர் பலர்
ஞானக் கண்ணன் நம்வாழ்வை நாளுங் காவல் செய்கின்றான்.

முன்வினைப் பயனால் வாழ்வில் முளைத்திடும் இன்ப துன்பம்
பின்வினைப் பயனால் பின்னும் பெருகிடும் பிறவி தோறும்
தன்வினை தன்னைச் சுட்ட சரித்திரம் பலநாங் கண்டோம்,
என்வினை என்னைச் சுட்டால் பிறரிதற் கென்ன செய்வார்?

உருவத்தால் உயர்ந்து விட்டோம் உள்ளத்தால் உயர்ந்துள் ளோமா
துருவிநம் நெஞ்சைத் தொட்டால் சுடச்சுடச் சாட்சி சொல்லும்,
செருக்கினால் உருண்டு வீழ்ந்தான் திருமால்முன் நரகா சூரன்
உருவகப் பொருளாந் தீபா வலிப்பொருள் உணர்ந்து வாழ்வோம்.

கடையிலே பண்டம் வாங்குங் கணக்கல்ல தீதும் நன்றும்
நடையிலே தேடிக் கொள்ளும் நபநட்டச் சொத்திரண்டும்
குடைநிழல் போலும் நன்மை கொடுவெயில் போலுந் தீமை
புடமிட்ட தங்கத் துக்கும் இரும்புக்கும் பொருத்தம் ஏது?

எரிசுடர்க் கதிரை வீழ்த்தும் இருட்படை உலகில் உண்டோ
குறிதவ றாத நல்லோர் கொள்கைக் கோர் மாறு முண்டோ
நெறிதவ றாத நீதி வாழ்வினை நேரிற் காட்டும்
முறைதவ றாத மூத்தோர் முதுமொழி அமிழ்தங் கண்டீர்.

துரியன் துச்சா தனன்சகுனி துட்டப் போராற் பகைத்தெழுந்து
அருமைப் பஞ்ச பாண்டவர்முன் அடியோ டழிந்த கதைபடித்தோம்
தருமஞ் சற்றுத் தலைகுனிய அதர்மம் தங்க முடி அசைக்கும்
இறுதி முடிவில் அதர்மந்தான் இருந்த இடமும் இல்லையடா.

(கவியரங்கம் – இலங்கை வானொலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அறத்தால் வருவதே இன்பம்"

இவ்வுலக வாழ்க்கையிலே இன்ப துன்ப
இரட்டையிலே சிக்காதோர் எவரு மில்லை
செவ்வியநல் லின்பத்தின் சேர்க்கை யாலே
சிறந்தோருந் துன்பமெனுஞ் சிறைக்குள் வீழ்ந்தார்
எவ்வழியா லின்பத்தைத் துய்க்க லாமோ
எவ்வுயிரும் அதைவிரும்பல் இயற்கை யன்றோ
ஓவ்வாத துன்பத்தை ஒழித் துயர்ந்தோர்
உலகினிலே இப்போதும் உலாவு கின்றார்.

எத்தனைபுத் தாண்டுகள்தான் ஏகக் கண்டோம்
இவற்றுள்ளே நிலைத்ததோர் இன்ப முண்டோ
அத்தனைபுத் தாண்டுமன்ற அனுபவங்கள்
அறிவுக்குச் சுடர்கொளுத்துந் தூண்டு கோலாம்
உத்தமநல் லறத்தின்பம் உள்ளோ ரெல்லாம்
உள்ளோராம் மற்றுடையோ ருடையோ ரல்லர்
சித்திக்குஞ் சீரறங்கள் செழித்துப் பூத்தால்
சீவனுக்குச் சிவபோகச் சித்தி யுண்டாம்.

இதயமெனும் அறக்கோயில் எவர்க்கு முண்டாம்
இதற்குள்ளே அடங்காத இன்ப மில்லை
அதைத்துடைத்துப் பெருக்காதோர் அறமே காணார்
ஆதலினால் 'இதயசுத்தி' அறத்தோர் பண்பாம்
உதயமாம் அறக்கதிரோன் உதித்து விட்டால்
உருண்ட துயர்க் கட்டியெலாம் உருகிச் சாகும்
எதை எதையோ துய்த்து விட்டோம் இன்பங்காணோம்
ஏங்குவதேன் 'இதயசுத்தி' இன்னு மில்லை.

'அறஞ்செய்ய விரும்பென்றாள்' அறிவுப் பாட்டி
அமிழ்தம்போற் குழந்தைக்கும் ஊட்டுகின்றாள்
அறமென்றால் பொருளையெல்லாம் அழிப்பதல்ல
அவர்க்கியல்பாம் ஒழுக்கத்தை அறிவாற் காத்து
பிறர்க்கின்னல் செய்யாத பெருமை ஒன்றே
பின்னாலே பேரின்ப வீட்டைக் காட்டும்
குறைக்குடம்போற் சலசலக்குங் கூத்து வேண்டாம்
நிறைந்தகுடக் குணங்கோடார் அறமுங் கோடார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கங்கள் பலகூட்டிச் சான்றோர் முன்னாள்
சாகாத கவிதையறஞ் சமைத்துத் தந்தார்
இங்கிதற்கோ நிகரான இன்ப மில்லை
இதயத்தோர் சாட்சியென ஈசன் நின்றான்
சிங்கமெனக் கர்ச்சித்துச் சீறிப் பாய்ந்து
செருவென்ற மன்னரறஞ் செழிக்கச் செய்தார்
தங்கம்பொன் முத்துமணித் தாமம் அள்ளித்
தானீந்தார் தருமத்தாய் தலை நிமிர்ந்தாள்.

சிபிதன்னைச் சிதைத்தோர்சிற் றுயிரைக் காத்தான்
செங்கரத்தைத் துணித்தொருவன் சிறப்புப் பெற்றான்
உயிர்மகனைத் தேரூர்ந்து ஒருவன் கொன்றான்
ஒருமகனைக் கறிசமைத்தோன் விருந்துக் கன்றோ?
உபயமெனப் பொற்றேரை ஒருவ னீந்து
ஒருமுல்லைக் கொடியினிலே உயிரைக் கண்டான்
அபயமெனப் பாம்பொன்றை நளனுங் காத்தான்
அறப்பண்பாம் உளப்பண்பை அளப்பார் யாரோ?

தருமத்தைத் தருமமெனக் கண்ணன் வேண்டத்
தாரையிட்டு முகமலர்ந்து கன்னன் ஈந்தான்
குருதிவெள்ளங் கொப்பளிக்கப் புரளுந் துன்பக்
குற்றுயிரின் உளப்பண்புக் கொள்கை காணீர்
தருமத்துக் கெல்லையிடத் தக்கா ருண்டோ
தருமத்தோர் தம்முயிருந் தருமஞ் செய்வார்
பெருமக்கள் இவரன்றோ உலகம் போற்றும்
பேரறத்தின் பெருமையெவர் பேச வல்லார்.

பார்த்தனுக்குப் போரறத்தைக் கண்ணன் சொல்லிப்
பகைமாய்த்துப் பாரதத்தைக் காக்கச் செய்தான்
போர்த்தமயிர்க் கூச்செறியப் பொருமி ஏங்கப்
புண்ணியப்பொற் காந்திமகான் பூமி தன்னில்
கூர்த்தபகை தலைகுனிந்து கும்பிட் டோடக்
குணங்கூர்ந்த சாந்தியறம் புதுக்கிச் சென்றார்
பூத்தபல தருமங்கள் புரிந்தார் முன்னோர்
பூரிக்குந் தருமப்பூம் பாவை வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருளப் பண்பினிலே உயிர்ப்புக் கொண்டு
உலகினிலே அறம்பூத்தோர் உருவங் காட்டும்
திருடுவதால் அழுக்காற்றால் தீக்கண் ணோக்கால்
தீச்சொல்லால் வரும்இன்ப மயக்கம் பின்னால்
பெருகுமாந் துன்பமோர் நெருப்புக் காடாம்
பிறவியெல்லாம் பின்தொடர்ந்து கொல்லுங் கூற்றாம்
திரும்பிஉயிர் செலுமிடத்துந் தேடித் தேடிச்
சிற்றுயிரைக் காக்குமறச் சிறப்பென் சொல்வேன்.

நல்லறத்தை வள்ளுவனார் நமக்குச் சொன்னார்
நாளைக்குச் செய்வமென்றால் நமன் விரும்பான்
வல்லபெருஞ் செல்வமென்றுங் கல்வி யென்றும்
மாநிலத்தே தலைவரென்றும் மகான்க ளென்றும்
மல்லரென்றும் மதனென்றும் ஜாதிக் கார
மகனென்றும் மதித்துநமன் விடவே மாட்டான்
புல்லுடலம் விழுமுன்பே புலவர் பாடும்
புகழறங்கள் செய்தின்பம் புசிப்போம் வாரீர்!

அறஞ்செய்வோர் கீழிருந்தும் மேலோர் மேலோர்
அறஞ்செய்யார் மேலிருந்துங் கீழோர் கீழோர்
அறஞ்செய்வோர் வறுமையெல்லாம் ஆக்கம் ஆக்கம்
அறஞ்செய்யார் செல்வமெல்லாம் ஏக்கம் ஏக்கம்
அறஞ்செய்வோர் துன்பமெல்லாம் இன்பம் இன்பம்
அறஞ்செய்யார் இன்பமெல்லாந் துன்பந் துன்பம்
அறஞ்செய்வோர் எல்லோருந் தேவர் தேவர்
ஆதலினால் அறஞ்செய்வோம் வாரீர்! வாரீர்!!

காக்கையினங் குருவியினம் எங்கள் ஜாதி
கவிபாடிப் பாரதியார் கலத்தல் காணீர்
தாக்குண்டு வறுமையிலே தவித்த போதும்
தமிழின்பக் கவிபாடித் தருமஞ் செய்தார்
காக்கவோர் தெய்வமுண்டு கலங்க வேண்டாம்
காசினியில் அறஞ்செய்தோர் கலங்க மாட்டார்
ஊக்குதடா! அவ்வின்பம் உண்மை யின்பம்
ஓங்குகபுத் தாண்டினிலே உலக மெங்கும்.

(கவியரங்கம் – இலங்கை வானொலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எழில் மட்டக்களப்பு"

சித்திரப் பசும்பொன் னாடு செந்தமிழ்ப் பண்பு நாடு
மெத்தநல் விசை எடுத்து மீனினம் பாடும் நாடு
வித்தக விபுலானந்தச் சிலம்பு யாழ் ஒலிக்கும் நாடு
நித்தமும் விருந்து செய்யும் நீர்மையால் உயர்ந்த நாடு!

பார்த்தவர் பசியை ஓட்டப் பால்பழம் படைத்த நாடு
ஆர்த்துநல் லருவி பாடும் அணிவயல் உழவர் நாடு
கூத்தொடு வசந்தன் காதல் கூர்கவி தெம்மாங் கெல்லாம்
ஏத்திடக் காணும் நாடு எழில்மட்டு நகர்ப்பொன் னாடு!

மட்டு நகர்த்தாய் மணிக்குயிலாள் மானம் எங்கள் மண்ணுரிமை
வட்டக் களரிக் கூத்துப்போர் வாள்விற் பயிற்சி நமக்குண்டு
கொட்டும் வீர முரசதிரக் குமுறும் பாட்டுப் பரணியுண்டு
எட்டற் கரிய இலட்சியத்தோ டெந்தாய் மடியில் தவழ்ந்தவர் நாம்!

அச்சம் கீழோர் ஆசாரம் ஆண்மை மேலோர், கேண்மையடா!
வச்சி ரத்தோள் வீரவர லாற்றுச் செல்வம் வாய்த்தவர்நாம்
மெச்சும் எங்கள் தாய்மண்ணின் விளைச்சல் பெருக்கும் பாட்டாளி
கச்சை கட்டி வெளிக்கிட்டால் காணிமுழுதும் பொலிபொலியோ!

வீச்சுத் தோணிக் கடல்குளித்து வீரச் சுறாமீன் பிடித்தடக்கும்
மாச்சல் அறியா மட்டுநகர் மண்ணைக் காக்கும் மறவர்கள்நாம்
ஓச்சும் செங்கோற் குறளாட்சி உணர்ச்சி படைத்த மக்களெங்கள்
பேச்சி னிக்கும் மட்டுநகர்ப் பெரியம் மாவின் தமிழின்பம்!

வாய்த்த மாகா ணாட்சியிலே வளர்ப்போம் மட்டு நகர்ச்செல்வம்
பேய்த் தனப்பேச் செமக்கில்லை பேறாம் ஆக்கம் பெருக்கிடுவோம்
காய்த்த மரங்கல் லெறிபட்டுங் கனிகள் சொரியக் காண்கின்றோம்
ஓய்ச்ச லின்றி நாம்உழைப்போம் 'உள்ள தும்நல் லதும்' பயில்வோம்.

ஒற்று மைக்கோர் வித்திட்ட உணர்ச்சிப் பாட்டுப் பாரதியை
பற்றிப் பற்றி நாம்பயின்று பட்டிக் காட்டைப் பட்டினம்போல்
சுற்றிப் பார்க்குந் தொழில்வளங்கள் சோரா மாரி எனப்படைப்போம்
சற்றுப் பொறுத்துப் பாருங்கள் கொற்றச் சங்கம் முழங்குதுகேள்!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அறிமுக உரை

மண்டூர்க் கவிஞர் மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களுக்கு அறிமுகம் தேவையில்லை. இவர் நாடறிந்த நற்கவிஞர். மட்டக்களப்புத் தமிழகத்தின் இலக்கிய வரலாற்றிலே, மண்டூர் முக்கியமான ஓர் இடத்தினை வகித்துவருகிறது.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதவித்துவான் வி. சீ. கந்தையா, சைவமர்மணி வி. விஸ்வலிங்கம், கல்வி நெறியாளர் ப. சந்திரசேகரம், கல்வி நெறியாளர் கோ. கோணேசபிள்ளை முதலிய சான்றோரை ஈன்று பெரிதுவந்து நிற்கும் பழம்பதியாம் மண்டூர், கவிஞர் சோமசுந்தரம்பிள்ளையையும் ஈன்று பெருமை சேர்த்திருக்கிறது.

சோமசுந்தரம்பிள்ளை அவர்கள், பொலிஸ் தலைமையாக விளங்கிய தியாகப்பர் - முருகப்பன் அவர்களுக்கும், கந்தப்பர் - அபிராமி அவர்களுக்கும் 1922-09-11ல் மகனாகப் பிறந்தார்.

கவிதை புனைந்திடும் ஆற்றல் இயல்பாகவே அமையப் பெற்றிருந்த சோமசுந்தரம்பிள்ளையை, இவரது உறவினர்களாகிய புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, பண்டித வித்துவான் வி. சீ. கந்தையா ஆகியோரது தொடர்பு வெளி உலகுக்கு அறிமுகம் செய்துவைக்க உதவியது.

கவிஞரவர்கள் வித்துவசிரோமணி சி. கணேசையர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வித்துவான் ந. சுப்பையபிள்ளை, வித்துவான் க. வேந்தனார், பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, ஸ்ரீலஸ்ரீ சாமிநாதத்தம்பிரான் முதலிய யாழ்ப்பாணத் தமிழகத்து அறிஞர் பெருமக்களைச் சந்தித்து, அவர்களின் அன்பினைப் பெற்றுக்கொண்டார்.

சோமசுந்தரம்பிள்ளையின் கவிதைகள் வீரகேசரி, ஈழகேசரி, தினகரன் முதலிய இதழ்களையும், மாத சஞ்சிகைகளையும், விசேட மலர்களையும் அலங்கரித்துள்ளன. இவரது கவிதைகளிற் காணப்படும் இயற்கை வருணனைகளும், சீரிய கற்பனைகளும் சங்கச் சான்றோரை நம் கண்முன்னே கொண்டுவருவனவாய்த் திகழ்கின்றன.

நாட்டுக்கூத்து, நாட்டுப்பாடல் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள இவர் வடமோடி, தென்மோடிக் கூத்துககள் பல வற்றை ஆக்கி அரங்கேற்றித் தமது முத்திரையைப் பதித்துள்ளார்.

மட்டக்களப்பு கலாசாரப் பேரவை ''கவிமணி'' என்னும் பட்டத்தையும், இந்து சமய, இந்து கலாசார அமைச்சு ''புலவர் திலகம்'' என்னும் பட்டத்தையும் வழங்கியுள்ளது. எனினும் ''மண்டூர்க் கவிஞர்'' என்று அழைக்கப்படுவதையே இவர் பெரிதும் விரும்புகிறார்.

இவர் இயற்றிய அம்பாறை விநாயகர் நான்மணி மாலை (1952), திருமண்டூர் முருகமாலை (1952) ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளபோதிலும் இவரது கவிதைகள் அடங்கிய முதல் நூல் ''கவி உள்ளம்'' என்னும் இந்நூலேயாம்.

**வித்துவான் க. செபரெத்தினம்.**

சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

Composed by S. Singarajah.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org